
# கலாதரம்

## 2018



கலாசாரப் பேரவை,
வலி.தென்மேற்கு பிரதேச செயலகம்,
சண்டிலிப்பாய்.

# கலாதரம்

**கலாசாரப் பேரவை**
**வலி.தென்மேற்கு பிரதேச செயலகம்,**
**சண்டிலிப்பாய்.**

**2018**

| | | |
|---|---|---|
| மலர் | : | கலாதரம் - 2018 |
| வெளியீடு | : | வலி.தென்மேற்கு பிரதேச கலாசாரப் பேரவை<br>பிரதேச செயலகம்,<br>சண்டிலிப்பாய். |
| நிதிஅனுசரணை | : | வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |
| மலராசிரியர் | : | திரு.ஈ.குமரன்<br>சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை<br>யாழ்.பல்கலைக்கழகம். |
| பதிப்பு | : | 2018 |
| பக்க அளவு | : | B5 |
| ப.எண்ணிக்கை | : | xi - 90 |
| பிரதிகள் | : | 300 |
| கடதாசி | : | 70 gsm |
| அட்டைப் படம் | : | சுப்பிரமணியம் பத்மநாதன் (ராஜன்) |
| அச்சுப்பதிப்பு | : | வைரஸ் பிறின்டேர்ஸ்.<br>K.K.S Road, இணுவில்.<br>தொ.பே. 021 224 1815 . |

| | | |
|---|---|---|
| Name | : | Kalatharam |
| Published by | : | Vali South West Cultural Council<br>Divisional Secretariat<br>Sandilipay. |
| Sponsored by | : | Department of Cultural Affairs - Northern Province |
| Editor | : | Mr.E.Cumaran<br>Senior Lecturer, Department of Tamil,<br>University of Jaffna. |
| Size | : | B5 |
| Pages | : | xi - 90 |
| Number of Copies | : | 300 |
| Paper | : | 70 gsm |
| Cover Design | : | Subramaniyam Pathmananthan (Rajan) |
| Printers | : | Virus Printers,<br>K.K.S Road, Inuvil<br>T.P 021 224 1815 |

# கலாதரம் - 2018

**ஆலோசனையும் வழிகாட்டலும்**

**திருமதி. யசோதா உதயகுமார்** (பிரதேச செயலாளர்)
**திருமதி நேசரட்ணம் செல்வகுமாரி** (உதவிப்பிரதேச செயலாளர்)

**இதழாசிரியர்**

**திரு.ஈ.குமரன்** (சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.)

**மலர்க்குழு**

**திருமதி. தக்சாயினி செல்வகுமார்**, (கலாசார உத்தியோகத்தர்)
**திரு. வேலாயுதம் சிவராஜா**, (சமூக சேவை உத்தியோகத்தர்)
**திரு. த.குணத்திலகம்**, (பிரதேச கலைஞர்)
**திரு. ந.சத்தியவேந்தன்**, (ஆசிரியர்)
**திருமதி. மதிவாணி விக்னரூபன்**, (உதவிப்பணிப்பாளர் நடனம்)
**திரு. வேலுப்பிள்ளை தர்மபாலன்**, (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)
**திரு. ந.தனுசுயன்**, (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

# வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச கீதம்

**பல்லவி**

பல்புகழோடு எங்கள் நெஞ்சிலே வாழ்கின்ற
பண்பு வலி.தென்மேற்கு பிரதேச அன்னையே
(பல்புகழோடு)

**அனுபல்லவி**

சொல்லும் சரித்திரத்தைச் சேர்ந்த திருக்கோவில்கள்
சூழ்ந்த நன்னீர் நிலைகள் செம்மையெழில் பூத்தவளே
(பல் புகழோடு)

**சரணம்**

செந்தமிழ்ப் புலவோனாம் மயில்வாகனமும் நல்ல
சோமசுந்தரன் என்னும் தங்கப் புலவனுமே
தந்தை கலையரசர் சான்றோர் அறிவரசர்
தேர்ந்த திறனாலே சீர்புகழ் உற்றவளே
(பல்புகழோடு)

திகழும் கமத்தொழிலும் சிறந்த கடல் உழைப்பும்
சேர்ந்த தொழில் பலவும் சமய சமரசமும்
புகழும் பெருமையும் பொலிந்த கல்லூரிகளும்
நிறைந்த தொன்மையும் நிலையாகப் பெற்றவளே
(பல்புகழோடு)

**"கலாபூஷணம்" – நவாலியூர் நடேசன்.**

# சர்வதேச இந்துமத
# குருபீடாதிபதி.சிவஸ்ரீ.ச.மஹேஸ்வரக்குருக்கள் அவர்களின்
# ஆசிச்செய்தி.

பல்புகழோடு பாரினிலே எங்கள் நெஞ்சினிலே நிறைந்து வாழ்கின்ற பண்பும் பணிவும் நிறைவுமுள்ள வலி.தென்மேற்கு பிரதேச அன்னையின் பூரணப்படுத்தப்பட்ட ஆவணமாக விளங்கி, இரண்டாவது முறையாக வெளிவரும் "கலாதரம்" எனும் மலருக்கு ஆசிச்செய்தி தருவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

நகரம், பட்டணம், ஊர், கிராமம் சார்ந்த அனைத்து தகவல்களையும் வரையறை செய்து, அங்கீகரித்து அரசபணியாக பண்பாட்டின் விழுமியங்களைத் தாங்கி "கலாதரம்" மலர் வெளிவருவது சிறப்புக்குரியது. யாழ்ப்பாணத்தின் வலிகாமம் தென்மேற்கில் அமைந்துள்ள சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் அனைத்து பிரிவுகளிலும் பணியாற்றும் சகல துறைசார் அதிகாரிகளும் பணியாளர்களும் இந்நூல் வெளிவருவதற்கு அரும்பாடுபட்டு உழைத்துள்ளனர். இந்நூலை வெளியிடும் நல்லுள்ளங்களை பாராட்டுகின்றோம்.

பிரதேச செயலகம் சார்ந்த மலராக இந்நூல் வெளிவந்தாலும் வரலாறு, பண்பாடு, சமயம், பொருளாதாரம், கலைகள், ஊர்ப்பெரியவர்களின் சமயப்பணி, கல்விப்பணி, அறப்பணி, மருத்துவப்பணி, சமூகப்பணி, உயரிய வாழ்வுமுறை என்பன போன்ற மறைந்துள்ள பல தகவல்களையும் திரட்டி பிரதேசம் சார்ந்த ஒரு வரலாற்று நூற்கலைக் களஞ்சியமாக "கலாதரம்' அமையப்பெற்றிருக்கின்றது. முன்னர் வெளிவந்த "கலாதரம்" மேற்குறிப்பிட்ட செய்திகளை தாங்கிய அதேவேளையில் இம்முறை வெளிவரும் "கலாதரம்" நவீனத்துவம் பெற்று மேலும் மெருகூட்டி வெளிவருவது வரவேற்கத்தக்கது. இம்முயற்சிகளை எதிர்காலத்தவர்கள் அறிவதற்கு வழிசமைத்ததோடு மட்டுமன்றி ஆய்வுக்குரிய விடயங்களை அடையாளப்படுத்தி இம்மலர் வெளிவந்து புதிய சிந்தனையை ஏற்படுத்துகிறது.

"கலாதரம்" வெளிவருவதற்கு அயராது பாடுபட்ட மலர்க்குழு உட்பட்ட அனைத்து நல் உள்ளங்களுக்கும் அவர்கள் பணிமேன்மேலும் சிறக்க சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகையை வேண்டுகின்றோம்.

சுபம்

**சிவஸ்ரீ.ச.மஹேஸ்வரக்குருக்கள்**
**சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம்,**
**சுதுமலை.**

# இளவாலை மறைக்கோட்ட முதல்வரின் ஆசிச்செய்தி

வலிதென்மேற்கு பிரதேச செயலகத்தினால் வெளியிடப்படும் "கலாதரம்" மலரிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

வலிதென்மேற்கு பிரதேசமானது யாழ் குடாநாட்டில் உள்ள ஏனைய பிரதேசங்களைப் போலவே கலை, பண்பாடுகளுடன் வரலாற்று சிறப்புக்களை தன்னகத்தே கொண்டு காணப்படுகின்ற பிரதேசமாக விளங்குகின்றது. எனவே எமது பிரதேசத்தின் கலை, பாண்பாடுகளினை இனிவரும் சந்ததியினர் அறிந்து கொள்ளும் வகையில் ஆவணப்படுவத்துவது அவசியமானதாகும். அந்த வகையில் 'கலாதாரம்" மலரானது கலாசார ஆவணப்படுத்தலுக்கு முக்கிய ஆதாரமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

கடந்த காலங்களில் வாய்மொழி மூலம் எடுத்துரைக்கப்பட்ட கலை, கலாசார விழுமியங்களினை ஆவணப்படுத்துவதற்கான வசதிவாய்ப்புக்கள் மிக அரிதாக காணப்பட்டமையினால் காலப்போக்கில் அழிவடையும் நிலை தோன்றியுள்ளது. தற்போது நவீன தொழிநுட்ப வசதிகள் மேம்பட்டு காணப்படும் இன்றைய காலகட்டத்தில் இவற்றை ஆவணப்படுத்துவது எமது பொறுப்பாகும்.

இப் பாரிய பொறுப்பினை 'கலாதாரம்' மலர் தாங்கி வருவது பாராக்குரியதாகும். இப்பெரும் பணியினை மேற்கொண்ட பிரதேச செயலக மலர் குழுவினருக்கு உளம் கனிந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு இறைவனின் அருளும் ஆசீரும் எந்நேரமும் இருப்பதாக.

**அருட்பணி ம.யேசுரட்ணம்**
**இளவாலை மறைக்கோட்ட முதல்வர்**
**புனித அன்னாள் ஆலயம்**
**இளவாலை**

# கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

தற்போது ஏற்பட்டு வரும் நவீன தொழிநுட்ப சாதனங்களின் வளர்ச்சியால் பல கிராமியக்கலைகள் அழிவடைந்து வருகின்றன. இவ்வாறான சூழலில் அழிவடைந்து செல்லும் எமது கலை, கலாசார பண்பாடுகளை கட்டிக்காக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். எமது கலை, பண்பாடுகளை கட்டிக்காத்து அதன் வடிவம் மாறாது அதன் தோற்றங்கள் திரிபுபடாமல் எமது அடுத்த சந்ததியிடம் கையளிக்க வேண்டியது எம் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டிருக்கும் மிகப்பெரும் கடமையாகும். அந்தக் கடமையையும் பொறுப்பையும் செவ்வனே ஆற்றும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலருக்கும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேவேளை வலி தென்மேற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் காணப்படும் கலை, பண்பாடு சார்ந்த விடயங்களை கொண்டு ஆண்டு தோறும் வெளிவரும் "கலாதரம்" மலர் சிறப்பாக வெளிவர எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கலாநிதி க.சர்வேஸ்வரன்,**
**அமைச்சர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரம்.**
**23.08.2018**

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் தன்னகத்தே கொண்டமைந்த பண்பாட்டு, பாரம்பரிய விழுமியங்களை அனைவரும் அறிந்து பயன்பெறும் வகையில் வெளியீடு செய்யும் "கலாதரம்" என்னும் பிரதேச மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். வலிகாமம் தென்மேற்கு பிரதேசசெயலகம் வயலும் வயல் சார்ந்த மருதநிலம் மற்றும் கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலங்களையும் கொண்டமைந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க பிரதேசம் எனக்குறிப்பிடலாம்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், சீரணி நாகம்மாள் ஆலயம், பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை ஆலயம் மற்றும் சங்கமித்தை வருகைதந்த சம்பில்துறை ஆகிய பிரதேசங்களின் ஆலயங்கள் மிகவும் தொன்மையான வரலாற்றுச் சிறப்புக்களை உடையவை.

யாழ் மாவட்ட மக்களுக்கு வைத்திய சேவையினை முதல் முதலில் வழங்கிய பெருமையும் இப் பிரதேச மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனையினையே சாரும். இது மட்டுமல்ல கல்வி, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுக்கு சிறப்பான முக்கியத்துவத்தினை வழங்கும் பிரதேசமாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கது.

இப் பிரதேச சிறப்புக்களை வெளிக்கொணரும் நோக்கில் இம்முறை வெளியீடு செய்யப்படும் கலாசார சிறப்பு மலரில் கலை பண்பாட்டு பாரம்பரியங்கள், இசையின் மகத்துவம், தற்காப்புக் கலை, சடங்குகள் சம்பிரதாயங்களும், வைத்திய இலக்கிய படைப்பாளர்களின் சிறப்புக்கள், வாழ்வியல் மருத்துவம் போன்ற பல விடயங்களைத் தன்னகத்தே கொண்டு வெளிவருவது சிறப்புக்குரியது.

சிறந்த கலைப்பணியை ஆற்றும் "கலாதரம்" இதழ் சிறப்புற கவிபரப்ப எல்லா வழிகளிலும் உழைத்த பிரதேச செயலாளர், மலர்க்குழுவினர் என அனைவரையும் பாராட்டி, "கலாதரம்" இதழ் விரிக்க என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**நா.வேதநாயகன்**

**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,**

**மாவட்டச் செயலகம்,**

**யாழ்ப்பாணம்.**

# வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சுச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

வலி தென்மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் வருடந்தோறும் வெளியிடப்படும் "கலாதாரம்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

"கலாதரம்" சண்டிலிப்பாய் பிரதேசத்தின் கலை, கலாசார, வாழ்வியல், தொன்மைகள் மற்றும் நாட்டுப்புறவியல் சார்ந்த பலவிடயங்களை தாங்கி வெளிவருவதுடன் சான்றுப்படுத்தக்கூடிய ஆவணமாக அமையும் என்பதிலும் ஐயமில்லை.

பிரதேசத்தின் அபிவிருத்தி, பொருளாதாரம், கல்வி, மருத்துவம் கலைத்துறை சார்ந்த முக்கிய அடைவுகளையும் சாதனைகளையும் ஆவணப்படுத்தி அடுத்த சந்ததிக்கு கையளிக்கும் முக்கிய வரலாற்று பதிவாக பிரதேச மலர்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பிரதேச மக்களின் ஆற்றல்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டிய கடப்பாட்டை பிரதேச செயலகங்கள் கொண்டிருக்கின்றன.

தமிழர் பண்பாடுகளையும் பாரம்பரியங்களையும் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடன் இச்செயற்பாட்டினை முன்னெடுத்துவரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் இம் மலரானது தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**சி.சத்தியசீலன்**
**செயலாளர்.**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.**
**வடமாகாணம்.**

# வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

வலிதென்மேற்கு பிரதேசமானது பெரும்பகுதி வளமான நிலவளத்தையும், ஒரு பகுதி கடல்வளத்தினையும் கொண்டமைந்த பிரதேசமாகும் புகழ்பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், சீரணி நாகபூசணி அம்மன் ஆலயம், மற்றும் மானிப்பாய் அந்தோனியார் ஆலயம், கிறீன் வைத்தியசாலை என்பவற்றை கொண்டு விளங்குகின்றது. இப்பிரதேச கலைஞர்கள், கலை ஆர்வலர்களால் உருவாக்கப்பெற்ற பிரதேச கலாசாரப் பேரவை வெளியிடும் "கலாதரம்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பிரதேசத்திற்குரிய கலை, வரலாறு, தொல்லியல், ஆன்மீக பாரம்பரியங்களை அழியவிடாது அவற்றை பாதுகாத்து ஆவணமாக்கவேண்டியது எமது ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். அந்தவகையில் பிரதேச கலைஞர்கள், ஆய்வாளர்களிடமிருந்து ஆக்கங்களைப் பெற்று பிரதேசத்தின் பண்பாட்டு மலர்ச்சி, ஆன்மீகம் மற்றும் பொருளாதாரம், கல்வி, சமயம் போன்ற இன்னோரன்ன விடயங்களை உள்ளடக்கிய மலராக 'கலாதரம்' வெளிவருகின்றது. பிரதேச கலாசாரப் பேரவையின் இம் முயற்சிக்கு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அனுசரணை வழங்கி ஊக்குவித்து வருகின்றமை சிறப்புக்குரியது.

இன்றைய காலகட்டத்தில் இளைஞர்களிடையே வாசிப்பு ஆர்வம் குறைந்து வரும் சூழலில், இவ்வாறான மலர்கள் மறுபடியும் வாசிப்பு ஆர்வத்தை தூண்டும் என்பதால் இம்மலர் வெளியீடு வரவேற்கத்தக்கது. இம்மலர் வெளியீட்டுக்கு முயற்சி எடுத்த பிரதேச செயலாளர் மற்றும் கலாசார உத்தியோகத்தர், கலைஞர்கள், ஆய்வாளர்கள் அனைவரையும் பாராட்டி நிற்பதுடன், "கலாதரம்" கலைவரலாற்று நூலாக திகழவேண்டுமென வாழ்த்து தெரிவிக்கின்றேன்.

**அபிராமி பாலமுரளி**
**உதவிப்பணிப்பாளர்,**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.**

# பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

ஈழவளத்திருநாட்டின் வடபாலமைந்த யாழ்நகரின் பிரதேசசெயலர் பிரிவுகளுள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவும் ஒன்றாகும். இப்பிரதேச செயலர் பிரிவானது பல வளங்களையும் கலாசாரப் பராம்பரியங்களையும் தன்னகத்தே கொண்ட ஒரு பிரிவாக விளங்குகின்றது. இப்பிரதேசத்தின் கலை, கலாசாரப் பாரம்பரியங்களைப் பேணுவதற்கும் அவற்றை விருத்தி செய்வதற்கும் கலைஞர்களை ஊக்குவிப்பதற்கும் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையினால் ஆண்டுதோறும் கலாசாரவிழா மிகவும் சிறப்பாக நடாத்தப்படுவது வழமையாகும். அவ்வகையில் 2018 ஆம் ஆண்டிற்கான கலாசார விழா வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையுடன் இன்று மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. இக்கலாசார விழாவினை முன்னிட்டு 'கலாதாரம்' என்ற பிரதேசகலாசார மலர் வெளியிடப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

இக்கலாசார மலரானது பண்பாட்டு / கலாசார விடயங்கள், பிரதேசம் சார்ந்த விடயங்கள், கவிதைகள், மருத்துவம் சார்ந்த விடயங்கள், மதம், மொழிசார்ந்த விடயங்கள் போன்ற பல பயனுள்ள விடயங்களை உள்ளடக்கி வெளியிடப்படுகின்றமை முக்கிய அம்சமாகும். ஓர் பிரதேசத்தின் கலை, கலாசாரம், பாரம்பரியம் என்பன பாதுகாக்கப்படுதல் அவசியம் என்பதுடன் அவற்றை அழியாத பாதுகாப்பதற்கும் எதிர்கால சந்ததியினர் அவற்றை அறிந்துகொள்வதற்கும் ஆவணப்படுத்துதல் வேண்டும் என்பது காலத்தின் தேவையாக உள்ளது. இவ்வகையில் இன்று நடைபெறும் கலாசார விழாவில் 'கலாதரம்' மலர் வெளியிடுவதில் பெருமகிழ்வடைவதுடன் எனது வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**உ.யசோதா**
**பிரதேச செயலர்,**
**பிரதேச செயலகம்,**
**சண்டிலிப்பாய்.**

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து.

வலி தென்மேற்குப் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையினால் வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையுடன் வெளியிடப்படும் "கலாதரம்" மலரினை இரண்டாவது தடவையாகவும் இதழாசிரியராகப் பணியாற்றி வெளிக்கொணர்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இந்த வாய்ப்பினை அளித்த அனைத்துள்ளங்களுக்கும் எனது நன்றிகள்.

"கலாதரம்" இம் முறையும் வலி தென்மேற்குப் பிரதேச செயலக எல்லைக்குள் வாழும் கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், அறிஞர்கள் என்போரின் அரிய ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்றது. பிரதேசம் சார்ந்த வரலாறு, அபிவிருத்தி, பொருளாதாரம், சமயம், தொழிற்றுறைகள், மருத்துவம், கலை, இலக்கியம் முதலானவை துறைகள் சார்ந்த பெறுமதி மிக்க கட்டுரைகள் துறைசார் அறிஞர்களிடமிருந்து பெறப்பட்டு இவ்விதழில் சேர்க்கப்பட்டுள்ளன. கவிதை சிறுகதை என்னும் ஆக்க இலக்கியப் படைப்புக்களுக்கும் இம் மலரில் இடமளிக்கப்பட்டுள்ளது. அறிவு வேட்கையும் தேடலும் நிறைந்த மாணவர்கள், வாசகர்கள் சுவைஞர்கள் என்போருக்கு இம் மலர் பெருவிருந்ததாக அமையும் என எதிர்பார்க்காலம்.

"கலாதரம்" வலி தென்மேற்குப் பிரதேசம் சார்ந்த பல்துறை ஆவணப் பதிவாக அமைய வேண்டும் என்பதே கலாசாரப் பேரவையின் நோக்கமாகும். அதற்கேற்ற வகையில் பிரதேசம் சார்ந்த ஆய்வுகளுக்கும் படைப்பாக்கங்களுக்கும் ஆவணப்படுத்தலுக்கும் இம் மலரில் அதிக இடமளிக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் எமது பிரதேசத்தின் வரலாற்றுத் தொன்மை, பெருமை, தனித்துவம், சிறப்பு என்பன அடையாப்படுத்தப்படுவதுடன் எதிர்காலச் சந்ததியினரும் அவற்றைப் பற்றி அறிந்து கொள்ளுவதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது.

மேலும் எமது பிரதேசத்தில் வாழ்கின்ற எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஆய்வாளர்களுக்கான களத்தினை உருவாக்கித் தரல் வேண்டும் என்ற உயரிய நோக்கமும் கலாசாரப் பேரவைக்கு உண்டு அந்த அடிப்படையிலேயே மலருக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன. குறிப்பாக இளம் எழுத்தாளர்கள் இம்மலரில் தங்களது ஆக்கங்களை அதிகம் அளித்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் படைப்பாற்றலும் ஆய்வுத்திறனும் எமது பிரதேச மக்களிடம் மேலும் செழிப்புறும் என்பதில் ஐயமில்லை. எழுத்தாளர்களும் ஆய்வாளர்களும் வாசகர்களும் காட்டும் ஆர்வமும் ஆதரவும் மலரின் தொடர்ச்சியான வரவுக்கும் கனதிக்கும் அத்திவாரமாக அமையும் என்பது உறுதி.

இம் மலரினைப் பெற்று, ஆர்வமுடன் வாசித்து இது சம்பந்தமான உங்கள் கருத்துக்களைக் எம்முடன் பகிர்ந்து கொள்வது பயனுடையதாகும். கலாதரம் எதிர்காலத்தில் பொலிவுபெற ஆரோக்கியமான திறந்த உரையாடல்கள் வழிகாட்டும் என உறுதியாக நம்புகின்றோம்.

இம் மலராக்கத்தில் எனக்குக் கைகொடுத்த அனைவருக்கும் எனது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

ஈ.குமரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# இதயத்துடன் நன்றிகள்

வலி தென்மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையானது கலாசாரப் பெருவிழா - 2018 நிகழ்வில் கலாதரம் இரண்டாவது மலரினை வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்வடைகின்றது. எமது பிரதேசத்தின் பண்பாட்டுப் பாரம்பரியங்களை, கலை கலாசார நிகழ்வுகளை ஆவணப்படுத்துதல், பதிவு செய்தல் என்பதும் இவற்றை அடுத்த தலைமுறைக்கு கையளித்தல் என்பதும் எமது இன்றியமையாத கடமைகளில் ஒன்றாகும்.

இந்நிலையில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினூடாக ஒதுக்கப்பட்ட நிதியில் இந் நூல் வெளிவருவதுடன் தொடர்ந்து வரும் காலங்களில் இம் மலர் மலர்ந்து மணம் வீச வேண்டும் என்பதும் எனது அவாவாகும்.

எனவே "கலாதரம்" பிரசவத்திற்கு வழிசமைத்த வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கௌரவ கல்வி அமைச்சர், செயலாளர், மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் என்போருக்கு எனது பணிவான நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.

மேலும் இம் மலரானது சிறப்பாக வெளிவருவதற்கு அனைத்து ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய கலாசாரப் பேரவைத் தலைவர், பிரதேச செயலாளர் அவர்களும், அவ்வப்போது ஊக்கங்களை வழங்கியுதவிய உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் கணக்காளர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோருக்கும் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், வழிகாட்டல்களை வழங்கி, பங்காளிகளாக இருந்த அனைத்து கலாசாரப்போரவை உறுப்பினர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். தொடர்ந்து கலாதரம் மலரிற்கான ஆசிச் செய்திகளை வழங்கிய சமய பெரியார்களுக்கும், வாழ்த்துச் செய்திகளை வழங்கிய உயர் அதிகாரிகளுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றேன். கட்டுரைகளையும் ஆக்கங்களையும் வழங்கி எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த கட்டுரையாளர்களுக்கும் நன்றிகளை நவில்கின்றேன்.

இம் மலருக்கான அட்டைப்படத்தினை வரைந்துதவிய திரு ராஜன் அவர்களுக்கும் இவ்வேளை நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் இம் மலரிற்கான இதழாசிரியராக உழைத்து அர்ப்பணிப்புடன் பணியாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் அவர்களுக்கும் எனது மிக்க நன்றிகளைப் பகிர்கின்றேன்.

இறுதியாக இம் மலரினை சிறப்பாக உரிய நேரத்தில் பதிப்பித்து உதவிய இணுவில் "வைரஸ் பிறிண்டேஸ்" நிறுவனத்தினருக்கும், இக் கடமையில் என்னுடன் இணைந்து பணியாற்றிய கலாசார பேரவை உறுப்பினர்கள், கிராம உத்தியோகத்தர்கள், எமது கலாசாரப்பிரிவு உத்தியோகத்தர்கள், அனைத்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவரிற்கும் எனது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மற்றும் நன்றிகூறத் தவறிய அனைத்து உள்ளங்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகளை கலாசார பேரவையின் சார்பிலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இம்மலரில் இடம்பெறும் ஆக்கங்களின் கருத்துக்களுக்கு அவ்வாக்கத்தின் ஆசிரியர்களே பொறுப்பாவர்.**

**தக்சாயினி செல்வகுமார்**
**கலாசார உத்தியோகத்தர்**
**செயலாளர் கலாசாரப் பேரவை**
**வலி தென்மேற்கு, பிரதேச செயலகம்**
**சண்டிலிப்பாய்.**

## பிரதேச செயலாளர்




**திருமதி. யசோதா உதயகுமார்** S.L.A.S - I

B.Sc (Hons) - University of Jaffna, P.G.Dip in Public Administration - Sri Jevarthanapura,
Master in Art in Public Management - International University of Japan

## மலரின் உள்ளே .......................


| | | |
|---|---|---|
| 01. | சுற்றுலாத்துறையும் பிரதேச அபிவிருத்தியும் | 01 |
| 02. | மனதில் நிறைந்த சண்டிலிப்பாய் | 08 |
| 03. | உடல் உளவள ஆரோக்கியமும் சமுதாய வளர்ச்சியும் | 11 |
| 04. | சமூகத்தை வழிநடத்தும் கலைகளும் இலக்கியங்களும் | 16 |
| 05. | மனித வாழ்வில் இசையின் மகத்துவம் | 18 |
| 06. | ஆலமரத்துப் பச்சைக் கிளி (சிறுகதை) | 21 |
| 07. | பல்லாற்றல் வாய்ந்த படைப்பாளி - ஐ சாந்தன் | 25 |
| 08. | தற்காப்புக் கலைகள் | 29 |
| 09. | முதுமையே முதுசப் பொக்கிஷங்கள் | 32 |
| 10. | வித்தியாமான சிந்தனை | 35 |
| 11. | சடங்குகளும் சம்பிரதாயங்களும் | 37 |
| 12. | எமது தாய் | 38 |
| 13. | சுதுமலை அண்ணாமலை வைத்தியர் | 39 |
| 14. | பார்க்கின்சன் நோய் பற்றி..... | 44 |
| 15. | இலவச சித்த மருந்தகம், ஆனைக்கோட்டை. | 48 |
| 16. | சலரோகமும் நரம்பியல் கோளாறுகளும் | 50 |
| 17. | எமது வாழ்வியலில் மருத்துவம் | 53 |
| 18. | எங்களூர் சில்லையூரே | 64 |
| 19. | கற்பு நிலை காத்து நிற்போம் | 66 |
| 20. | நாணயங்களின் தோற்றமும் முத்திரை நாணயமும் | 67 |
| 21. | நவாலியூர் தந்த நாடகச் செம்மல் கலையரசு க. சொர்ணலிங்கம் | 75 |
| 22. | நவாலி வடக்கு தோற்றமாரத்தடி ஸ்ரீஞான வைரவர் கோயில் | 80 |
| 23. | நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலயம் | 81 |
| 24. | வேண்டாம் போதை என நடப்போம் நல்ல பாதையில்.......... | 83 |
| 25. | கலை இலக்கியம் தேசம் | 85 |
| 26. | மாதகல் சைவாலயங்கள் | 86 |

# சுற்றுலாத்துறையும் பிரதேச அபிவிருத்தியும்

க.இராஜேந்திரகுமார்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் யாழ் மாவட்டத்தின் வலிகாமம் பிரிவில் காணப்படும் ஐந்து பிரதேச செயலகங்களுள் ஒன்றாக காணப்படுகின்றது. சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகம் என்றழைக்கப்படுவதோடு வலிகாமம் பிரிவில் காணப்படும் மற்றைய பிரதேச செயலகங்கள் வலிகாமம் வடக்கு (தெல்லிப்பளை) வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) வலிகாமம் தெற்கு (உடுவில்) வலிகாமம் மேற்கு (சங்கானை) ஆகும். சண்டிலிப்பாய் பிரதேச செயலகமானது தெல்லிப்பளை, உடுவில், சங்கானை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் பிரதேச செயலங்களை எல்லையாகக் கொண்டதோடு வடக்குத் திசையில் மாதகல் இயற்கை கடற்பரப்பையும், தெற்காக காக்கைதீவு அராலி சிறிய கடல்பரப்பையும் தனதாக்கி இயற்கையின் அழகுடன் காணப்படுகிறது. இப் பிரதேச செயலகம் 28 கிராம உத்தியோகத்தரையும் 68 கிராமங்களையும் கொண்டுள்ளது சுற்றுலாத் துறைக்கான இயற்கையின் அழகையும் வரலாற்றுச்சிறப்பு மிக்க கலாசார மரபுரிமைகளையும் கொண்டுள்ள பிரதேச செயலகங்களுள் ஒன்றாக இலங்கையின் வடபகுதியின் யாழ் மாவட்டத்தில் காணப்படுகின்றது. சுற்றுலாத்துறையானது இன்று உலகலாவிய ரீதியாக மிகவேகமாக, வளர்ச்சி பெற்று வருவதுடன் உலகின் முன்னனியில் பயணிக்கும் துறைகள் ஒன்றாக விளங்குகின்றது. இலங்கையிலும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சி 2009ம் ஆண்டின் பின் வேகமாகவும் முன்னணியிலும் வளர்ந்து வருவதை நாம் அறியக் கூடியதாகவுள்ளது. சுற்றுலாத்துறையை மேலும் வளர்க்கும் முகமாக சுற்றுலாத்துறையின் அபிவிருத்தியும் 2009ம் ஆண்டின் பின் நாடளாவிய ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது. இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப் பிரயாணிகளின் புள்ளிவிபரங்களை பார்க்கும் போது சுற்றுலாத்துறையின் வளர்ச்சி எமது நாட்டில் எவ்வாறு அதிகரித்து செல்லுகின்றது என்பதையும் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதையும் துல்லியமாக அறிந்து கொள்ளலாம். 2009ம் ஆண்டின் சுற்றுலாப் பிரயாணிகளின் எண்ணிக்கை

| | |
|---|---|
| 2009 | 447989 |
| 2010 | 654476 |
| 2011 | 855975 |
| 2012 | 1005605 |
| 2013 | 1274593 |
| 2014 | 1527153 |
| 2015 | 1798380 |
| 2016 | 2050832 |

இதனடிப்படையில் 2020ஆம் ஆண்டு இலங்கைக்கு வரவிருக்கும் சுற்றுலாப் பிரயாணிகளின் எண்ணிக்கை 4.0 மில்லியனாக எதிர்பார்க்கப்படுவதோடு அந்த

அடிப்படையில் அபிவிருத்திகளும் உரிய முறையில் திட்டமிட்டு நடைபெற்று வருகின்றன. இலங்கையில் காணப்படும் சுற்றுலா ஈர்ப்புக்கான இயற்கையும் கலாசார மரபுரிமைகளும் சுற்றுலாத்துறைக்கும் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கும் மேலும் வலுவூட்டுகின்றன. அத்தோடு இலங்கையில் காணப்படும் உலக சுற்றுலா தலங்களாக எட்டு சுற்றுலாத் தலங்கள். ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார நிறுவனத்தினால் பதியப்பட்டு இலங்கை உலக சுற்றுலாத் தலங்கள் கொண்டுள்ள நாடாகவும் காணப்படுவதும் சுற்றுலாத்துறைக்கு மேலும் பொலிவூட்டுகின்றது. இலங்கை வடபகுதியும் போதியளவு சுற்றுலா ஈர்ப்புகளை கொண்டுள்ளதோடு 2009ம் ஆண்டின் பின் சுற்றுலாப் பிரயாணிகளை அதிகம் கவரும் பிரதேசமாக காணப்படுகின்றது. அதற்கேற்ப சுற்றுலாப் பிரயாணிகளின் வருகையும் ஒப்பீட்டு ரீதியில் அதிகரித்து செல்வதையும் காணக்கூடியதாகவுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் அமைந்துள்ள பிரதேசமும் சுற்றுலா ஈர்ப்பு கொண்டதாகவே உள்ளது. இப்பிரதேச செயலகப் பரப்பில் காணப்படும் கலாசார மரபுரிமைச் சின்னங்களாக இயற்கையினதும் எமது முன்னோர்களால் கலாசார ரீதியாக தொன்று தொட்டு பேணப்பட்டு வரும் பொருள்கள், கட்டடங்கள் முதலியனவும் அமைகின்றன. அவற்றை உரிய முறையில் கையாண்டு எமது வருங்கால சந்ததியினருக்குத் தூரநோக்குடன் கையளித்தல் இன்றைய தேவைகளில் ஒன்றாக காணப்படுகின்றது. அந்த வகையில் பிரசித்தி பெற்ற கலாசார மரபுரிமைச் சின்னங்களை நோக்குவோமாயின் அவை வருமாறு அமைகின்றன.

**மாதகல் கடற்பரப்பில் காணப்படும் சம்பில்துறை இறங்குதுறை- தம்புகோளப்பட்டினம்.**

ஆதிகாலங்களில் கடற்பிரயாணங்களே பயணமார்க்கமாக காணப்பட்டதுடன் கடலில் பிரயாணிப்பவர்கள் வந்து இறங்கிய துறைகள் இலங்கையின் கடற்கரைகளில் முக்கிய பகுதிகளாக அமைகின்றன. இவ்வாறு காணப்படுகின்ற துறைகளில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பரப்பில் காணப்படும் சம்பில் துறை இலங்கையின் வலாற்றில் தடம் பதித்த துறைகளில் ஒன்றாகும். சங்கமித்த தேரணியால் புனித வெள்ளரசுக் கிளை இத்துறையினூடகவே எடுத்து வரப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அத்தோடு அத்துறை தம்புகோளப்பட்டினம் எனவும் அழைக்கப்படுகின்றது. அத்துறைமுகம் இலங்கை வாழ் மக்கள் அனைவராலும் அறியப்படுவதோடு இன்றும் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. இத்துடன் இயற்கையாக அமையப்பெற்ற மாதகல் கடற்கரை கடல்வளம் நிறைந்து காணப்படுகிறது. எமது முன்னோர்களின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் பிடித்த வாழ்வாதார தொழிலான மீன்பிடி முறைகள் இங்கு பின்பற்றப்படுவதையும் நாம் காணக்கூடியதாகவுள்ளது இயற்கையான எழிலுடன் காணப்படும் இக்கடல் பிரதேசம் வாழ்வாதார தொழிலோடு இன்றும் ஏற்றம் பெற்ற பிரதேசமாக காணப்படுகின்றது.

**காக்கை தீவு**

இதேபோல் பிரதேசத்தின் மறு எல்லையில் காணப்படுகின்ற சிறிய கடல் எல்லையாக காக்கை தீவு - அராலி கடல்பிரதேசம் பாரம்பரிய முறையிலான மீன்பிடி தொழிலை

கொண்டதாக விளங்குகின்றது. இன்றும் சிறுதோணிகளில் மீனவர்கள் சிறுகடல் உணவுகளான இறால், நண்டு போன்ற கடல் உணவுகளை பிடிப்பதை தமது வாழ்வாதார தொழிலாக இப்பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இலங்கையில் வடபகுதியின் சிறுகடல் உணவுகளாக இறால், நண்டு அனைவராலும் அறியப்பட்டதுடன் பிரசித்தி பெற்ற யாழ் உணவாகவும் இவை விளங்குகின்றன. இச்சிறு கடல் பிரதேசம் முன்னைய காலங்களில் தீவுக்கான கடல்வழிப் போக்குவரத்துக்கும் பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் அறியப்படுகின்றது. அதற்கு ஆதாரமாக துறைகளும் காணப்படுகின்றன.

### வழுக்கை ஆறு

யாழ் மாவட்டத்தில் நீரின் பயன்பாட்டிற்கும் வாழ்வாதாரத்தின் பயன்பாட்டிற்கும் எம் முன்னோர்களால் பயன்படுத்தப்பட்டு தற்போதும் பயன்பாட்டில் உள்ள நீரியல் வளமே வழுக்கையாறாகும். இவ்வழுக்கை ஆறு வலிகாமம் வடக்கில் இருந்து சண்டிலிப்பாய் செயலகத்தின் பகுதியினூடு செல்லும் ஆறு ஆகும். இந்நீர் நிலை எமது பிரதான வாழ்வாதார தொழில்களில் ஒன்றான விவசாய துறைக்கு மிகவும் முக்கியமானதொன்றாக விளங்குகின்றது. வழுக்கை ஆறு விவசாய நிலத்தினூடு பாய்ந்து செல்வதை காணக்கூடியதாக உள்ளது. இயற்கையாக எமது பிரதேசத்தில் கிடைக்கும் மழைநீரைத் தேக்கி வைத்திருப்பதற்கு இது உதவி புரிவதோடு விவசாய தேவைக்கு ஏற்றதாக நீரையும் வழங்குகின்றது. தற்போது எமது பிரதேசத்தில் விவசாயம் செய்யப்படுவதோடு அவை மாரிகால பயிர்களாகவும் கோடைகால பயிர்களாகவும் அமைகின்றன. பாரம்பரிய முறைகள் இப்பிரதேசத்தில் இப்போதும் பின்பற்றப்பட்டு வருவதை காணக்கூடியதாக உள்ளது. எம் முன்னோர்களின் வாழ்க்கை முறைமையையும் வாழ்வாதார செயற்பாடுகளில் விஞ்ஞான வளர்ச்சிக்கு முற்பட்ட காலத்தில் எவ்வாறு பொறியியல் காணப்பட்டது என்பதையும் இவ் வழுக்கை ஆற்றை மையமாகக் கொண்ட விவசாயம் உணர்த்துகின்றது.

### ஆலயங்கள்

ஆலயங்கள் எம்முன்னோர் வாழ்வில் எவ்வாறு கலாசார பண்பாட்டு பழக்க வழக்கங்கள் பின்பற்றப்பட்டதென்பதைத் தெட்ட தெளிவாக காட்டுவதோடு அவை இன்றும் தொடரப்பட்டு வருகின்றது என்பதையும் காட்டிநிற்கின்றன.

### மருதடி விநாயகர் ஆலயம்

இவ்வாலயம் உருவாகப்பெற்ற காலம் பல நூறு ஆண்டு காலங்கள் எனலாம். ஆரம்பகாலங்களில் மரத்தின் அடியில் விக்கிரகங்கள் வைத்து கடவுளை வழிபட்டு வந்ததாகவும் பின்னர் படிப்படியாக ஆலயங்கள் உருவாகப்பெற்றன என்பர். இந்த வகையில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயமும் உருவாகியதாகக் கேள்விப்படக்கூடியதாகவுள்ளது. இவ்வாலயம், ஆலயங்களின் வாயில் வழமையாக காணப்படும் கிழக்கு திசையில் இல்லாமல் மேற்கு திசையாகவும் காணப்படுகின்றது.

இதற்கான காரணம் இவ்வாறு கூறப்படுகின்றது. வழமைபோலவே இவ்வாலய விக்கிரகம் கிழக்கே நோக்கி இருந்ததாகவும் இவ்வாலயத்திற்கு நேர் எதிராக ஒரு கிறிஸ்த்தவ ஆலயம் அமையப் பெற்றபோதே அவ்விக்கிரகம் மேற்குத் திசைக்குத் திரும்பியதாகவும் அதன் பின்னே அதன் வாயில் மேற்குத்திசை நோக்கி அமைந்ததாம்.

இவ்வாலய ரதோற்சவம் ஆண்டுதோறும் சித்திரை வருடப்பிறப்பன்று நடைபெறுவது வழமை. தற்போது இவ்வாலயம் மிகவும் அழகிய சிறப்பு வேலைப்பாட்டுடன் புனரமைப்பு செய்யப்பட்டு காணப்படுகின்றது.

**சீரணி நாகபூசணி அம்மன் ஆலயம்**

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்மன் ஆலயம் எமது முன்னோர்கள் நாக வழிபாட்டில் ஈடுபட்டதை காட்டும் முகமாக அமையப் பெற்றிருக்கும் ஆலயமாகிய நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தை ஒத்ததாக காணப்படும் ஆலயமாக விளங்குகின்றது. இவ்வாலயம் பல நூற்றாண்டு காலத்திற்கு முற்பட்டதாகவே காணப்படுகின்றது.

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தை ஒத்த இவ்வாலயமும் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாகவும் நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு செல்லமுடியாத காலத்தில் இவ்வாலயத்திலே பக்தர்கள் தமது வழிபாட்டையும் நேர்த்திக் கடன்களையும் கொடுத்து வந்தனர். ஆலயப் பிரதேசம் விவசாய வளத்தை கொண்டுள்ளதுடன் மக்கள் பாரம்பரிய விவசாய நடவடிக்கைகளில் அங்கு ஈடுபட்டு வருவதையும் காணலாம்.

ஆலயங்களின் வரிசையில் ஐரோப்பியவரின் வருகையின் பின் உருவான கிறிஸ்தவ ஆலயங்களும் பிரசித்திபெற்று காணப்படுகின்றன.

**மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயம்**

இவ்வாலயம் மானிப்பாய் பகுதியில் பிரசித்தி பெற்ற ஆலயமாக கிறிஸ்தவ மக்களிடையே காணப்படுவதுடன், கொழும்பு மாநகரில் காணப்படுகின்ற கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தை ஒத்ததாக காணப்படுகின்றது. இது மேலைத்தேய ஆட்சியாளர்களின் காலங்களில் உருவாக்கப்பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

**புனித லூர்த்து மாதா ஆலயம்**

மாதகலில் அமைந்துள்ள இவ்வாலயம் 1938ம் ஆண்டு கட்டப்பட்டதாகவும் மிகவும் பிரசித்தி பெற்றதாகவும் காணப்படுகின்றது. இங்கு திருவிழாக்காலங்களில் விழாக்கோலம் மிகவும் சிறப்பாக அமைந்து காணப்படும். மிகவும் அழகிய முறையில் மாதா கோயில்களை ஒத்ததாக அமைந்து இது காணப்படுகின்றது.

### சென் தோமஸ் ஆலயம்

130 வருடங்கள் பழமை வாய்ந்த இவ் ஆலயம் மாதகல் பகுதியில் அமைந்துள்ளதுடன் பழமையான எழிலுடன் காணப்படுகின்றது.

### கட்டடங்கள்

பழமை வாய்ந்த கட்டடங்கள் கட்டடக்கலையின் சிறப்பை பிரதிபலிப்பதோடு பண்டைய பொறியியல் முறைமையையும் வெளிப்படுத்துகின்றன. காத்திரமான கட்டடங்களாகவும் விளங்குகின்றன. ஆரம்பகாலங்களில் உருவான மனைகளில் எவ்வாறு மனையடி சாத்திரம் பின்பற்றபட்டதென்பதையும் மனைகளின் வடிவமைப்புகள் காலத்திற்குகாலம் எவ்வாறு அமைந்தன. என்பததையும் இவை மூலம் அறியலாம். உதாரணமாக ட வடிவ மனைகள் நாற்சார் வீடுகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். போர்த்துக்கேய ஒல்லாந்த ஆங்கிலேயர் காலங்களில் அவர்களின் வடிவமைப்பு கொண்ட மனைகள் கட்டடங்கள் இப் பிரதேச செயலக பரப்பில் காணப்படுகின்றன. இப் பிரதேச செயலக பரப்பில் வாழ்ந்த மக்களின் கலாசாரங்களையும் வாழ்க்கை முறையில் கடைப்பிடித்த நடவடிக்கைகளையும் இவை எடுத்துக்காட்டுகின்றன. இத்தோடு பனையோலை தென்னோலை கூரைகளும் வேலிகளும் சூழலுக்கு ஏற்ற வகையில் அமைந்திருப்பதையும் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையிலும் உள்ளூர் சமூக பொருளாதாரத்திற்கு வலுவூட்டுவதாகவும் அமைவதையும் காணலாம்.

### மடங்கள்

முற்காலங்களில் கால்நடையாகவும் பின்னர் மாடு, குதிரை வண்டிகளிலும் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகின்றது. நீண்ட தூரம் பயணம் செய்பவர்கள் தாமும் தம்முடன் பயணம் செய்யும் விலங்குகளும் இளைப்பாறவும் இரவு நேரம் தங்குவதற்கும் ஏற்ற வகையில் பயண வீதிகளில் மடங்கள் அமைக்கப் பெற்றதாக வரலாறு கூறுகின்றது.

### ஆறுகால் மடம்

இம்மடம் ஆனைக்கோட்டையில் அமைந்துள்ளது மடத்தின் அமைப்பு பயணிகளின் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய முறையில் காணப்படுகின்றது.

கட்டடப் பொருட்கள் இல்லாத காலங்களில், இயற்கைப் பொருட்களை கொண்டு இவை ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டதுடன் இவற்றுக்கு அருகாமையில் தாகம் தீர்க்கக்கூடிய வகையில் கிணறும் காணப்படுகின்றது.

கிணற்றில் இருந்து நீரைப்பெற்றுக்கொள்ள துலாவும் வாளியும் காணப்படும். கிணற்றினையும் அதன் பகுதியினையும் மிகவும் அழகான கட்டுமானங்களுடன் பேணி வந்துள்ளனர். விலங்குகள் நீரைப்பெற்றுக்கொண்டு அவற்றின் தாகத்தை தீர்ப்பதற்கு ஏற்ற வகையில் தொட்டிகளும் அமைக்கப்பெற்று காணப்படுகின்றன.

மடமும் நிலமட்டத்தில் இருந்து சுகமான முறையில் உட்கார கூடியதாகவும் சுமந்து வரும் சுமையை எளிதில் இறக்கி வைக்கக்கூடியதாகவும் அமைந்து காணப்படுகின்றது.

இவ் ஆறுகால் மடம் அமைந்துள்ள இடம் கூட ஆறகால் மடம் என்ற பெயருடனேயே விளங்குகின்றது. ஆறு வலிமையான தூண்களுடன் பல நூற்றாண்டுகளுக்கு பின்பும் கம்பீரமாக தற்போதும் காணக்கூடியதாகவுள்ளது.

**இடிகுண்டு / இடிவிழுந்து உருவான கிணறு**

நவாலியில் காணப்படும் இடிகுண்டு என்றழைக்கப்படும் இடியினால் உருவாகியதாக கருதப்படும் கிணறு பல நூற்றாண்டுகளுக்கு முன் இயற்கையாக உருவானதாக கூறப்படுகின்றது. அதாவது இடி பூமியில் விழுந்ததால் உருவாகிய்து. இது யாழ்மாவட்டத்தில் காணப்படும் நிலாவரைக்கிணறு போன்று ஆழமறிய முடியாததாகவும் வற்றா நீரையும் கொண்டதாகும். விவசாயிகளுக்கு போதியளவு நீரை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இது அமைந்துள்ளது.

அந்த வகையில் இப்பிரதேசத்தில் காணப்படும். சுற்றுலா ஈர்ப்புக்கான மையங்களை

1.சமய சுற்றுலா மையங்கள்

2.கலாசார சுற்றுலா மையங்கள்

என வகைப்படுத்தலாம். இப்பிரதேச கடல் வளங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்படும் வகையில் அமையுமாயின் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்களும் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

இன்று வேலையில்லாப் பிரச்சினை எம்மத்தியில் காணப்படுகின்றது. ஆனால் சுற்றுலாத் துறைக்கு வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறை நிலவுகின்றது.

சுற்றுலாத்துறை வேலையில்லா பிரச்சினையை தீர்க்கும் துறையாக இன்று விளங்குகின்றது. இத்துறைக்கு மில்லியன் கணக்கிலான பணியாளர்கள் தேவைப்படுவதாகவும் ஒவ்வொரு செக்கனுக்கும் வேலைவாய்ப்பு உலகளாவிய ரீதியாக உருவாகி வருவதாகவும் துறைசார் வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியோடு மனிதவள அபிவிருத்தியும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஏனெனில் போதிய ஆளணியையும் உருவாக்க வேண்டும் என்ற பொறுப்பும் உள்ளது. அந்தவகையில் வடபகுதியில் 2012ம் ஆண்டுக்கு பின் இக்கல்வி அரச, தனியார் துறைகளினால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றது.

முதலில் 2012ம் ஆண்டு யாழ்ப்பாண உயர்தொழில்நுட்ப கல்லூரியில் இலவச கல்வியாக உயர்தேசிய டிப்ளோமா சுற்றுலாத்துறையும் விருந்தோம்பலும் ஆரம்பிக்கப்பட்டது.

அதன் பின் யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரியிலும் VTAயிலும் (Vocational Training Authority) யிலும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இதை விட தனியார் கல்வி நிறுவனங்களிலும் இக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டு நடை பெறுகின்றன. இதன் தேவை உணரப்பட்டே இவை ஆரம்பிக்கப்பட்டன. பயனுள்ள மனித வலுவை உருவாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

இவ் ஆக்கம் எழுதப்பட்டதன் நோக்கமானது இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற சுற்றுலாவுக்கான பிரதேசங்களை அனைவரும் அறிவதோடு இன்று வேகமாக வளர்ந்து வருகின்ற சுற்றுலாத்துறைக்கு ஏற்றவகையில் இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற சுற்றுலாத்தலங்களை அனைவரும் தெரியப்படுத்துவதுமாகும். மேலும் சுற்றுத்துறை அபிவிருத்தியை எவ்வாறு திட்டமிடலாமெனவும் அதனூடு எவ்வாறு பொருளாதாரத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் கருத்திற் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டது.

ஆரம்பகட்டமாக இவ்வாறான இடங்களை உள்ளூர், வெளியூர் மக்கள் அறிவதற்கு பிரதேச செலயக எல்லைகளில் விளக்கத்துடன் கூடிய புகைப்படங்களுடன் காட்சிப்படுத்தும் போது அதன் விளக்கமும் பெறுமதியும் உணரப்பட்டு அனைவரும் அதை பாதுகாத்து வரவும் சுற்றுலாப் பிரயாணிகளை அதனூடு கவரவும் முடியும். அவ்வாறு ஏற்படும் பட்சத்தில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களையும் ஊக்குவித்து வாழ்வாதார தொழில்களையும் உருவாக்கி கொள்ள முடியும் அல்லது எமது பண்டைய கலாசாரங்களை அறியவும் அவற்றைப் பேணவும் வாய்ப்பு கிடைக்கும்.

சுற்றுலாப்பிரயாணிகள் அதிகரித்து வரும் வேளையில் எமது உள்ளூர் உற்பத்தி பொருட்களின் உற்பத்தியும் விற்பனையும் அதிகரிக்கும்.

உள்ளூரில் காணப்படும் வளங்களை அடையாளம் கண்டு உள்ளூர் உற்பத்தியை எவ்வாறு ஏற்படுத்தலாம் என்பதையும் அதை முன்னெடுக்க வேண்டிய அவசியத்தையும் அறிந்து கொள்ளலாம் சுற்றுலாத்துறை ஒரு வறுமை நீக்கும் கருவியாக உலகளாவிய / தேசிய ரீதியாக காணப்படும் துறையாகும். எனவே எதிர்காலத்தில் மேலும் காணப்படுகின்ற சுற்றுலாவுக்கான ஈர்ப்புக்களை அடையாளம் காணுவதோடு அவற்றை பேணிப்பாதுகாத்து பிரதேசத்திற்கு சுற்றுலாப்பயணிகளை வருவிப்பதற்கு எவ்வாறு வகை செய்யலாம் என்பதையும் விரிவாக ஆய்வு செய்தல் அவசியமானதாகும்.

# மனதில் நிறைந்த சண்டிலிப்பாய்

செல்லத்துரை நித்தியானந்தம்
சண்டிலிப்பாய்

இலங்கையின் வடபகுதியில் வலிகாமம் பிரிவில் வலிதென்மேற்கு பிரதேசத்தில் கிழக்கே உடுவில் சுன்னாகமும் வடக்கே கந்தரோடை அளவெட்டியும், மேற்கே- சங்கானையும், தெற்கே கட்டுடைக்கும் மானிப்பாய்க்கும் மத்தியில் சண்டிலிப்பாய் அமைந்துள்ளது. இச் சண்டிலிப்பாய்க் கிராமம், சண்டிலிப்பாய் சண்டிருப்பாய் என்னும் பெயர்களால் வழங்கப்படுகிறது. முதலில் சண்டிருப்பாய் என்றும் பிற்காலத்தில் சண்டிலிப்பாய் என்றும் வழங்கப்படுகின்றது. பிறிதொரு தகவலின் படி சண்டன் என்று பெயரை உடைய சண்டேஸ்வரருடைய பெயரால் உண்டாக்கப்பெற்றது என்பர். இக் கிராமம் பல பிரிவுகளாக உள்ள ஓர் பெரிய கிராமம் ஆகும். இக்கிராமம் நான்கு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் மாசியப்பிட்டி J-144 என்றும் சண்டிலிப்பாய் வடக்கு J-141 எனவும் சண்டிலிப்பாய் கிழக்கு சண்டிலிப்பாய் மத்தி J-142 என்றும் சண்டிலிப்பாய் மேற்கும் தெற்கும் J-143 எனவும் பிரிக்கப்பட்டுள்ளன. இக்கிராமத்தில் மாகியப்பிட்டி, கோட்டையடி, சண்டிலிப்பாய் கிழக்கு, வடக்கு, தெற்கு, மேற்கு ஐயனார் கோயிலடி, சீரணி, கல்வளை, ஆலங்குளாய் எனப் பல குறிச்சிகள் உண்டு.

இக்கிராமத்தில் முதன்முதலாக யார் எப்போது குடியேறினார்கள் அல்லது யாரால் குடியேற்றப்பட்டார்கள் என்பது தெரியவில்லை. இதனை வரலாற்று அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் மட்டுமே வெளிப்படுத்த வேண்டும். நாம் அறிந்த அளவில் இலங்கையின் வடபகுதியில் நாகர்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களின் பரம்பரை சில மாற்றங்களுடனோ அல்லது தனித்துவமாகவோ வாழ்ந்திருக்கிறார்கள். இலங்கையின் வடபகுதியில் நாகதம்பிரான் வழிபாடு பரவலாக உள்ளது. கல்வளைப்பிள்ளையார் கோவிலின் 1870ம் வருட யாழ்ப்பாணக் கச்சேரியின் தோம்பில் நாக தம்பிரான் வழிபாடு சுற்றி உள்ள கிராம மக்களால் நாகதம்பிரானுக்கு பொங்கல் செய்து வழிபாட்டார்கள் பின்பு நாகதம்பிரானுடன் ஐயனார் வழிபாடும், பிள்ளையார் வழிபாடும் தொடங்கின எனும் குறிப்பு உள்ளது. அம்மன், முருகன் வழிபாடும் பிற்காலத்தில் ஆரம்பமாகி இருக்கலாம்.

இச் சண்டிலிப்பாய் கிராமத்தில் பிரதேச செயலகம் அமைந்துள்ளது ஒரு வரப்பிரசாதமாகும். இக்கிராமத்தில் கல்வளைப் பிள்ளையார் கோயில், சீரணி நாகபூசணி அம்மன் கோயில், வேவிற்பதி ஐயனார் கோயில், ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயம், திரேசம்மா கத்தோலிக்க தேவாலயம், தென்னிந்திய திருச்சபை கிறீஸ்தவ ஆலயம் வீரபத்திரர் கோயில், இரட்டையப் புலம் வைரவர் கோவில், ஆவளைப்பிள்ளையார்

கோயில், குட்டிப்பிள்ளையார் கோயில், அங்கனாக்கடவை கண்ணகை அம்மன், மீனாட்சி அம்மன் கோயில்கள், ஆலங்குளாய் முருகமூர்த்தி கோயில், கம்மாலை ஸ்ரீபால சுப்பிரமணியர் கோயில் ஆகியனவும் இன்னும் பல சிறிய கோயில்களும் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றன.

இக்கிராமத்தில் ஆறுமுக நாவலர் காலத்தில் வாணி நிகேதன வித்தியாலயம் ஒன்று ஆரம்பிக்கப் பெற்றது. பின்பு 1929ம் ஆண்டளவில் உயர்திரு ப.மு செகராசசிங்கம் என்னும் பெரியார் தனது சொந்தக் காணியில் சண்டிலிப்பாய் இந்து ஆங்கில பாடசாலை (Sandilipay Hindu English School) என்று ஆரம்பித்தார். பல கஸ்ரங்களையும் அனுபவித்துள்ளார். அரசாங்க அங்கீகாரத்தின் பின் இப்பாடசாலை வளர்ச்சியடைய தொடங்கியது பாடசாலைகளை தேசிய மயமாக்கிய பின்பு இப்பாடசாலை சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம் என்னும் பெயருடன் வளர்ச்சியடைந்து தற்போது இம் மகா வித்தியாலயம் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி என்ற பெயருடன் சுமார் 1138 மாணவ மாணவிகளுடனும் 46 ஆசிரியர்களுடனும் ஓங்கி வளர்ந்து பூத்து குலுங்கிக் காய்த்து மாடிக்கட்டிடங்களுடன் பெரு விருட்சமாக திகழ்கின்றது. அத்துடன் வடக்குச் சண்டிலிப்பாயில் சிறாப்பர் பள்ளிக்கூடமும், கோட்டையடியில் ஒரு பாடசாலையும் நடைபெறுகின்றன. இக்கிராமத்தில் பல விதமான தொழில் செய்பவர்கள் வாழ்கின்றனர். விவசாயிகள், மேசன் தொழிலாளர்கள், தச்சுத் தொழிலாளர் இரும்பு வேலை செய்யும் கம்மாலைத் தொழிலாளர்கள், உத்தியோகத்தர்கள், கல்விமான்கள், அந்தணர்கள், வைத்தியர்கள், இயந்திரம் திருத்தும் தொழிலாளர்கள் சுருட்டு தொழில் செய்பவர்கள் கல் அறுக்கும் தொழில் செய்பவர்கள் என்போர் உள்ளனர். முன்பு ஓர் பாரம்பரிய பனங்கட்டித் தொழிற்சாலையும் இங்கு காணப்பட்டது.

சேரன் செங்குட்டுவன் என்ற சேர மன்னன் கண்ணகிக்கு சிலை எடுத்து கோயிலமைத்து கொண்டாடிய வெற்றி விழாவில் பங்குபற்றச் சென்ற இலங்கை கஜபாகு மன்னன் விழா முடிந்ததும் பல கண்ணகி அம்மன் விக்கிரகங்களுடன் நாடு திரும்பி, மாதகல் சம்பில்துறையிலிறங்கி, தன்னுடைய ராசதானிக்குப் போகும் வழியில் அக்காலத்தில் பிரபல்யமாக இருந்த சண்டிலிப்பாய் அங்கனாக் கடவை என்னும் குறிச்சியில் தற்போது இருக்கும் கண்ணகை அம்மன் கோயிலை நிறுவி சென்றான் என்பது வரலாறு. பிற்காலத்தில் கண்ணகை அம்மன் கோயிலுடன் மீனாட்சி அம்மன் கோயிலும் உண்டாக்கப் பெற்றது.

கி.பி 0770ம் ஆண்டுகளில் தற்போது கந்தரோடை என வழங்கப்படும் கதிரமலையை தலைநகராகக் கொண்டு உக்கிரசிங்கன் என்னும் பெயருடைய மன்னன் வடபகுதியை ஆண்டு வந்துள்ளான். இம் மன்னன் காலத்தில் மாருதப்புரவீகவல்லி எனப்படும் சோழ இளவரசி தன்னுடைய குதிரை முக நோயும் குண்ம நோயும் தீரும் பொருட்டு கீரிமலைத் தீர்த்தத்தில் நீராடி நோய் நீங்கப்பெற்று இதற்கு நன்றிக்கடனாக மாவிட்டபுரத்தில் ஒரு முருகன் கோயில் கட்டுவதற்கு தனது தந்தையின் உதவிகளுடன்

ஆயத்தம் செய்தார். ஆனால் அவரிற்கு மனநிறைவு உண்டாகவில்லை சோழ நாட்டிலிருந்து கோயில் திருப்பணிகளிற்கு வந்த அவருடைய தீட்சிதர் பெரிய மனத்துள்ளாரின் ஆலோசனையின் பிரகாரம் முதலில் பிள்ளையார் வழிபாடு செய்வதற்காக வழுக்கை ஆற்றங்கரை ஓரமாக ஏழுபிள்ளையார் கோயில்களை அமைக்க ஆயத்தம் செய்தார். இதே காலத்தில் உக்கிரசிங்க மன்னன் கீரிமலையில் நகுலேஸ்வர பெருமானை வழிபடுவதற்காக கீரிமலையை அடைந்த பொழுது மாருதப்புரவீகவல்லியின் அழகில் மயங்கி அவரை திருமணம் செய்வதற்கு விரும்பினான். தன்னுடைய கோயில் கட்டும் திருப்பணி வேலைகள் முடிந்த பின்பு திருமணம் செய்வதற்கு மாருதப்புரவீகவல்லி இணங்கினார். கோவில் வேலைகள் வெகு துரிதமாக நடந்தேறி வழிபாடுகள் தொடங்கின.

மன்னன் உக்கிரசிங்கன் மாருதப்புரவீகவல்லி திருமணத்தின் பேறாக நரசிங்கன் என்னும் மகனும் மகளும் பிறந்தார்கள். இக்கால கட்டத்தில் இம்மன்னன் தலைநகரை சிங்கை நகரிற்கு மாற்றினான். மகன் நரசிங்கன் தன்னுடைய இராசதானியை நல்லூரிற்கு மாற்றினான். சிங்கை ஆரியனுடைய (ஆரியச்சக்கரவர்த்தி) ஆட்சியிலும் பின்பும் மன்னர்களின் பட்டப் பெயர்களாக பரராசசேகரன் செகராசசேகரன் என்னும் பெயர்களில் தொடர்ச்சியாக ஆண்டார்கள். கடைசியாக செகராசசேகரன் என்னும் பட்டப் பெயரினைக் கொண்ட சங்கிலி மன்னனின் காலத்தில் போர்த்துக்கேயர் ஆட்சியைக்கைப்பற்றியதும் 500-700 இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்டன. போர்த்துக்கேயர்கள் பரநிருபசிங்கனை தங்களிற்கு கீழ் (Regent) இராசப்பிரதிநிதியாக்கினார். பின் இவனுடைய மகன் பரராசசிங்கத்தை இராசப்பிரதிநிதியாக்கினார். இக்காலத்தில் அரச பரம்பரையினர் பெருகியதால் பரராசசிங்கம் தன்னுடைய ஏழு கிராமத்தை அரசபிரதிநிதிகளிடம் பகிர்ந்தளித்தான் இதில் சண்டிலிப்பாய் கிராமம் வெற்றிவேலாயுத முதலி என்பவரை அரச பிரதிநிதியாக்கி அவரின் ஆட்சியாக்கப்பட்டது. போர்த்துக்கேயரால் அழிக்கப்பெற்ற கோவில்களில் கல்வளைப்பிள்ளையார் கோவிலும் ஒன்றாகும். பின் ஒல்லாந்தர் (Dutch) காலத்தில் இக்கோயில் வெற்றிவேலாயுத முதலியின் பரம்பரையினரால் குடிசைக்கோயிலாகவும் கற் கோவிலாகவும் கட்டப்பெற்றது.

இக்கிராமத்தில் ஒரு முதியோர் பகல் பராமரிப்பு இல்லம் கல்வளையில் சிறப்பாக இயங்குகின்றது. இது மட்டுமல்ல வரகவி எனப்பெயர் பெற்ற சின்னத்தம்பி புலவரால் கல்வளை அந்தாதி பாடப்பெற்ற கல்வளைப் பிள்ளையார் கோயிலும் இக்கிராமத்தில் உள்ளது. இன்னும் சனசமூக நிலையங்களும். பாலர் பாடசாலைகளும் தனியார் கல்வி நிலையங்களும் சிறப்பாக இயங்கி வருகின்றன.

# உடல் உளவள ஆரோக்கியமும் சமுதாய வளர்ச்சியும்

க.நா.சபாரத்தினம்
மாதகல்

வளர்ச்சி என்பது மனித வாழ்க்கையில் கூடுதலாகப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். தனி மனிதன் பிறப்பிலிருந்து இறப்பு வரை வளர்ச்சி எனக்குறிப்பிடப்படும் போது தவழ்ந்து, நடந்து, ஓடி, விளையாடி, இளைஞராகி சமூகத்தில் குடும்பஸ்தராகி, பெற்றோராகி, முதியோராகி இறப்பது ஒரு நிரல். இத்துடன் அறிவு ஆற்றல் தொடர்பாக கல்வி அறிவு தொழில் அறிவு, சமுதாய சுற்றுச்சூழல் அறிவு, விளையாட்டுத்துறை அறிவு, துறைசார் தொழில் நுட்பங்கள், சுகாதார அறிவு இவை அறிவியல் தொடர்பான வளர்ச்சிகளாகும்.

**உடல் வளர்ச்சி**

தமது ஆரோக்கியத்திற்கு தேவையான உணவுகளை உண்டு உடல் நலத்தைப் பேணுவது ஒவ்வொருவரினதும் கடமையாகும். இதனைத் தவிர்த்து மாறுபட்ட ஒவ்வாத தீங்கு விளைவிக்கக்கூடிய உணவுப்பாவனை, நீர்ப்பாவனை, சுகாதாரமற்ற சூழல் தொடர்பு என்பனவும் உடல் நிலைகளைப் பாதிக்கும். இவற்றிற்கு ஏற்ப வளர்ச்சியிலும் பாதிப்பு ஏற்படும். உணவு ஒவ்வாமை காரணமாகவும் சுற்றுச்சூழல் பிரச்சினை காரணமாகவும் தேவையற்ற கலவளர்ச்சி ஏனைய தாக்கங்கள் மூலம் விடுபடமுடியாத நோய்களுக்கு ஆளாக வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். சாதாரணமாக வளரவேண்டிய ஒருவனுக்கு ஒவ்வாத உணவுகள் அவரை நோயாளி ஆக்கிவிடும். இதனை நோக்குவோமானால் சுத்தமான உணவை உண்டு ஆரோக்கியமாக இருப்போம் என எண்ணினாலும் உணவில் எமக்குத் தெரியாமல் உட்புகுந்து நோய்தாக்கம் ஏற்படுத்த கூடிய கிருமிநாசினி விசிறப்பட்ட உணவுகள் ஏனைய சூழல் மாசு தொடர்பான உணவின் படிமங்கள் உணவுடன் செல்வதால் நோயாளி ஆகும் சந்தர்ப்பங்கள் எற்படலாம். இத்துடன் சுவாசித்தலின் மூலம் காற்றிலிருந்து பரவக்கூடிய கிருமிகளின் மூலம் நோய் உருவாகி எம்மை மீளாத்துயரத்திற்கு இட்டு செல்லுகின்றன. கல்வி அறிவுள்ள சமுதாயத்திலுள்ள நாம் இவற்றிலிருந்து விடுபடுவதற்கு, ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் மிக அவதானமாக செயற்பட்டு, இவற்றிலிருந்து விடுபட சுகாதாரம் தொடர்பான வைத்தியர்களின் ஆலோசனைகளையும் அவர்களால் நோய்கள் தொடர்பாக பத்திரிகைகளில் வெளியிடப்படும். கட்டுரைகள் கேள்வி, பதில் என்பவற்றை வாசிப்பதன், மூலம் வருமுன் காக்கும் முறையில் எமது உடல் நலத்தைப் பாதுகாத்துக் கொள்ளலாம். இதற்காக எமக்கு கல்வி, வாசிப்பு பழக்கம் கட்டாயமானதாக கருதப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட உடல் நலப்பாதுகாப்பு வளர்ச்சி பற்றி சிந்திக்கும் நாம் உளநலப் பாதிப்பு பற்றி இதனை ஒப்பீடு செய்து சிந்திப்போம்.

நாம் கல்வியைப் பெறுகின்றோம் இருந்தும் தற்காலத்தில் சில தவறுகள் ஏற்படுகின்றன. கல்வி அல்லாத சமூக நடைமுறையில் சிலவற்றைப் பார்த்தல், அவதானித்தல் அவற்றில் சிலவற்றிற்கு அடிமையாகுதல் இவை பற்றி சிந்திப்போம்.

பயனற்ற சொற்பதங்கள் தீங்கு விளைவிக்கக்கூடிய உணவுப்பழக்கம், மது அருந்துதல் இது தவிர பயனளிக்கமுடியாத உளநிலை பாதிக்கக்கூடிய சில விடயங்களுக்கு நேரத்தை ஒதுக்குதல் என்பனவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம். இதில் ஒன்றாக தற்காலத்தில் சினிமா மோகத்திற்கு அடிமையாதல் காணப்படுகிறது. சினிமா துறையை முழுமையாக குறை சொல்லமுடியாது சில சினிமா தொடர்கள் சமூகத்திற்கு வேண்டிய நல்ல கருத்துக்களை சிந்திக்க வைக்கின்றன. 80% ஆகியனவற்றில் கொலை, கொள்ளை பாலியல் குறைபாடு, களவு என்பன திரும்பத்திரும்ப இடம்பெறுவதும், இக்காணொளி காட்சிகள் இப்படியும் செய்யலாம் என்ற நிலைமைகட்கு தூண்டுகோலாக அமைவதாக கருத இடமுண்டு. எப்படி துர்நாற்றமுள்ள வாயு வளிமண்டலத்திலுள்ள தூசி, தூய்மை இல்லாத உணவில் உள்ள கிருமிகள், கிருமிநாசினிகளில் உள்ள நச்சுத்தாக்கங்கள் எவ்வாறு உடலில் ஒட்டுகின்றதோ அதேபோல் இவற்றின் படிமம் உள்ளத்தில் ஒட்டிக்கொள்ளும். இதனை தற்கால சமூகம் உணர்ந்து கொள்வதில்லை. புகைப்பிடித்தல் (புகைத்தல் மூலம்) எவ்வாறு புற்றுநோயை உண்டாக்குகின்றதோ அதே போன்ற ஒரு தாக்கம் இதற்கும் உண்டு. இதிலிருந்து விடுபட சமூதாயத்தில் உள்ள ஒவ்வொருவரும் சிந்திப்பதோடு அதற்காக பாடுபடவேண்டும். உடல் நலமுடன் எல்லோரும் வாழ வேண்டும் என்ற அக்கறையுடன் தமது பெறுமதிமிக்க நேரத்தை வைத்திய துறையில் செலவு செய்யும் நிபுணர்கள் மேலதிகமாக பத்திரிகைகளில் நோய்களின் தாக்கங்கள் பற்றிய விளக்கங்களை வாரம் வாரம் விளக்கி எழுதிக்கொண்டே இருக்கிறார்கள்.

இவற்றை எத்தனை பேர் வாசித்து பயன் பெறுகிறார்கள் என்பது கேள்விக்குரிய விடயமாகும். இவற்றை பார்த்து பயனடையாது அந்த நேரத்தை பயனற்ற சினிமாக் காட்சிகளைப் பார்த்து செலவழிப்பதுடன் பின்பு கிளினிக் கொப்பிகளுடன் வைத்தியசாலைக்கு செல்வது அவர்களது நேரத்தையும் பொருளாதாரத்தையும் வீணடிப்பதாகின்றது. வாசிப்பதற்கு நேரம் ஒதுக்குவதோடு அதில் உள்ள நன்மை தீமைகளை ஏனையவர்கட்கு எடுத்து உணர வைப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும். சமுதாய அமைப்பு நன்றாக வளரவேண்டும் ஆயின் ஒவ்வொரு பிரஜைக்கும் இவ் அக்கறை தேவையாகும். முன்னைய நடைமுறையினர் கூறுவது போல் சமய அறிவுரைகளை கேட்க நேரம் ஒதுக்குதல், சமய விடயங்களை மனனம் செய்தல், அறிவு வளர்ச்சி தொடர்பாக, ஆன்மீக வளர்ச்சி தொடர்பாக சிந்திக்க நேரம் தற்போது ஒதுக்கப்படுவதில்லை, இதனால் ஆன்மீக வளர்ச்சிகளில் பின்னடைவும் அசௌகரிய நிலைமைகளும் ஏற்படுகின்றன.

பழையகால உணவுப்பழக்கத்தில் இருந்து ஒதுங்குதல், பழையகால சமய ஆன்மீக விடயங்கட்கு நேர ஒதுக்கீடு சரியாக வழங்காமை என்பன எமது உடல், உள ஆரோக்கியத்தை எவ்வளவு பாதிக்கின்றது என்பதை உணர்தல் வேண்டும்.

**கல்வி வளர்ச்சி**

ஆதிகால குருசீட கல்வி வளர்ச்சியின் போது கல்வி கற்கும் சீடன் (மாணவன்) குருவின் பாதங்களை கழுவி, பணிவிடை செய்து கல்வி பயின்றான் (அதற்காக அடிமையாக அல்ல) இது கல்வியை பெறுவதற்கு பணிவு தேவை ; குருவின் பயபக்தி தேவை இவையே முறையாக கல்வியையும் தகுந்த பெறுபேற்றையும் வழங்கும் என்பதால் இந்நடைமுறை பின்பற்றப்பட்டது. அடுத்த காலகட்டத்தில் ஆசிரியர் மாணவர் ஒருவரை ஒழுங்குபடுத்த முழுஅதிகாரமும் அவரிடம் இருந்தது. போட வேண்டிய அடிகள், தண்டனைகள் வழங்கினார்கள். இவை பணிவு நிறைந்த, பயபக்தி நிறைந்த, ஆன்மீக வளர்ச்சியுடனான கல்வி வளர்ச்சிக்கும் உதவியாக இருந்தன. அக்காலத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் படும் கஷ்டங்களை அவதானித்த தாயார் ஒரு சந்தர்ப்பத்தில் தனது மகன் கஷ்டப்படாது, கல்வி கற்காது இருந்தாலே நல்லது என பின்வரும் பாடலை கூறியதாக அரைநூற்றாண்டிற்கு முன் கற்பித்த ஆசிரியர் கூறிய பாடலை நினைவு படுத்தலாம்.

பிள்ளையும் படிக்கவேண்டாம்
பிரம்படி படவும் வேண்டாம்
சள்ளையாம் சுவடி தூக்கி சஞ்சலப்படவும் வேண்டாம்
பிள்ளை என்று இருந்தாற் போதும் பெற்றவள் மனம் களிக்க

இது அக்கால ஆசிரியருக்கு உள்ள கண்டிப்பு சுதந்திரத்தை வெளிப்படுத்துகின்றது. இக்காலத்தில் இந்நடைமுறை தண்டனைக்குரிய குற்றமாக கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்காலத்தில் ஆசிரியர்கள் இவைகளையும் அனுசரித்து தங்கள் பங்களிப்பை மேற்கொண்டு சில மாணவர்களை அதி உச்ச பெறுபேறுகளை பெறச்செய்கின்றனர். குறைபாடுகள், தோல்விகளை ஏற்றுக் கொள்ளும் மனோநிலை மாணவர்களிடம் தற்போது இல்லை. இதனால் தவறான முடிவுகளை ஏற்படுத்துகின்றனர். இவை அவர்களின் உறவுகளில் ஆயுட் கால ஆறாத வலிகளாக உள்ளன.

இவற்றை ஒப்பு நோக்கும் போது தண்டனை வழங்க ஏற்பட்ட தடை இந்நிலைமைகளை ஏற்படுத்துகின்றன என்பதனை யாம் ஏன் ஏற்றுக்கொள்ள முடியாது. எவ்வாறு இருப்பினும் பழையகால நடைமுறை இனிமேல் எடுபடாது இதற்கு மாற்றீடாக உளவளப் பயிற்சிகள் வழங்கப்படுவதோடு சிறந்த உளவியற்கல்வி கட்டாய பாடமாக்கப்படல் வேண்டும் கல்விப் பெறுபேறு மட்டும் வாழ்க்கையில் வெற்றி என கருதிவிடமுடியாது. எனவே உயிர்களின் பெறுமதியையும் கருத்திற் கொண்டு கல்விப் பகுதி சமுதாய நிர்வாகப்பகுதி என்பன சில திட்டங்களை வகுத்து செயற்படுத்த வேண்டும். அல்லாவிடத்து கல்வி வளர்ச்சி என்பது அர்த்தமற்றதாகிவிடும்.

### போக்குவரத்து

ஆதிகாலத்தில் கூடுதலான மக்கள் நடந்தும் பின்பு துவிச்சக்கரவண்டி, உந்துருளி, கார், பஸ், என்பவற்றின் மூலம் பிரயாண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் முற்காலத்தில் இந்நாட்டை ஆண்ட வெளிநாட்டவர்கள் ஆரம்பித்த வீதிகள் சில விருத்தி செய்யப்பட்டாலும் ஏனையவை ஆரம்பத்தில் உள்ள அகலத்திலேயே தொடர்ந்து இருந்து வருகின்றன. ஆரம்பகாலத்தில் பாவனையில் இருந்த வாகனங்களின் எண்ணிக்கையும், வகைகளும் எவ்வளவு அதிகரித்துள்ளன என்பது எவருக்கும் புதிதாக விளங்கப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இதன் காரணமாக விபத்துக்கள் ஏற்படுவதும் அனர்த்தங்கள் ஏற்படுவதும் நாளாந்த விடயங்கள் ஆகும். வீதி விஸ்தரிப்பின் மூலம் குறிப்பிட்ட அனர்த்தங்களின் விகிதத்தை குறைக்கமுடியும். எனவே பிரதேச மட்டங்களில் இவை ஆராய்ந்து தீர்க்கப்படல் வேண்டும். அல்லாதவிடத்து பெறுபேறுகள் பெறுமதியற்றதாகிவிடும்.

### சுற்றுச்சூழல் குடியிருப்பு வசதிகள்

மக்கள் பொதுவாக குறிப்பிட்ட சில இடங்களில் (நகர்ப்பகுதிகள்) கூடுதலாக வசிக்க விரும்புவது குடியிருப்பு நெருக்கடிகளை ஏற்படுத்துகிறது. ஆக, குறைந்த ஒரு வீடு அமைவதாயின் குறைந்தது 3 பரப்பு நிலம் தேவை. ஏனெனில் கிணறு, மலசலகூடம், கழிவுப் பொருள் அகற்றல் வசதிகள் சரிவர அமைய வேண்டும். இவை இல்லாதவிடத்து ஒரே வளவில் உள்ள, மலசலகூட வசதிகளோ அல்லது அயலவர்களின் மலசலகூட வசதிகளோ நீர்நிலைகளை பாதிக்கும். சுகாதாரத்துக்கு புறம்பான நீரை அருந்துகிறோம் என்ற சிந்தனையை அவர்கள் மறந்து விடுகின்றனர். ஆரோக்கியமாக வாழ விரும்பும் ஒவ்வொருவரும் இது பற்றி சிந்திக்க வேண்டும்

### சகசய (+-) கோட்பாடு

ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு சமூகமும், ஒவ்வொரு அமைப்பும் தாங்கள் இலட்சியங்களை நோக்கி முன்நகர வேண்டும் என்பதே அவர்களது சிந்தனையாக இருக்கும். முன்நோக்கி நகரும் முயற்சி + ஆகவும் அதில் உள்ள தடைகள் - ஆகவும் கருதப்படும். இவற்றில் இருந்து பெறப்படும் மீதி பெறுபேறாக அமையும். பெறுபேறுகள் வளர்ச்சி என கருதலாம். பெறுபேறு = கிடைத்த வெற்றியின் அளவு - கிடைத்த தோல்வியின் அளவு. சில விடயங்கள் எதிர்பார்க்கும் (தனிமனிதன், சமுதாயம்) பெறுபேறுகளை தராவிட்டால் அவை தோற்றுப்போனதாக கருதலாம். உரிய பெறுபேற்றை அடையாத விடயங்கள் தொடர்பாக கையாளப்படும் முறைகள் திருப்தி அற்றவை. அதில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள், உரிய இலக்கை அடைய எடுக்கவேண்டிய முயற்சிகள் தொடர்பாக தனிமனிதன், சமூகம், அரசநிர்வாகம், அரசியல்வாதிகள், சமூக அலுவலர்கள், ஏனைய மக்கள் பிரதிநிதிகள் ஆழமாக சிந்தித்து எதிர்காலத்தில் பயனுள்ள திட்டங்களை வகுக்கவேண்டும். களைபிடுங்கி பயிர் வளர்தல் மூலம் மனிதம் தழைக்கும். மனிதன் தழைத்தால் பிரதேசம் வளர்ச்சி அடையும் மக்கள் வளர்ச்சி அடைவார்கள்.

**சமுதாயம் எதிர்நோக்கும் சவால்கள்**

ஒவ்வொரு துறைக்கும் பாதிப்புக்கள் தொடர்பாக சில சட்ட வரையறைகளும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் இருந்து கொண்டேயிருக்கின்றன. அவ்விடயங்களைப் பூர்த்தி செய்வதற்கு உரிய ஆளணியினரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும்

i. சூழல் மாசடைதல் தொடர்பாக மக்களின் பங்களிப்பு குறைவாக உள்ளதுடன் அவர்களே பாதிப்பு ஏற்படக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுவது கவலைக்குரிய விடயமாகும். உரிய முறையில் கழிவுகளை அகற்றாது மனித நடமாட்டமுள்ள பகுதிகளில் கழிவுகளைக் கொட்டுவது, இவற்றின் தாக்கம் தங்களுக்கு பாதிப்பைப் ஏற்படுத்தும் என்பதனை உணராமல் இருப்பது.

ii. சுத்தமான உணவு, குடிநீர் வசதி என்பன

iii. விபத்துக்களின் அதிகரிப்பு

iv. சிறுவர், பெண்கள் பாதுகாப்பு

v. கொலை, கொள்ளை, ஆயுதக் கலாசாரம்

vi. இளவயதினரின் தவறான முடிவுகள்

vii. போதைப்பொருள் பாவனை, சட்டவிரோத மதுபாவனை, புகையிலைப் பாவனை

viii. இந்திய சினிமா உலகம் அறிமுகப்படுத்தும் ஒழுங்கற்ற ஆடைக்கலாசாரத்தில் மூழ்கியிருத்தல்

ix. எமது பாரம்பரிய கலை, கலாசாரத்தை பேணுவதிலிருந்து விலகிச்செல்லல்.

இவற்றைக் கட்டுப்படுத்த நிர்வாக அலகுகள் எடுக்கும் முயற்சிகள், பின்னடைவுகள், மனித சமுதாய வளர்ச்சியின் சவால்களாக அமைந்துள்ளன. இவற்றில் சில விடயங்களை மனித மனப்பாங்குகளில் ஏற்படுத்தும் மாற்றங்களாலேயே நிவர்த்தி செய்யலாம். ஏனையவை தற்போதுள்ள சட்ட குறைபாடுகளை திருத்தி வலுப்படுத்துவதன் மூலமே முன்னேற்றம் காணமுடியுமெனக் கருதப்படுகிறது.

மீள்குடியேற்றங்கள், நிலமீட்புப் போராட்டம், காணமல் ஆக்கப்பட்டோர் விடயங்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி, வேலையற்றோர் பிரச்சினை முதலானவற்றிற்காக கடுமையாக உழைக்கவேண்டியது சம்பந்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அரசியல் வாதிகள் என்போரின் பொறுப்பாகும்.

இவை பற்றி சிந்திக்கவும், செயற்படுத்தவும் முயற்சிக்காத பட்சத்தில் சமுதாய வளர்ச்சி, பிரதேச வளர்ச்சி, நாட்டு வளர்ச்சி என்பன கேள்விக்குரிய விடயங்களாகின்றன.

"நல்லதையே சிந்திப்போம் நல்லதையே செய்வோம்"

# சமூகத்தை வழிநடத்தும் கலைகளும் இலக்கியங்களும்

கதிரொளி நாடக மன்றம்
பண்டத்தரிப்பு

கலை, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் இன்னும் விழுமியங்கள் என்றெல்லாம் கேட்டும் படித்தும் தெரிந்திருக்கின்றோம். இவையெல்லாம் தனிமனிதனை, சமூகத்தை, சமுதாயத்தை மேம்படுத்துகின்றதா இல்லையா என்பதைக் கொஞ்சம் அலசி ஆராய்ந்தால் கிடைக்கும் சான்றுகள், சரித்திரங்கள் எவ்வளவு உண்மையானவையாகவும் உயர்ந்தவையாகவும் காத்திரமானவையாகவும் காட்சி தருகின்றன. என்பது மனிதனை வியக்க வைக்கின்றது.

ஆதி மனிதன் விலங்குகளோடு வாழ்ந்து பல்கிப்பெருகி, நாகரீகமடைந்து நல்லது கெட்டது அறிந்து ஓர் உண்மையான கச்சிதமான வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து இப்படித்தான் வாழவேண்டும் என்று, எப்படியும் வாழலாம் என்பதை விடுத்து ஒருவனுக்கு ஒருத்தி என்று பண்பாடுகாத்து, சமத்துவம் சகோதரத்துவம் என்று சமூக சமுதாய மாற்றங்களை மேற்கொண்டு நன்னிலையடைந்தான் என்றால் அது பொய்யில்லை. இவ்வாறு நாகரிக நகர்வினில் இவனது நாட்டம் நாளுக்கு நாள் அதிகரிக்க காரணமாகவும் காரியமாகவும் இருந்தவை என அவனது கலை உணர்வும், கலாசாரமும் முதல் நிலை கொள்கின்றன. தனிமனித சிந்தனை அதாவது பகுத்தறிவு கொண்டவன் பகுத்தாய்ந்து கொண்டு காலநிலைக்கும் வாழும் சூழலுக்கும் ஏற்ற வகையில் நடையுடை பாவனையில் மாற்றத்தைச் சிந்திக்கும் போது அதைத் தான்மட்டும் பின்பற்றாமல் தன்னைச் சூழவுள்ள சமூகத்துக்கும் எடுத்துச்சொல்ல இக்கலைகளைப் பயன்படுத்தியது வரலாற்று உண்மையாகிறது.

மகிழ்ச்சியை, தான் பெற்ற வெற்றியை வெளிப்படுத்த சிரிப்பையும், வாய்மொழி சத்தத்தையும், கையோடு கை சேர்த்துத் தட்டி, ஆரவாரப்பட்டு, உடலசைத்து, துள்ளி எழுந்து, ஆடியசைந்து, மற்றவர்களைக் கவர்ந்து கொள்கிறான். இவ்வண்ணமே துன்பத்தில் மாட்டும் போது அழுது சோர்ந்து மூலையில் முடங்கியும், கோபத்தில் சினம் கொண்டு விகாரமடைந்தும், நவரசங்களை தன்முக பாவனையாலும், உடல்மொழி மூலமும் வெளிப்படுத்தும் நிலை கலையாகியது.

தனிமனிதனாக வாழ மனிதன் படைக்கப்படவில்லை அவன் ஓர் சமூகப்பிராணி. எனவே தான் கொள்ளும் மாற்றங்கள், வளர்ச்சிகள் தனிமனிதனோடில்லாமல் குடும்பம், சமூகம், சமுதாயம் என விரிந்து வியாபித்துக் கொண்ட வகையில் அவன் உணர்வுகளும் முற்போக்கு சிந்தனைகளும் இவ்வழியாக வளர்ந்து மனித வாழ்வை மேம்படுத்தியே சென்றது; செல்கிறது என்றால் மிகையாகாது. குடும்பத் தலைவனின் சிந்தனைகள் குடும்பத்தினூடாக, சமூகம், சமுதாயம், கிராமம், நாடு என வியாபித்து அவன் தலைவனாகிறான். அவனது பழக்கவழக்கங்கள், நடவடிக்கைகள் இவையே பாரம்பரியங்கள், விழுமியங்களாக கலைகளினூடாக நிலை நிறுத்தப்பட்டு சந்ததிகளுக்கு கடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இனி நாட்டுக்கூத்து, நாடகங்கள், தெருக்கூத்துக்கள், நடனங்கள், என நல்ல செய்திகளை நான்குபேர் அறியவும், அதைப்புரிந்து அதன்படி வாழவும் எனப்படைக்கப்பட்டவை. உண்மையையும் வாய்மை தவாறமையையும் வெளிப்படுத்தியது அரிச்சந்திர மயானகாண்டம். கற்பையும் அதன் புனிதத் தன்மையையும் வெளிப்படுத்தியது கண்ணகி காவியம். நாட்டையும் அதன் சிறப்பையும் வெளிப்படுத்தியது மகாபாரதம். இன்னனும் ஓர் இராமாயணம் மனிதனுக்கு, அன்பு, காதல், பாசம், துரோகம், பழிவாங்கல், சகோதர உறவு, பிரிவு, சண்டை சச்சரவு, இவற்றால் ஏற்படும் பரிய அழிவுகள் என மனிதன் புரிந்து வாழும் வழிவகைகளைக் காட்டி நிற்கின்றது.

இன்னும் கொஞ்சம் வளர்ச்சிப் பாதையில் நோக்கினால் தன் திறமைகளையும் சீரிய சிந்தனைகளையும் ஒரு சமூக முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்துபவனே கலைஞன் எனப்படுகின்றான். அவனை அவன் கொள்கைகளைப் பின்பற்றி வாழ்பவன் மேன்மையடைகின்றான். இதற்கோர் எடுத்துக்காட்டாக எம் இலங்கையில் பிறந்து மாபெரும் கலைஞனாகி தமிழகத்தை ஆண்டு இன்னும் உலகமக்கள் மனதில் மறையாது நிலைத்திருக்கும் எம்.ஜி.ஆர் அவர்கள் விளங்குகின்றார் மறுக்க முடியாத மாற்றமுடியாத என்பது உண்மையாகும். காலம் கடந்து போகும் ஆனால் காட்சிகள் அழிவதில்லை படிக்கும் போது பதிவதிலும் நடிக்கும் போது பதிவது வலுவானது.

இன்னும் தன் எண்ணங்களை வெளிப்படுத்த நாடகங்களும், தெருநடனங்களும், இசைநிகழ்வுகளும் பரம்பரை பரம்பரையாக தொடர்வது கண்கூடு. என்ன தான் திரைப்படங்களும், தொலைக்காட்சித் தொடர்களும் வந்தாலும் மானிடவாழ்வில் விழுமியங்களை நாட்டுக் கூத்துக்களும், நாடகங்களும் இன்றும் அழிவுறாமல் காத்து வருகின்றன. பாடசாலைகள், தொடங்கி பல்கலைக்கழகங்கள் வரை தமிழர் பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் மேம்படுத்தி விழுமியங்களை விதைத்து கலாரசனையை வளப்படுத்தி வருகின்றன. தமிழர் கலைகளாக இயல், இசை, நாடகம் என்பவற்றினூடாக தமிழினத்தின் தனித்தன்மை பேணப்பட்டு, மேம்படுத்தப்பட்டு வருகின்றது.

திருவள்ளுவர், ஔவையார், இளங்கோவடிகள், மகாகவி பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன், வாழும் கவிஞர் வைரமுத்து இவர்களின் காவியங்கள் யாவும் எமக்குக் கிடைத்த அரும்பெரும் செல்வங்களே. "வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி" என்பதற்கிணங்க சரித்திர நாயகர்களாக வாழ்ந்து மடிந்து ஆனால் இன்றும் மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்த எம் தாய்நாட்டின் மாவீரர்கள் எல்லாளன், சங்கிலியன், பண்டார வன்னியன், கண்டியரசன் போன்றோரின் வரலாறு சொல்லும் நாட்டுக்கூத்துக்கள் மேடையேற்றப்பட்டு வருவது எமது கலை வளர்ச்சிக்கும் கலைஞர்களின் எண்ணச் சிறப்புக்கும் எடுத்துக்காட்டாகிறது.

எமது கலைகளினூடாகச் சொல்லப்படும் வாழ்வின் உயர்ந்த விழுமியங்களை எமக்காக்கி இவற்றோடு இசைந்து வாழ்ந்து எம்முன்னோர்களின் பெருமையையும் சிறப்பையும் எம் இனத்தின் முன்னேற்றத்தையும் மனதிற்கொண்டு வாழ்வோமாக

# மனித வாழ்வில் இசையின் மகத்துவம்

கலாபூஷணம் இ.சவணபவன்
ஆணைக்கோட்டை

அமிழ்திலும் இனிய முத்தமிழில் ஒன்றான இசைத்தமிழ் தொல்காப்பியர் காலத்துக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வளர்ச்சியடைந்த நுட்பமான கலையாக விளங்கியது. பழந்தமிழ் மக்கள் எவ்வாறு தங்கள் வாழ்க்கையோடு, பண்பாட்டோடு, வழிபடும் தெய்வங்களோடு இசை (யாழ்) தாளம் (பறை) என்பவற்றைக் கருப்பொருளாக அமைத்துக் கொண்டிருந்தனர் என்பதுடன் எழுத்துக்களுக்கும் இசைக்கும் இடையேயுள்ள உறவை உணரும் நுட்பமான அறிவையும் பெற்றிருந்தனர். ஒலி வடிவமான இறைவன் படைத்த உலகம் ஒலிமயமாகவே விளங்குகிறது. இந்த ஒலியிருந்து சொற்களும் இசையும் பிறந்தன.

கவின் கலைகளில் மிகவும் சிறந்ததான இசை, நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை குணமளித்து அனைவருக்கும் மன அமைதியையும் ஆனந்தத்தையும் அளிக்கவல்லது. இறைவன் ஒலிவடிவமாக விளங்குகிறான் என இறையடியார்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர். ஆதியிலே வார்த்தை (ஒலி) இருந்தது. அந்த வார்த்தை இறைவனாக இருந்தது. ஒலிவடிவமான இறைவனே இவ்வுலகிலுள்ள அனைத்தையும் படைத்தவன் என்பது உண்மைச் சான்றாகும்.

இவ் இசையானது செவிக்கு இன்பம் ஊட்டும் அளவில் நிற்காமல் உள்ளத்தை பண்படுத்தி பேரின்பப் பேற்றையும் தரவல்லது. இசைப்பாட்டானது இனிய சுவையுள்ள சொற்களால் மெல்லோசையுடன் இயற்றப்பெற்று, நல்ல பொருட் செறிவு அமைந்து, எதுகை மோனை முதலிய இலக்கணங்களையும் உடையதாகும். இசையானது நாதம், சுருதி என்பவற்றால் பிரகாசம் பெற்று விளங்குகிறது. இயலும் இசையும் கலந்த நிலையே உள்ளத்தில் உணர்ச்சி எழுப்பி இன்பம் ஊட்டுவதாகும்.

இறைவன் ஒலி வடிவாக இருக்கிறான் என்பதை அப்பரடிகள் (ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே) எனக் கூறியுள்ளார். இறைவன் எழு இசையாய் இசைப்பயனாய் விளங்கி அருள்பாலிக்கின்றன் என சுந்தரர் பாடியுள்ளார். ஓம் எனும் பிரணவ மந்திரம் அகிலத்தின் இயக்கத்தினைக் கட்டுப்படுத்தும் அதிர்வினைப் பற்றிக்கூறுகின்றது. இதனையே சிவநடனமும் எடுத்தியம்புகிறது. இயற்கை தரும் இன்னொலிகளைக் கேட்டு மனிதன் சிந்திக்கிறான். இது போன்ற இன்னொலிகளைக் கருவிகளில் இசைப்பதற்கு அவன் முயன்றான் என எண்ணுவதற்கும் பழங்காலத்தைச் சேர்ந்த சங்கப்பாடல்கள் ஆதாரங்களாக விளங்குகின்றன.

மூங்கிலில் வண்டுகள் துளையிட்டு அந்தத் துளைகளில் காற்றுப்புகுந்து

வெளியேறும் போது இனிய ஒலி பிறந்தது. அருவியின் இனிய ஓசை முழவு (முரசு) போல ஒலித்தது. வண்டின் இமிரொலி யாழின் இசையைப் போல் ரீங்காரம் செய்தது. தன் அறிவின் திறத்தால் மனிதன் பல இசைக்கருவிகளைக் கண்டுபடிப்பதற்கு மேற்கூறிய இயற்கை தந்த இன்னொலிகள் முன்னோடிகளாய் விளங்கின. இனிய யாழினது இசை ஒரு பக்கத்தில் ஒலித்தது. மறுபக்கத்தில் வண்டுகளின் இமிரிசை எழுந்தது. ஒரு பக்கத்தில் கணுக்களையுடைய புல்லாங்குழலின் இனிய இசை காற்றில் மிதந்து வந்தது. மறுபுறம் தும்பிகள் அசைந்த பரந்த இசை ஒலித்தது. மண்ணினால் செய்யப்பட்ட மார்ச்சனை ஒரு பக்கத்தில் அமைக்கப் பெற்ற முழவு முழங்கியது. கூத்தியர் ஒரு புறம் ஆட மறுபுறம் வாடைக்காற்று வீசுதலால் பூங்கொடிகள் அசைந்தாடின. ஒரு புறம் பாடினி பாலைப்பண் என்னும் இனிய பண்ணைப்பாட மறுபுறம் தோகையை விரித்து ஆடும் மயிலின் குரல் எழுந்தன.

ஆதியிலே மனிதன் தன் உள்ளத்திலே எழுந்த கோபம், மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்த பல்வேறு ஒலிகளைப் பிறப்பித்தான். இந்த ஒலியில் இருந்தே படிப்படியாகச் சொற்கள் பிறந்தன. முதன் முதலில் இச்சொற்களைப் பேசிச் சிரித்து மகிழ்ந்தான். இச் சொற்களைக் கொண்டு அழுது புலம்பினான். குயிலின் இசை, வண்டுகளின் ரீங்காரம் ஆகியவற்றைக் கேட்டு ஆதிமனிதன் சிந்திக்கத் தொடங்கினான். அன்றும் இன்றும் நம்நாட்டில் பெரும்பாலானோர் விவசாய மக்கள். தாம் செய்யும் தொழிலுடனே நாட்டுப் பாடலை இணைத்துக் கொண்டனர். வயலில் உழவு செய்யும் போது பாட்டு, மாடு மேய்க்கும் போது புல்லாங்குழல் இசை, அறுவடைப்பாடல், குருவிகளை விரட்டும் போது ஆலோலப்பாட்டு, வயலில் களையெடுப்புப் பாடல், ஏற்றம் இறைக்கும் போது பாட்டு, தமிழன் தன் அலுப்பை மாற்றி மறக்கச் செய்ய நாட்டுப்பாடல்களைப் பாடினான். மக்கள் வாழ்க்கையில் எதிர்நோக்கிய எத்தனையோ, சோதனைகள், ஏமாற்றங்கள் துன்பங்கள் போன்றவற்றை இனிய எளிய பாடல்களில் வெளியிட்டனர். வாழ்விழந்த பெண் தனக்கு உண்டான ஆற்றெணாத் துன்பத்தை ஒப்பாரியில் காட்டினாள். இப் பாடல் மூலம் உணர்ச்சி பொங்கி வழிந்தது. அவை கேட்போரின் நெஞ்சைத் தொட்டன. சாலையிலே வண்டியோட்டிச் செல்லும் போது உற்சாகத்துடன் தன் உள்ளத்தில் எழுந்த இன்ப உணர்ச்சிகளையும் காதல் உணர்வுகளையும் தெம்மாங்குப் பாடல் மூலம் உணர்த்தினான்

தமிழனுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் இசை பயன்படும் வகையில் அமைந்துள்ளது. குழந்தையை தொட்டிலில் இட்டுத் தாய் தாலாட்டுப் பாடல் பாடியவுடன் குழந்தை தூங்கிவிடுகிறது. ஒவ்வொரு தொழிலிலும் ஈடுபடும் போது இசை ஒலித்துக் கொண்டே இருக்கிறது. திருமணத்தின் போது நாதஸ்வரம், தவில், நலங்குப்பாடல், லாலிப்பாடல், ஊஞ்சல் பாடல் இசைக்கப்படுகிறது. கோயில்களில் அன்றாடப் பூசைகளிலும் திருவிழாக்களிலும் பக்திப் பாடல்கள் இன்னிசையுடன் அடியார்களால் பாடப்படுகிறது. இறப்பின் போது ஒப்பாரிப்பாடல் ஒலிக்கிறது. இவ்வாறு தமிழன் வாழ்க்கையில் பல்வேறு நிலைகளிலும் இவை ஓர் இன்றியமையாத அங்கமாக கலையாக விளங்குகின்றன.

நோயினால் பாதிக்கப்பட்டவன் வேதனையால் அல்லல்படும் போது அவ் வேதனையை மறக்க இசை மிகவும் பயன்படுகிறது. இசை மன அமைதியைத் தருகிறது. நோய் குணமாகிறது. கருவில் இருந்து ஐந்து வயது வரை இசையினை குழந்தை கிரகித்தால் சிறந்த அறிவாற்றல் உள்ளவர்களாக உருவாக முடியும். ஆரம்பக்கல்வியில் இசை, அபிநயம் என்பனவற்றில் மூலம் அறிவினை இலகுவாகப் புகுத்த முடியும். தூக்கமில்லாமல் தவிப்பர்கள் நீலாம்பரி இராகத்தைக் கேட்டால் தூக்கம் தானாகவே வந்துவிடும். மன அமைதி இழந்தவர்கள் சாமா இராகத்தைக் கேட்டால் படிப்படியாகக் குணமடைவர். முடக்கு வாதத்தினால் அல்லல்படுவோர் துஜவந்தி இராகத்தைக் கேட்பதன் மூலம் நல்ல பயனடைவர். பூபாளமும், மலையமாருவம் இராகமும் உதயகால இராகங்கள் இவை மக்களை தூக்கதினின்று விழித்தெழச் செய்கின்றன. பிலஹரி இராகத்தைக் கேட்பதன் மூலம் புதிய உற்சாகம், நம்பிக்கை ஏற்படுகிறது. இதயநோய் உள்ளவர்கள் நல்ல இசையைக் கேட்பதன் மூலம் படிப்படியாக குணமடைவார்கள். நாதநாமக்குரியா இராகத்தைக் கேட்பதன் மூலம் புதிய உற்சாகம், நம்பிக்கை ஏற்படுகிறது. இதயநோய் உள்ளவர்கள் நல்ல இசையைக் கேட்பதன் மூலம் படிப்படியாக குணமடைவார்கள். நாதநாமக்குரிய இராகத்தை கேட்பதன் மூலம் தீய வழியை விட்டு விலகிச் சீர்திருந்திய வாழ்க்கையை நடத்த வழியுண்டு. இவ்வாறு இசையை எமது இளம் சந்ததியினர் முறையாகப் பயின்று அன்றாட வாழ்வில் இணைத்துக் கொள்ளல் வேண்டும். முதற்சங்க காலத்தில் தமிழ் அழிந்தபோது எஞ்சிய ஒரே இலக்கியம் தொல்காப்பியம். அதிலிருந்து இன்று வரை தமிழ் இசை மிகவும் சிறப்பாக எமது முன்னோர்களால் பேணப்பட்டது. அதனை முன்னெடுத்துச் செல்வது எமது காலத்தின் கடமை ஆகும்.

## நம் தமிழ் இசை

சங்கம் முதலாய் சரித்திரம் படைத்திட்ட
எம் தமிழ் இசையே வாழி! வாழி!

முத்தமிழில் ஒன்றாய் முறையாய் கலந்தே
இத்தரை மகிழ்ந்திட இதயங்கள் குளிர்ந்திட
சித்தம் நிறைந்திட சிந்தை கிறுங்கிட
பாரினில் ஓங்கிப் பல்புகழ் படைத்தாய்
(சங்கம் முதலாய்....)

காலங்கள் ஓடினும் கலைகள் புதிதாய்
சீலமுடன் சேரினும் சீரிளமை குன்றாது
ஞாலத்தில் நிலைத்தாய் நற்புகழ் நாட்டினாய்
நித்தமும் வளர்ந்தாய் நெஞ்சினில் நிறைந்தாய்
(சங்கம் முதலாய்.....)

ஈ.குமரன்

# ஆலமரத்துப் பச்சைக் கிளி (சிறுகதை)

திரு.ஆ.த.குணதிலகம்
சில்லாலை

அந்த ஆலமரத்தை விட வேறு இடத்தை அறியாது ஆனந்தமாக வாழ்ந்து வந்தது அந்த இளம் பச்சை கிளி. பச்சைப் பசேலென என்றும் நிழல் பரப்பிக்கொண்டு கம்பீரமாக நின்றது அந்தப் பெரும் ஆலமரம். முட்டையிலிருந்து வெளிவந்த நாள் முதல் இருண்ட ஆலமிலைகளுக்கு இடையில் மறைந்து ஆலம் தளிர்களைக் கொத்திக் கொண்டு இரைதேடச் சென்றன் தாய்க்கிளி வரும்வரை காத்திருக்கும். தாய்க்கிளி இரைதேடித் தனுமுண்டு தன் குஞ்சுக்காக வாய் நிறைந்த உணவைக் கொண்டுவரும். தாயின் வரவை ஆவலுடன் காத்திருக்கும் குஞ்சுக்கிளி தன் பிஞ்சு வாயைத் திறக்க தாய்க்கிளி தன் வாயிலிருக்கும் உணவை அன்புடன் சேர்த்து ஊட்டும்.

குஞ்சுக்கிளி வளர்ந்து இரைதேடும் பருவத்தை அடைந்தது. தாய்க்கிளி குஞ்சுக் கிளியைத் தனிமைப்படுத்திவிட்டு பறந்து சென்றுவிட்டது. குஞ்சுக்கிளியோ தான் இரைதேடுவதற்கு எங்கும் செல்லாது அந்த ஆலமரத்தையே தஞ்சமாகக் கொண்டு அதன் குருத்துக்களையும் பழங்களையும் உண்டு திருப்தியுடன் வாழ்ந்தது. அந்த ஆலமரத்தையே இறுதிவரை தன் வாழுமிடமாக்கத் தீர்மானித்து விட்டது. அந்த ஆலமரத்துக்கு வரும் ஏனைய கிளிகள் குஞ்சுக்கிளிக்கு நண்பர்கள் ஆனார்கள். இக்கிளி நண்பர்கள் குஞ்சுக்கிளியைத் தம்முடன் வரும்படி அழைக்காமலும் இல்லை.

“ஏ குஞ்சுக் கிளியே உனக்கு இறகு முளைத்து விட்டது தானே, இன்னும் நீ ஏன் இந்த ஆலமரத்தையே நம்பி கிணற்றுத் தவளையாக வாழ்கிறாய்? எம்முடன் வந்தால் இந்த உலகத்தில் எவ்வளவு அழகான காட்சிகளையும் விதம் விதமான உணவுகளையும் அனுபவிக்கலாம்” என ஆசையைத் தூண்டத் தவறுவதில்லை. அப்போது குஞ்சுக்கிளி “நான் பிறந்த இடத்தையே நேசிக்கும் பண்புடையவன். இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை போல அலையாது, இதுவே போதும் என்ற மனதுடன் இங்கேயே என் வாழ்க்கையைக் கனிப்பேன்” எனக்கூறி மறுத்துவிட்டது. இந்த சம்பாசனைகள் ஆலமரத்தின் காதுகளிலும் விழாமலில்லை. அப்போது ஆலமரம் “நானில்லாது போனால் இக்கிளி எப்படி வாழும்? என்னுடைய வளத்தினாலேயே இக்கிளி வேறெங்கும் செல்லாது என்னிடமே வாழ்கிறது” எனத் தன்னுள் பொருமை கொண்டது.

அந்த ஆலமரத்தை அனுபவிக்காத உயிர்கள் இல்லை எனக்கூறலாம். கொடும் வெய்யிலில் நடந்துவரும் அனைவரும் ஆலமரத்தின் கீழ் சற்று இளைப்பாறாது செல்வதில்லை. புல்லுமேயவரும் ஆடுமாடுகள் கூட வெய்யில் நேரங்களில் அந்த ஆலமரத்தின் கீழ் வந்து படுத்துறங்கும். இழைப்பாறும் மனிதர்கள் ஆலமரத்தின் கீழிருந்து, “என்ன வெய்யில் இந்த ஆலமரம் இல்லையென்றால் இந்த வீதியால் எவரும் போய்வர

முடியாது" என ஆலமரத்தைப் புகழுவது ஆலமரத்துக்கு மேலும் தலைக்கனத்தைக் கொடுத்தது.

குஞ்சுக்கிளி இப்போது வளர்ந்து பார்வைக்கு மிகவும் கவர்ச்சியாக இருந்தது. அது அந்த மரத்தில் வந்து அமரும் ஏனைய பறவைகளையும் மரத்தின் கீழ் வந்து இளைப்பாறும் ஏனைய உயிரினங்களையும் பார்த்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டே தன் வாழ்நாளைக் கழித்தது.

"நான் நிழல் கொடுப்பதால் தானே இந்தக் கிளியும் இக்கிராம மக்களும், ஆடு மாடுகளும் உயிர் வாழ்கின்றன. எனது அருமையை நான் இவைக்குக் காட்டவேண்டுமானால் நான் சில நாட்களுக்கு இவர்களுக்கு நிழல் கொடுக்காது விடவேண்டும்" என ஒரு விஷ எண்ணம் கொண்டது அந்தப் பெரிய ஆலமரம்.

இதை எப்படிச் சாதிக்கலாம் என அது இரவு பகலாகச் சிந்தித்தது. அப்போது அதற்கு ஒரு யோசனை வந்தது. எனது வேர்கள் தானே இந்த நிலத்தில் எங்கும் சென்று நீரை உறிஞ்சி என் இலைகளுக்கு வழங்குகின்றன. எனவே வேர்கள் மூலம் நான் நீருறிஞ்சாது விட்டால் இலைகள் வாடி விழுந்து விடும் அப்போது இங்கு நிழல் இல்லாமற் போகும் என எண்ணியது. உடனேயே அதன் எண்ணப்படி இலைகள் வாடிச் செரிந்தன. மெல்ல மெல்ல முழு இலையும் விழுந்து ஆலமரம் வெறிச்சோடியது.

இப்போது அங்கு வரும் உயிரினங்கள் எல்லாம் வேறிடம் நாடிச் சென்று விட்டன. கிளிமட்டும் அம்மரப் பொந்தில் இருந்து வாடியது. இதைப் பார்த்து பெரும் சந்தோஷமடைந்தது ஆலமரம். அதன் சந்தோஷம் நீண்டநாள் நிலைக்கவில்லை. இப்போது நீரின்மையால் அதன் கிளைகளும் வாடத்தொடங்கின. இந் நிலையிலேயே இது நீரை உறிஞ்ச வேண்டிய தேவை தனக்காக ஏற்பட்டது. அது நீரை உறிஞ்சத் தீர்மானித்தது. ஆனால் வேர்களும், காய்ந்ததால் அவற்றால் நீரை உறிஞ்ச முடியவில்லை. இனித் தான் உயிர் வாழ முடியாததை எண்ணிய ஆலமரம் தன் தீய நோக்கத்தால் தானே தன் அழிவுக்குக் காரணமானேன் என எண்ணி வருந்தியது. இப்போது அது குற்றுயிரும் குறையுயிருமாக நிற்கிறது.

அவ்வழியால் செல்வோர். இவ்வளவு காலமும் இங்கு நிழலாக இருந்த ஆலமரம் பட்டுப்போகிறது. இனி இந்த இடத்தில் ஒரு நிழலுமில்லையே" எனப்பேசிக்கொண்டு செல்வது அரை உயிரில் இருக்கும் ஆலமரத்தின் காதுகளில் விழுகிறது. "என் மீது மற்றப் பிராணிகள் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தார்கள். இவற்றை எல்லாம் நான் மறந்து என் கர்வத்தால் இன்று அழிகின்றேனே, இதை நான் யாரிடம் எப்படிக் கூறுவேன்" என வேதனைப்பட்டது.

காக்கும் கடவுளாகிய விஷ்ணு பரமாத்மாவுக்கு ஆலமரம் வேதனைப்படுவது தெரியாததல்ல அவர் எல்ல உயிர்களையும் காப்பவர். ஆலமரத்தின் கர்வத்தை அடக்க

இதுவே தருணம் என ஆலமரத்தடிக்கு வந்தார். உயிர்கள் மீது கருணை கொண்ட விஷ்ணு இந்த ஆலமரத்தையும் அகந்தை அழித்துக்காத்து ஏனைய உயிர்களையும் காக்கவேண்டும் எனச் சிந்தை உள்ளம் கொண்டார்.

மரத்தடியில் ஒரு ஜீவனும் இல்லை. மரப்பொந்தில் மட்டும் ஒரு உயிர் முனுகும் சத்தம் கேட்டது. எல்லாம் அறியும் விஷ்ணுவிற்கு இது தெரியாததல்ல. அவர் அப்போது தான் இதைக் காண்பது போல் கூர்ந்து பார்த்தபோது அந்தப் பொந்தில் மெலிந்த உடலுடன் பேசத் தைரியமற்று ஒரு கிளி கிடப்பதைக் கண்டார்.

“கிளியே இந்த மரம் பட்டுவிட்டது உனக்குத் தெரியதா? உனக்குத்தானே இறகு இருக்கிறது, வேறு இடம் தேடிப் பறந்து செல்லாது ஏன் இங்கேயே கிடந்து செத்துக் கொண்டிருக்கிறாய்?' எனக் கேட்டார்.

“பகவானே நான் பிறந்த இடம் இவ்வாலமரம், நான் பிறந்த மண்ணை நேசிப்பவன். சுயநலம் கொண்டவனாக இருந்தால் நானும் பறந்து வேறிடம் சென்றிருக்கலாம் தான். ஆனால் என்னைப் பிறப்பிலிருந்து இன்று வரை வளர்த்த இந்த ஆலமரம் அழியும் போது அதனுடன் நானும் அழிவேனே தவிர சுயநலம் கொண்டு நான் இந்த இடத்தை விட்டு வேறெங்கும் செல்லேன்.” என்று ஆலமரத்தின் மீது வைத்த நன்றியுடன் கூறியது. இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஆலமரம்,

“நான் எவ்வளவு அகந்தையுள்ளவன் இந்த அற்ப கிளிக்குள்ள நன்றியுணர்வு என்னிடம் இல்லையே, என் ஆணவத்தாலேயே நான் இன்று அழிந்து கொண்டிருக்கிறேன்” என வெட்கித் தலை குனிந்தது.

பகவான் ஆலமரத்தைப் பொருட்படுத்தாதது போல்

“மோட்டுக் கிளியே இந்த ஆலமரத்துக்காக நீ உன் உயிரை விடப் போகிறாயா? என்னால் காக்கப்படும் எத்தனையோ மரங்கள் இந்த மண்ணில் உண்டு நீ அங்கு சென்று சந்தோஷமாக வாழலாம்” என்று மீண்டும் ஆலமரத்துக்குப் புரியும்படி குத்தலாகக் கூறினார்.

“வாழ்ந்தால் இம்மண் இல்லையேல் மரணம்” எனக்கூறி பகவானே என்னை வற்புறுத்தாதீர்கள் என வேண்டியது. கிளியின் பெருந்தன்மையை ஆலமரத்துக்கு உணர்த்த விரும்பிய பகவான், “கிளியே உன்னுடைய அன்பையும் இலட்சியத்தையும் நான் நன்கு மதிக்கின்றேன். உனக்கு என்னவரம் வேண்டுமோ கேட்டுக்கொள் இப்போதே தந்துவிடுகிறேன்” என மரம் புரியும்படி கூறினார்.

உற்சாகமடைந்த கிளி" பகவானே நான் எனக்காக மட்டும் வாழ்வதானால் நாள் எப்பேதோ வேறிடம் சென்றிருப்பேன் நான் என்னைப் போல் மற்றவரும் வாழவேண்டும் என்ற எண்ணம் கொண்டவன். எனவே என்னை வளர்த்த இந்த ஆலமரம் அழியும் போது எனக்கு வேறுவரம் வேண்டாம். இந்த ஆலமரத்தை வாழவைத்தால் போதும்,. அதன் நிழலில் பல உயிர்கள் வாழும்' எனக் கேட்டது.

இதைக்கேட்ட ஆலமரம் வெட்கித் தலை குனிந்தது. பகவான் "கிளியே உன் பொதுநலத்தை மெச்சுகிறேன். அப்படியே வரம் தந்தேன். நீ முன்போல் சந்தோஷமாக வாழ்வாயாக" என்று கூறி மறைந்தார்.

ஆலமரம் முன்போல் இலைகளுடன் நிழல் பரப்பி நின்றது. மீண்டும் ஆலமரத்தை நாடி அனைத்து உயிரினங்களும் வந்து சென்றன. இப்போது ஆலமரம் கர்வம் கொள்ளாது வந்தோரை வரவேற்கும் நற்பண்புடன் கம்பீரமாக நிழல் கொடுத்துக் கொண்டு தானும் சந்தோஷமாக வாழ்ந்தது

"உப்பிட்டவரை உள்ளளவும் நினை"

## காலைப் பொழுது

கூரிரு ளகன்றது கூவின கோழி
குருவிக ளெழுந்தன மறைந்தன விண்மீன்
ஏரியிற் றாமரை யினமலர் மலரும்
இறையவன் கோவிலில் மணியொலி கேட்கும்
ஊரினிற் றொழில்புரி மாந்தர்க ளெழுந்தார்
உயர்மரக் கொம்புவிட் டோடின காக்கை
சேர்க்கிழக் கெனுந்திசை வெளுத்தது மெல்லச்
செங்கதி ரவனுத யஞ்செய்கிறனே

இரவினி லுலகினை மறைத்துவைத் திருந்த
இருளினைத் துரத்தியே பிடிப்பது போலக்
கிரணங்க ளெனும்பல சுரங்களை நீட்டிக்
கீழ்த்திசை நின்றுமென் மெல்லெனக் கிளம்பித்
தருமெரித் திரளெனத் தாமிரத் தாற்செய்
தட்டம தெனப்பனிப் பகையினைச் சாடித்
திருவுறு முலகினர் மகிழ்வுற வந்து
செங்கதி ரவனுத யஞ்செய்கி றனே

**சோமசுந்தரப் புலவர்**

# பல்லாற்றல் வாய்ந்த படைப்பாளி - ஐ.சாந்தன்

க.துஷ்யந்தன்,
சுதுமலை

சாகித்திய மண்டலப் பரிசென்பது எழுதத் தொடங்கும் எந்தவொரு எழுத்தாளனதும் இலட்சியமாகவிருக்கும். அந்தப் பரிசை இரு தடவைகள் பெற்ற ஒருவர் அதுவும் தமது தமிழ் எழுத்துக்களுக்காக மட்டுமன்றி தமது ஆங்கிலப் படைப்புக்களுக்காகவும் பெற்றவர் ஒருவர் வலி. தென் மேற்குப் பிரதேசத்தில் வாழ்கிறார் என்பது எம்மில் பலரும் அறியாதது. இலங்கையில் ஆங்கில ஆக்க இலக்கியத்திற்காக முதன் முதலில் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற தமிழர் அவர் தான் என்பதும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளுக்கும் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற ஒரே எழுத்தாளர் அவர்தான் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

இவை மட்டுமன்றி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்ட, இலங்கையின் அதி கூடிய பெறுமானம் கொண்ட, "பெயர்வே" இலக்கிய விருதுகளில் சிறந்த ஆங்கில நாவலுக்கான விருதினையும் முதன் முதலில் பெற்றவர் அவர்.

தமது ஒரே ஒரு ஊரிலே தமிழ் சிறுகதைத் தொகுதிக்கு 1975ம் ஆண்டில் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற அவர் மீண்டும் 2000ஆம் ஆண்டில் தமது ஆங்கிலச் சிறுகதைத் தொகுதிக்காக அப்பரிசைப் பெற்றார். தமிழ் எழுத்துக்கள் மட்டுமன்றி ஆங்கில எழுத்தாக்க முயற்சிகளிலும் முனைப்புடன் ஈடுபட்டு இலங்கையின் ஆங்கில எழுத்துச் சூழலிலும் வெற்றிகளை அடைவதுடன் வெளியுலகிலும் குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்த்திருப்பதும் குறிப்பிடப்பட வேண்டியவை.

1947 இல் சுதுமலையில் பிறந்த ஐயாத்துரை சாந்தன் சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம், மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆகியவற்றில் பயின்றார். அரசாங்க சேவையில், சுகாதார திணைக்களத்தில் பொறியியல் பிரிவு, கட்டடத் திணைக்களம் ஆகியவற்றில் பொறியியல் வடிவமைப்பு வரைஞராகப் பணியாற்றினார். அதன் பின் பொறியியல் மற்றும் முதுகலைமாணி, முதுவிஞ்ஞானமாணி ஆகிய பட்டங்களைப் பெற்றார்.

1966 இல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு முடிவுகளுக்காகக் காத்திருந்த வேளையில் தமது முதலாவது கதையை எழுதியதன் மூலம் தமிழ்ப் படைப்பிலக்கிய உலகிற்கு வந்த சாந்தன், எழுத்துலகில் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். 1990 இலிருந்து தம்முடைய எழுத்து முயற்சிகளை ஆங்கிலத்திலும் மேற்கொள்ளலானார். அவரது தமிழ் நூல்களில் பாதிக்கும் மேற்பட்டவை தமிழ் நாட்டிலும் ஆங்கில நூல்கள் கொழும்பிலும் வெளியானவை.

அவர் எழுதிய 20 தமிழ் நூல்களில் சிறுகதைத் தொகுப்புக்கள், நாவல், இலக்கியக் கட்டுரைகள், மொழிபெயர்ப்பு, ருஷ்ய நாட்டுப் பயண நூல், ஆபிரிக்கப் பயண நூல் என்பன அடங்கும். 1984இல் ருஷ்ய மொழியிலும் தேர்ச்சி பெற்றவர். ருஷ்யாவில் ருஷ்ய மொழி ஆசிரியர்களுக்கான பயிற்சியை மேற்கொண்டவர்.

அவரது ஆங்கில நூல்களில் 3 சிறுகதைத் தொகுப்புக்கள், 2 நாவல்கள் ஒரு கவிதைத் தொகுப்பு என்பனவும் அடங்கும்.

ஆங்கிலத்தில் அவரது முதலாவது நாவலான "சூறாவளி" யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப்படையின் காலத்தில் இடம்பெற்ற கொடுமைகளைக் கூறும் நாவல், யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப்படையின் காலத்தில் இடம்பெற்ற பேரழிவை முன்வைத்து ஈழத்தவரால் எழுதப்பட்ட முதல் நாவலும் அதுவாகும்.

அவரின் அடுத்த நாவலான "தண்டவாளங்கள் சமாந்தரமாக ஓடம்," "பெயர்வே" இலக்கிய விருதுடன், 2015க்கான கொடகே நிறுவனத்தினரின் சிறந்த ஆங்கில நாவலுக்கான பரிசையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நாவல் கடந்த வருடம் இந்தியாவிலுள்ள ராஜஸ்தான் மாநிலத்தில் உதய்ப்பூர் நகரில் இடம்பெற்ற சர்வதேச எழுத்தாளர் விழாவிலும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

உருவத்திலும் உள்ளடக்கத்திலும் சாந்தனுடைய கதைகள் புது முனைப்புக்களைக் காட்டிய முன்னோடிகள் என இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள தமிழ் மற்றும் ஆங்கில விமர்கர்கள் கூறுவர்.

சாந்தனுடைய தமிழ் நூல்கள் முக்கியமான விமர்சகர்களான பேராசிரியர். க.கைலாசபதி, திரு.ஏ.ஜே.கனகரத்தினா, கலாநிதி.நா.சுப்பிரமணியன், பிரபல எழுத்தாளர்கள் அசோகமித்திரன், நீல.பத்மநாபன் போன்ற பலரினதும் பாராட்டைப் பெற்றுள்ளன.

அதேபோல் ஆங்கிலப் படைப்புக்கள், றெஜி சிறிவர்த்தன, லின் ஓக்கர்ஸ், பேராசிரியர் குணதிலக, பேராசிரியர் செல்வா கனகநாயகம், கார்ள் முல்லர், சந்தன திசநாயக்க, விஹங்க பெரேரா, போன்ற முக்கிய விமர்சகர்களின் வரவேற்பைப் பெற்றவை.

இவை தவிர இலங்கையிலும், இந்தியாவிலும் வெளியான பல்வேறு புகழ் வாய்ந்த தமிழ் மற்றும் ஆங்கிலத் தொகுப்பு நூல்களிலும் அவரது படைப்புக்கள் இடம் பெற்றுள்ளன. அது மட்டுமன்றி அவரது ஆக்கங்கள் சிங்களம், இந்தி, ருஷ்யன், மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவருடைய சிங்கள மொழிபெயர்ப்புக் கதைகளின் தொகுதியொன்றும் கொழும்பில் வெளியாகிற்று.

இலக்கியத்தில் மட்டுமன்றி பொறியியலிலும் நுண்கலைகளிலும் சூழலியலிலும் ஆர்வம் மிக்கவர். அவருடைய முதுகலைமாணிப் பட்டம் ஆங்கில இலக்கியத்தில் பெறப்பட்ட வேளையில் அவருடைய முது விஞ்ஞானமாணிப் பட்டம் சூழலியலில் பெறப்பட்டது. இங்கிலாந்தின் நீர் மற்றும் சூழல் கழகம், ஆஸ்திரேலியாவின் நீர் மற்றும் கழிவு நீருக்கான அமைப்பு ஆகியவற்றில் உறுப்பினராக இருந்த சாந்தன் உள்ளூர் நிலைமைகளின் கீழ் நீர் பற்றிய சில ஆய்வுகளையும் மேற்கொண்டதோடு அவை பற்றிய அவருடைய ஆய்வு ஒன்று கண்டியில் இடம்பெற்று சர்வதேச பொறியியல் மாநாடொன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

எழுபதுகளின் தொடக்கத்தில் பிரச்சினை தீவிரம் கொள்ளத் தொடங்கிய காலத்திலிருந்து சொந்த மண்ணோடு இணைந்திருந்த காரணத்தால் அவருடைய ஆக்கங்கள் அக்கால வாழ்வினைப் பிரதிபலிப்பனவாக அமைந்தன. சாந்தனுடைய கதைகளில் இன்னொரு முக்கிய உள்ளீடு சூழல் பற்றிய இயல்பான பிரக்ஞை ஆகும். அவருடைய பல கதைகளில் இந்த அம்சத்தைக் காணலாம்.

இலக்கியப் பங்களிப்புக்களுக்குக் குறையாத பங்களிப்பை அவர் உயர் கல்வித்துறையிலும் செலுத்தினர். போராட்ட காலத்தில் இலகுவில் இடம்பெயர்ந்திருக்க கூடிய வாய்ப்புக்கள், தகுதிகளிருந்தும் சொந்த மண்ணிலிருந்து பணியாற்றி பல தொழில்நுட்ப, சுகாதார உத்தியோகத்தர்களை உருவாக்கியதிலும் சாந்தனின் பங்கு சிறப்பானது என்பதும் குறிப்பிடவேண்டியது.

இவற்றோடு மிகச் சிறந்த கணனி உதவியுடனான பொறியியல் வரைதல் பயிற்றுவிப்பாளர், உயர்தரங்களுக்கான ஆங்கில ஆசிரியர் என்று பெயர்களையும் பெற்றவர். உயர்தொழில் நுட்பக் கல்லூரியில் பொறியியல் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு துறைகளிலுமே உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்குமான வருகை விரிவுரையாளராக இருந்த ஒருவர். பல்கலைக்கழகத்திலும் சிறிது காலம் மொழிபெயர்ப்புத்துறை வருகை விரிவுரையாளராகப் பணி புரிந்தவர். 2005இல் வலி தென் மேற்கு பிரதேச செயலகத்தின் கலை ஞாயிறு விருது பெற்றார்.

இலக்கியத்தைப் பொறுத்தளவில் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இடம்பெற்ற சர்வதேச இலக்கிய மாநாடுகள், விழாக்களில் பங்குபற்றியவர். 2016இல் அக்ரோபர் மாதத்தில் இந்திய எழுத்தாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு இந்தியாவின் உதய்ப்பூர் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சர்வதேச எழுத்தாளர் விழாவின் போது அதற்கு அழைக்கப்பட்டிருந்த அவர் அங்கு "சாகித்ய ஸ்ரீ" எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

சாந்தனுடைய ஆங்கில - தமிழ் எழுத்து முயற்சிகளும் ஏனைய பணிகளும் மேலும் தீவிரமாக அமையவேண்டும் என்பது காலத்தின் தேவையாகிறது.

## சாந்தனின் நூல்கள்

பார்வை (சிறுகதைத் தொகுப்பு), *1970*

கடுகு (குறுங்கதைகள்), *1975*

ஒரே ஒரு ஊரிலே (சிறுகதைத் தொகுப்பு) சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது *1975*

ஒட்டுமா (நாவல்) -, வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம். *1978*

முளைகள் (சிறுகதைத் தொகுப்பு) சென்னை என்.சி.பி.எச். *1982*

கிருஷ்ணன்தூது (சிறுகதைத் தொகுப்பு) பாளைங்கோட்டை, இலக்கியத்தேடல் *1982*

ஆரைகள் - (நெடுங்கதைகள்), ரஜனி பிரசுரம், யாழ்ப்பாணம் *1985*

ஒளி சிறந்த நாட்டிலே (சோவியத் பயணநூல்), ஈழமுரசு வெளியீட்டகம், யாழ்ப்பாணம்*1985*

இன்னொரு வெண்ணிரவு (சிறுகதைத் தொகுப்பு), வெண்புறா வெளியீடு யாழ்ப்பாணம் *1988*

காலங்கள் (சிறுகதைத் தொகுப்பு), வெண்புறா வெளியீடு, யாழ்ப்பாணம் *1994*

யாழ்இனிது (சிறுகதைத் தொகுப்பு), சென்னை, கோரி வெளியீடு *1998*

ஒருபிடி மண் (சிறுகதைத் தொகுப்பு, (சென்னை, நர்மதா, *1999*

எழுதப்பட்ட அத்தியாயங்கள் (சிறுகதைத் தொகுப்பு) மல்லிகைப் பந்தல், கொழும்பு *2001*

இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம் - (இலக்கியக் கட்டுரை), மூன்றாவது மனிதன் வெளியீடு, கொழும்பு, *2005*

பூமியின் மைத்திற்கு ஒரு பயணம் (மொழிபெயர்ப்பு - Journey to the centre of the earth - Jules Verne), யாழ் - / ப்ரெஞ்சு நட்புறவுக் கழக வெளியீடு, *2006*

சாந்தனின் எழுத்துலகம் (தேர்வுத்தொகுப்பு) - அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம் சென்னை, *2006*

விளிம்பில் உலாவுதல் (குறுநாவல்கள்), அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம் சென்னை, *2006*

காட்டு வெளியிடை (கென்யப் பயணநூல்) இருவாட்சி சென்னை, *2007*

உலக இலக்கியம் - (இலக்கியக் கட்டுரை) அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம் *2007*

காட்டு வெளியிடை (கென்யப் பயணநூல்) சென்னை, இருவாட்சி *2007*

உலக இலக்கியம் - (இலக்கியக் கட்டுரை) அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம் *2010*

சிட்டுக்குருவி, அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், சென்னை *2014*

என்முதல் வாத்து - (மொழிபெயர்ப்பு கதைத் தொகுப்பு), Godage Bros. Colombo, 2016

The Sparks (Collection of short stories), 1920

In Their Own Worlds (Collection of sport stories) (State Literary Award winner) Godage Bros. Colombo, 2000

Survival and Simple Things (Prose Poems), 2002

The Northern Front (Colletion of short Stories), Godage Bros, Colombo

The Whiorl Wind (Novel) 2011, VUS Pathippagam, Chennai. Best Novel A ward, Godage

Rails Run Parallel (Novel) 2015, Paw Print publishers, Colombo, Short Listed Fairway Best Novel Award

# தற்காப்புக் கலைகள்

திரு.க.மோகனதீபன்
சித்தன்கேணி

தற்காப்புக் கலையானது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அவசியம் தெரிந்து வைத்திருக்க வேண்டிய ஒன்றாகும். தற்காப்புக்கலை அவசியம் இல்லை என்று எவரும் கூற முடியாது. விலங்குகள் கூட தன்னை எதிரிகளிடம் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு தற்காப்புக்கலையில் கை தேர்தவையாக உள்ளன. இன்று உலகெங்கும் பல வகையான தற்காப்புக்கலைகள் பயிற்றப்பட்டு வருகின்றன. இவை அந்த நாட்டின் சூழ்நிலை, சீதோஷன நிலை, பண்பாடு போன்றவற்றிற்கு ஏற்பவே தெரிவு செய்யப்படுகின்றன. கராத்தே, ஜுடொ, குங்.'.பூ, வர்மக்கலை, களரி, சிலம்பு போன்றனவற்றை உதாரணமாக கூறமுடியும். நாம் இங்கு சில தற்காப்புக் கலைகளை மிகவும் சுருக்கமாக பார்ப்போம்.

**ஜீடோ**

ஜுடோ என்றால் சுலபமான வழி என்று பொருள்படும். ஜுடோ ஒரு ஜப்பானியச் சொல் ஜுடோவை உலகிற்கு அறிமுகம் செய்தவர் டாக்டர் ஜுகோரோகேனோ இதில் தூக்கி எறிதல். பூட்டு, எறிதல்களுக்கு தடுப்பு முறைகள் போன்றன அடிப்படை அம்சங்கள் எனப்படும்.

ஜுடோவில் இடுப்பால் எறிதல், தோள் எறிதல் போன்ற பல வகையான எறிதல் முறைகள் காணப்படும். இம்முறைகள் மூலம் எந்த ஒரு உடற்பருமனான மனிதனையும் சுலபமாக சுழற்றி எறிய முடியும். அத்தோடு கழுத்துப் பிடிகள், கால்பூட்டு இணைப்புப் பூட்டுக்கள் போன்ற பூட்டுக்கள் மூலம் ஒரு நபரை செயல் இழக்கச் செய்யவோ அல்லது நிரந்தரமாக செயல் இழக்க வைக்கவே முடியும்.

**குங்ஃபூ**

குங்.'.பூ வன்மையாக இயங்குவது, மென்மையாக இயங்குவது என இரு வகைப்படும். வன்மையான இயக்கமாக குத்துக்கள், உதைகள். தடுத்தல்கள் போன்றன அடிப்படையாக இருக்கும். மென்மையான இயக்கத்தில் மனோசக்தியைக் கொண்டு உடல்வலு இன்றி சாதிக்க முடியும். மனோ சக்தியைப்பெறுதல் மிகவும் நீண்ட கட்டுப்பாடான கடுமையான பயிற்சிகளின் பின்னரே சாத்தியமாகும் என்பதால் இதனை பயின்றவர்கள் மிகமிக சிலரே

**வர்மக்கலை**

வர்மக்கலை மிகவும் நுட்பமான தற்காப்புக் கலையாகும். இது சித்தர்களால் கண்டறியப்பட்டு மக்களிற்கு வழங்கப்பட்ட அரும்பெரும் பொக்கிஷமாகும். இதில் நரம்பு முடிச்சுக்களிலும், எலும்பு இணைப்புக்களிலும் உள்ள இரகசிய சக்தி செயல் இழக்கச் செய்யப்படுகின்றது.

இதன் மூலம் ஒருவரை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ அல்லது அவரின் குறிப்பிட்ட உற்பாகத்தையோ அல்லது முழு உடலையோ செயல் இழக்கச் செய்ய முடியும். அத்தோடு மற்றைய கலைகளிற்கு இல்லாத சிறப்பு இக்கலைக்கு உண்டு. இக் கலையில் தாக்கவும் முடியும். சிகிச்சையளிக்கவும் முடியும். அதாவது ஓர் வர்மபாதிப்பை அதற்கு ஏற்ப இன்னோர் வர்மத்தைப் பயன்படுத்துவதன் மூலம் போக்க முடியும்.

வர்மக் கலையின் தாக்கத்தால் ஏற்படும் விளைவுகளைக் கொண்டு நான்கு பிரிவுகளாகப் பார்க்கலாம்.

01. படுவர்மம்
02. தட்டுவர்மம்
03. தொடுவர்மம்
04. நோக்குவர்மம்

**படுவர்மம்**

இதில் பன்னிரண்டு வகைகள் உண்டு. இவற்றினால் தாக்கப்பட்டால் மயக்கம் ஏற்படும். வாய்பிளந்து நாக்கு வெளியே தள்ளும். வாயில் நுரை தள்ளும். கண்களினால் இரத்தம் வெளியேறும். மிகவும் பலமாக தாக்கப்பட்டால் மரணம் உடன் வந்து அணைத்துக்கொள்ளும்.

**தட்டுவர்மம்**

இதில் எட்டுவகை உண்டு. ஒரு விரலினால் தட்டினால் வலி தெரியாமல் உடல்பாதிப்பு ஏற்படும் தாக்குதலின் வலுவைப் பொறுத்து உடல் செயல் இழக்கும். அல்லது மரணம் ஏற்படும்.

**தொடுவர்மம்**

இதில் தொண்ணூற்று வகை உண்டு. இவ் வர்மத்தால் மரணம் உடனடியாக ஏற்படாது. எனினும் பாதிக்கப்பட்ட பாகம் செயல் இழக்கும்

**நோக்கு வர்மம்**

இது கண்களின் தீட்சாணியத்தை கொண்டு செயல்படுகின்றது. நோக்குவர்மத்தை மிக நீண்ட காலம் பயின்றவரே மிகவும் சிறப்பாக செயற்படுத்துவார்.

ஒவ்வோர் வர்மபாதிப்பிற்கும் குறிப்பிட்ட இழக்கு முறைகள் உள்ளன. அவற்றை உரிய நேரத்தில் வழங்குவதன் மூலம் தாக்குதலின் பாதிப்பில் இருந்து தப்பிக்கலாம். சில வர்மங்களினால் தாக்கப்பட்டால் உடனடியாக பாதிப்பு ஏற்படாது. எனினும் சில மாதங்களின் பின் மரணம் ஏற்படலாம்.

**கராத்தே**

கராத்தே என்றால் "வெறும் கையால் தாக்குவது" என்று பொருள். கராத்தேயானது குத்து, உதை, தடுப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இத்துடன் பல நுட்பமான முறைகளும் இணைக்கப்பட்டிருக்கின்றது. மற்றைய கலைகளில் உள்ளது போல் கராத்தேயிலும் பல பாணிகள் உள்ளன. சோட்டோகான், பூடோகான், ஜிட்சுபி, ஜிடஜீட்சு, சுஜோகான், சுகொகாய் என்பன அவற்றுள் சிலவாகும் கராத்தேயில் கைமொளி, விரல், கையின் பக்கவாட்டுப் பகுதி, உள்ளங்கை, முழங்கை, பாதம், கால்பாதத்தின், பக்கவாட்டுப் பகுதி என பகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

கைமொளியால் குத்துதலில் பலவகை உண்டு. உதைத்திலும் முன்பக்க உதை பக்கவாட்டு உதை முன்பக்க சுழற்சி உதை, பின்பக்க உதை, பின்பக்க சுழற்சி உதை என பல வகை முறைகள் உள்ளன. சுருக்கமாக சொல்வதானால் உடலின் பாகங்களை எவ்வாறு தற்பாதுகாப்பிற்காக பயன்படுத்துவது என்று கற்பிக்கப்படும்.

பொதுவாக தற்காப்புக் கலையை கற்பிப்பதற்கு முன் உடலை வலுவாக்கும் பல உடற்பயிற்சிகள் வழங்கப்படும் தற்காப்புக் கலையில் அவர் அடைந்த தகுதியைக் காட்டுவதற்குக் வெள்ளை, மஞ்சள், பச்சை, நீலம், ஊதா, மண்ணிறம், கறுப்பு, நிறப்பட்டிகள் வழங்கப்படும். பொதுவாக இக் கலைகளைக் கற்பதனால் ஒருவரின் போரிடும் ஆற்றலோடு மனஉறுதி, தெளிவு, நிதானம், மன ஒருமைப்படுத்தும் தன்மை, போன்றவற்றில் மேன்மை ஏற்படுகிறது.

**சோ. நடராஜன்**

சோ. நடராஜன் சோமசுந்தரப்புலவரின் மகன். இவர் நவாலியூர் சத்தியநாதன் என்னும் புனைபெயரில் கவிதைகள், சிறுகதைகளை எழுதியுள்ளார். மேலும் சமஸ்கிருதம், ஆங்கிலம், சிங்களம் எனும் மொழிகளிலிருந்து நாடகங்கள், கட்டுரைகளைத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். இரவிந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலி, தம்மபதம், மேகதூதம், பூவைவிடு தூது முதலானவை அவரின் சிறந்த மொழிபெயர்ப்புக்களாகும். அவரின் ஆளுமைக்கு எடுத்துக்காட்டாக கீதாஞ்சலி மொழிபெயர்ப்பிலிருந்து ஒரு பாடல் தரப்படுகின்றது

சிறுமலர் கொய்தி சற்றுந் தாமதித் திடுதல் வேண்டா
வெறுமலர் வாடி மண்மீ துறுமுனங் கொய்து கொள்வாய்
நிறமிலை யானா லென்ன நின்னருட் சேவைக் கின்னே
குறைபல பொறுத்துக் கொண்டு கொய்திடு குணங்களானாய்.

**(கீதாஞ்சலி 10, 11)**

# முதுமையே முதுசப் பொக்கிஷங்கள்

கந்தையா கனகசபை
சண்டிலிப்பாய்

இல்லற வாழ்க்கையில் பல அனுபவங்களையும், பல முக்கிய தடயங்களையும் சேமித்து வைத்திருக்கின்ற பொக்கிசங்களே முதியவர்கள் இலங்கையில் அறுபது வயதைக் கடந்தவர்கள் முதியவர்கள் எனும் பட்டியலில் அடங்குகின்றார்கள். இல்வாழ்க்கையின் வரலாற்றை, பண்பாட்டை எடுத்துக்காட்டுகின்ற முக்கிய அடையாளமே முதியவர்கள் தான். இவர்கள் வயதில் மூத்தவர்களாக இருப்பதால் மட்டுமல்ல அறிவில் சிறந்தவர்களாக இருப்பதனாலும் தான் முதியவர்கள் எனப்பெயர் ஏற்பட்டது. உலக நாடுகளில் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. எமது நாட்டிலும் இதே நிலைமையை நாம் அவதானிக்கின்றோம். முதியவரை ஓரிடத்தில் இருந்து உணவு, உடை மற்றும் வைத்திய பராமரிப்பு செய்வது அரசுக்கு பெரும் சுமையாக இருக்கின்றது. எனவே அவர்களிடம் இருக்கின்ற திறமை, அனுபவம், ஆளுமை முதலியனவற்றை நாட்டிற்கு மீள்சுழற்சி செய்யும் பிரயத்தனங்கள் இன்றைய அரசால் முன்னெடுக்கப்படுகின்றன. முதுமையின் ஆரம்பம் அறுபது அகவையில் என்றாலும் சேவைக்காலத்தை அறுபத்தி ஐந்தாக உயர்த்தி விட்டார்கள். தனியார் துறைகளில் தகுதியான முதியவர்களின் சேவை வேண்டப்படுகின்றது.

முதியவர்கள் எமது வாழ்க்கைக்கு எவ்வளவு அத்தியாவசியமானவர்கள் என்று எப்போதாவது நாம் சிந்தித்துப் பார்த்திருக்கின்றோமா? இல்லை. இன்று எத்தனையோ நவீன விஞ்ஞானத்தின் மத்தியில் இயந்திர வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். அவற்றிற்கு அடிமைப்பட்டு நம்மக்கள் அவல வாழ்க்கை வாழ்கின்றார்கள். சரியாக நின்று சிந்திப்பதற்குக்கூட நம்மக்களுக்கு நேரம் இல்லை. உணர்வுகளை இழந்து சடப்பொருளாக வாழ்கின்றோம். ஆனால் எமது மூர்த்தோர்கள் உணர்வு பூர்வமாக இலட்சியத்திற்காக, கொள்கைக்காக திட்டமிட்டு வாழ்ந்தவர்கள். அவர்கள் வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தினையும் இலட்சியத்திற்காக அர்ப்பணித்து அடிமனதிலே பதிய வைத்திருந்தார்கள். அவர்களின் அனுபவங்களைக் கொண்டு எமது வாழ்க்கையை நிச்சயமாக செம்மைப்படுத்திக் கொள்ளமுடியும். அவர்களுடன் இணைந்து, அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டால் எமது வாழ்க்கையே நிச்சயமாக வளம்படுத்திக் கொள்ளமுடியும். அவர்களும் இளமைக்காலத்தை அனுபவித்தவர்கள் தான். அவர்களுக்கு எதுவும் தெரியாது என்று நாம் கூறிவிட்டு புறம்தள்ளிவிட முடியாது. அவர்களைத் தேடிச்சென்று அவர்களின் அனுபவங்களை நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும். அவர்களை தற்பொழுது "பழசு" என்று ஓர் புனை பெயர் வைத்து அவர்களின் கருத்துக்களை ஏற்க தற்போதய "இளசுகள்" மறுப்பது மட்டுமன்றி அவர்களுடன் வாக்குவாதம் இட்டு மதிப்பும் கொடுக்கின்றார்கள் இல்லை. ஆனால் நம்மால் மதிக்கப்பட வேண்டிய முதியவர்கள் தற்போது என்ன நிலையில் உள்ளார்கள் என்றால் நாம் வெட்கப்பட வேண்டியவர்களாக

உள்ளோம். அவர்கள் இளம் வயதினரால் கவனிக்கப்படுகின்றார்களா? இல்லவே இல்லை ஒரு சில இளம் வயதினரால் கவனிக்கப்படுகின்றார்கள். முற்றுமுழுதாக கவனிக்கப்படுவதில்லை. இதுவே உண்மை.

முதியவர்கள் பெரும்பாலும் உதவி தேவைப்படும் நிலையிலேயே இருக்கின்றார்கள். தங்களுடைய தனிமையைப் போக்குவதற்கு வழிவகையைத் தேடுகிறார்கள். உறவுக்கும் அன்பிற்கும் ஏங்கி நெஞ்சம் புண்ணாகி துன்பத்தில் ஆழ்ந்து விடுகின்றனர். சில வீடுகளைத் தவிர மற்றைய வீடுகளில் முதியோரை, வேண்டாத ஒன்றாகவே கருதுகின்றார்கள். இன்றைய இளையவர்கள் பெற்றோரை மதிப்பதற்கும் அவர்களின் அறிவுரைகளை கேட்பதற்கும் பின்நிற்கின்றார்கள். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பது பழமொழி. வெளிநாட்டுக் காசு மட்டும் மூத்தோரின் மனப்புண்ணுக்கு மருந்தாகாது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். இன்றைய இளைஞர்கள் தான் நாளைய முதியவர்கள். அவர்கள் தான் நாட்டின் எதிர்காலத் தலைவர்கள். அவர்கள் தான் நாட்டைக் காப்பவர்கள். அத்தகைய சிறியோர்கள் முதியவர்களை கவனிக்காமல் விடுவது எமது சமூகத்திற்கே இழிவானதாகும்.

இன்று வயது வந்த முதியவர்கள் அநாதவராக விடப்படும் நிலையினை நாம் கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது. அநாதரவாக விடப்படும் முதியவர்களை பேணி அவர்களுக்கு உறைவிடம் கொடுப்பதற்காக அரசும், வேறு பல தனியார் அமைப்புக்களும் முதியோர் இல்லங்களை அமைத்து அவர்களை அன்பாக அரவணைத்து பேணி பாதுகாக்கின்றன. அவர்களுக்கான சகல வசதிகளையும் செய்து கொடுத்து இருக்கின்றன. எப்படியான வசதியான வாய்ப்புக்கள் இருந்தாலும், மெத்தை வசதிகளோடு கூடிய படுக்கை அறை வசதிகள் இருந்தாலும் தம் மக்களுடன், தம் பேரப்பிள்ளைகளுடன் அளவளாவிப் பேசி வாழ்வைப் போல சந்தோசம் வாழ்க்கையில் கிடைக்குமா? இல்லவே இல்லை. தம் பெற்றோரை முதியோர் இல்லங்களில் சேர்த்தவர்களில் பலர் அந்தப் பக்கம் போவதுமில்லை. தம் பிள்ளைகளை கூட்டிச்சென்று தம் பெற்றோருக்குக் காட்டுவதுமில்லை. பேரன், பேத்திகளின் அரவணைப்பில் வாழ்ந்த மழலைகள் அவர்களை காணத்துடிக்கின்றார்கள். அவர்களைப் பிரிய மனமில்லாதவர்களாக இருக்கின்றார்கள். அந்த மழலைகளின் உணர்வுகளை பெற்றோர்கள் எள்ளளவும் சிந்திப்பதில்லை. இதுதான் தற்போதய கலியுக காலத்தின் நாகரீகம்.

முதியவர்களும் ஒரு வகையில் சிறியவர்கள் தான் சிறியவர்களைப் போன்று முதியவர்களுக்கும் நிறைய ஆசைகளும், ஏக்கங்களும் உண்டு. அவற்றை நிறைவேற்ற வேண்டிய கடமை எமைச்சார்ந்து உள்ளது. வள்ளுவரும் தனது ஈரடிகள் மூலம் அங்க இயலில் "பெரியாரைப் பிழையாமை" அதிகாரத்தில்

"பெரியாரைப் பேணா(து) ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும்" (குறள் 892)

அதாவது பெரியவர்களைப் போற்றாமல் ஒழுகுவானாயின், அவ்வொழுக்கம் அவரால், எல்லோராலும் இகழப்படும் நீங்காத துன்பத்தைத் தரும் என்று கூறுகிறார். வீடுகளில் மூத்தவர்களின் தேவை என்பது இன்று இல்லாது போய் விட்டது. குழந்தைப் பராமரிப்புக்கு மட்டுமே மூத்தோர்கள் பயன்பாடு உள்ளவர்கள் என அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர். வீட்டில் விருத்தினர்கள் வந்தால் கூட ஒதுங்க வேண்டியவர்களாக உள்ளார்கள். அன்பைக் கொட்டி, பண்பை வளர்த்து, நெஞ்சை உருக்கி சமூகத்திலே நிமிர்ந்து வீறு நடைபோடச் செய்த பெற்றோர்க்கு "முதுமை" எனும் பெயர் சூட்டி தனிமைப்படுத்தி விடுகின்றார்கள். முதுமையில் கொடுமை தனிமை ஆகும். மூத்தோர்கள் சமூகத்தில் வைத்து பராமரிக்கப்படும் போது அவர்களின் முதுமையில் தேடல்களுக்கான அம்சங்கள் கிடைத்து விடுகின்றன. நாட்டிலே அமைந்திருக்கின்ற முதியோர் இல்லங்களால் வயோதிபர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரதீர்வு வழங்க முடியாது. மூத்தோரைப் பராமரித்தலே இன்றைய நாகரிகத்தின் வெளிப்பாடு. எனவே எமது பெற்றோராகிய முதியோர்களை வயோதிப காலங்களில் பராமரித்து முதுமைக்கு தனிமையை இடம்கொடாமல் அவர்களின் எண்ணங்களை புரிந்து அவர்கள் வாழும் காலத்தில் தேவையான பணிகளைச் செய்து, அவர்களை இன்புறச் செய்து அவர்களை வழியனுப்புவதே நாம் பெற்றவர்களுக்கு செய்யும் காலத்தின் கடமையாகும்.

**மாதகல் மயில்வாகனப் புலவர்**

மயில்வாகனப் புலவர் மாதகற் கிராமத்திலே பிறந்தவர். இவருடைய தந்தையார் பெயர் சுப்பிரமணியம் எனவும், தாயார் பெயர் சிதம்பரம் எனவும் அறியப்படுகின்றது. கண்டியரசன் மீது கிள்ளை விடு தூது பாடிய மாதகல் சிற்றம்பலப் புலவரின் சகோதரியார் புதல்வரே மயில்வாகனப் புலவர் என்றும் கூறப்படுகின்றது. இவர் இளமையில் தம் மாமனாரிடம் கல்வி கற்றுச் சிறந்த பாண்டித்தியமடைந்தார். இவர் யாழ்ப்பாண மன்னர் காலத்தில் வையாபாடல் என்னும் நூலை இயற்றிய வையாபுரி ஐயர் மரபில் உதித்தவர்.

மயில்வாகனப் புலவர் காலம் 18ஆம் நூற் றாண்டின் முற்பகுதியெனக் கொள்வர் ஒரு சாரார். 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் எனக் கொள்வர் பிறிதொரு சாரார். இவர் யாழ்பாண வைபமாலை என்னும் வரலாற்று நூலினையும் புலியூரந்தாதி, காசியாத்திரை விளக்கம் என்னும் நூல்களை எழுதியுள்ளார்.

புலியூரென்பது சிதம்பரத்துக்கு வேறொரு பெயர். புலியூரந்தாதி சிதம்பரத் திருத்தலத்தின் மீது பாடப்பட்ட பிரபந்தமாகும். மயில்வாகனப் புலவரின் செய்யுள் யாக்குந் திறனை நன்கு புலப்படுத்துகின்றது. இந்நூலிற் காணப்படும் சிறப்புப் பாயிரம் வரதபண்டிதர் பாடியதென்பர். காசியாத்திரை விளக்கம் புலவரவர்கள் காசிக்குச் சென்று திரும்பிய பின்னர் எழுதியது. யாழ்ப்பாண வைபவமாலை" என்பது யாழ்ப்பாணச் சரித்திரத்தைக் கூறும் வசன நூலாகும்.

# வித்தியாமான சிந்தனை

வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன்
ஓய்வு நிலை அதிபர்

மனித வாழ்வினிலே ஒன்றிவிட்டதொன்றாக மதம் காணப்படுகின்றது. எந்தவொரு மதத்தினையும் பின்பற்றாதவர் அல்லது மதம் சாராதவர் எனக் கூறக்கூடியவர்களாக எவரும் இல்லை. விரும்பியோ விரும்பாமலோ ஏதோ ஒரு வகையில் ஒவ்வொருவரும் மதம் ஒன்றினைச் சார்ந்தவராகவே காணப்படுவார். உலகிலே கணிசமான தொகையினர் தமது உழைப்பிலும் நேரத்திலும் ஒரு பகுதியினை தாம் சார்ந்த மதத்திற்காகச் செலவிடுகின்றனர் என்பது மறுதலிக்க முடியாததாகும். மத நடைமுறைகளை ஏற்றுக்கொள்ளாதவர்களும் ஈடுபாடில்லதாவர்களுமாக ஒரு சிலர் காணப்படினும் ஏதோ ஒரு மதத்தின் பால் ஈர்க்கப்பட்டவர்களே பெருமளவில் உள்ளனர். அதிகமான மதம் சார்ந்தவர்கள் தமது வழிபாட்டிற்காக தாம் சார்ந்த சமயத்தின் கடவுளை உருவச்சிலைகளாக, படங்களாக, சித்திரங்களாக பல்வேறு வடிவங்களில் வழிபடுகின்றனர். இவ்வாறான கடவுள் உருவங்கள் மிக உயர்ந்த மதிப்பில் அவ்வவ் மதம் சார்ந்தவர்களால் போற்றப்படுகின்றன. இந்து சமயத்திலே சிவன், அம்மன், விநாயகர், முருகன், விஷ்ணு எனப் பல்வேறு கடவுள் உருவங்களுண்டு. கத்தோலிக்கர்கள் யேசு, அந்தோனியார், மாதா என்றும் பௌத்த மதத்தினர் புத்த பகவான் எனவும் உருவ வழிபாடுகள் செய்கின்றனர். இவ்வாறாக மதங்களிலே உயர்ந்த நிலையில் வைத்துப் பேணப்படுகின்ற இத்தெய்வத் திருவுருவங்களை நாம் பயன்படுத்தும் விதம் குறித்து சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இறைவனின் திருவுருவங்களைப் பயன்படுத்தும் போது மதத்தின் மீது நாம் கொண்ட அதீத ஈடுபாடு அல்லது பக்தி காரணமாக பல்வேறு இடங்களிலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் எற்றுக்கொள்ள முடியாத நிலையை அடைவது பற்றி நாம் எவரும் யோசித்ததில்லை.

எமது வழிபாட்டிடங்கள் திருநாட்களின் போது அதாவது உற்சவங்கள் மற்றும் விசேட தினங்களின் போது பத்திரிகைகளில் சிறப்பு மலர்களை வெளியிடுகின்றோம். அதன் போது வழிபாட்டிடங்களின் படங்கள், இறைவனின் திருவுருவப்படங்கள் அம்மலர்களில் அச்சிடப்படுகின்றன. தொடர்ந்து வரும் நாட்களில் அச்சிறப்பு மலர்ப்பிரதிகள் வீதியோரங்களில், குப்பைத் தொட்டிகளில் தேடுவாரற்ற நிலையில் காணப்படுகின்றன. பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் எமது உயர் மதிப்புள்ள தெய்வங்களின் திருவுருவப்படங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத மதிப்பிழப்பிற்குள்ளாகின்றன. இவ்வாறான சிறப்பு மலர்கள் வெளியிடப்படுவதில் தவறில்லை. எமது இறைவனின் கருணையை, புகழை வெளிப்படுத்தவும் வழிபாட்டிடத்தின் வரலாற்றைப் பிரசுரிக்கவும் இவை உதவுகின்றன. எனினும் இம்மலர்களில் தெய்வங்களின் திருவுருவப் படங்களைத் தவிர்க்கலாமல்லவா? நிறுவனங்கள் வெளியிடும் நாட்காட்டிகள், வியாபார நிலையங்களின் பற்றுச்சீட்டுக்கள், திருமணம் போன்ற மங்கள நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள் போன்றவற்றிலும் இறையுருவங்களை பதிவு செய்கின்றோம். இது

இறைவன் மீது நாம் கொண்ட பக்தி காரணமாக கடவுளை முன்னிலைப்படுத்தி நமது காரியங்களைச் செய்வதற்கானதாக இருக்கலாம். ஆனால் இவ்வாறான வெளியீடுகள் எமது தேவை நிறைவானதும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையை அடைந்து விடுகின்றன. நாம் கோயில்களில் சென்று அர்ச்சனை வழிபாடுகளைச் செய்கின்றோம். இந்து ஆலயங்களில் குருவானவர் விபூதி பிரசாதங்களைத் தருகின்றார். அதனை மிக நேர்த்தியாக ஒரு சிறிய பையில் இட்டுத் தரும் போது குறித்த ஆலயத்தின் பெயர் மற்றும் இறைவனின் படம் அச்சிடப்பட்டிருக்கும். விபூதி பிரசாதத்தை எடுத்த பின் அப்பையை என்ன செய்வது எனத் தெரியாது குழம்புபவர்களை நாம் காணலாம். அப்பிரசாதப்பையில் இறைவனின் திருவுருவம் உள்ளதால் அதனை நிலத்தில் போடவோ குப்பைதொட்டியிலிடவோ முடியாது.

ஒரு வீட்டின் வாசலில் மல்லிகைப்பந்தலிலே ஒரு பை தொங்கியது. அந்தப் பையில் உள்ள பொதி என்ன என அறிய முற்பட்ட போது அவ்வீட்டுக்கார அம்மா ஆலயத்திற்கு சென்று வரும் போது அங்கு வழங்கப்படும் விபூதி பிரசாத வெற்றுப் பைகளை சேகரித்து அதில் வைத்திருக்கின்றார் என அறிய முடிந்தது. அத்துடன் இறைவன் படம் உள்ள நாட்காட்டி இதழ்கள் மற்றும் திருமணம் போன்றவற்றின் அழைப்பிதழ்கள் என்பனவும் அப்பையிலே பொதி செய்யப்பட்டு தொங்கவிடப்பட்டிருந்தன. எப்போதாவது அந்த வீட்டுக்காரர் கீரிமலைக்குச் செல்லும் வேளையில் அப்பொதியினையும் கொண்டு சென்று கடலில் வீசிவிடுவதாக சொல்லப்பட்டது. அவ்வாறு செய்யாவிடின் எமது உயர் மதிப்பு வாய்ந்த தெய்வங்களின் உருவப்படங்கள் கண்ட கண்ட இடங்களிலும் போடப்பட்டு கால்களில் மிதிபட்டு அவமாகிவிடுமல்லவா? விபூதி பிரசாதம் பக்குவமாக வழங்கப்பட வேண்டும் என்ற ஒழுங்கு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். எனினும் கடவுள் திருவுருவம் பொறிப்பதைத் தவிர்க்கலாமல்லவா? இது போன்றே ஏனைய பிரசுரங்களிலும் ஆண்டவனின் உருவப்படங்களைப் பொறிப்பதை விடுத்தல் நன்று.

எந்த மதமாயினும் அதன் பெருமைக்கும் கீர்த்திக்கும் உயர்வுக்கும் மாசு ஏற்படாது செயற்படுவது நம் அனைவரதும் கடமையாகும். நாம் பின்பற்றும் மதங்களின் வழிபாட்டிற்குரிய திருவுருவங்களை முடிந்தளவு மதிப்பார்ந்த நிலையில் பேணுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும். இவ்வாறான வித்தியாசமான சிந்தனையின் மூலம் உருவ வழிபாடுகளைப் பின்பற்றும் மதம் சார்ந்தவர்கள் வழிபாட்டு உருவங்களை பெறுமதி மிக்கவையாக மதிக்க முடியும் என்றால் அது உண்மையானதாகும்.

# சடங்குகளும் சம்பிரதாயங்களும்

வி.மயூரன்
சமுர்த்தி உத்தியோகத்தர்

சைவ வாழ்க்கையிலே துன்பகாரியங்களிலும், இன்ப காரியங்களிலும் வாழ்வியல் சடங்கு முறை என்பது பின்னிப் பிணைந்த ஒன்றாக காணப்பட்டு வருகின்றது.ஆனால் இன்றைய நவீன உலகில் இந்து மக்கள் குறிப்பாக இளைய தலைமுறையினர் புதிய சூழ்நிலையில் வாழ்கின்ற வேளைகளில் தங்களின் சமய அனுட்டானங்கள் மற்றும் நாளாந்த சமய வாழ்க்கை முறைகளை இலகுவான முறையில் அறிய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அந்த வகையிலே அன்றாட கிரியைகளின் சில நடைமுறைகளின் தெளிவு பற்றிய அறிவு ஒவ்வொரு இந்துக்களுக்கும் இருக்க வேண்டியது பிரதானமாகும். அக்கிரியைகளிலே நற்காரியங்களிலும், அபரக்காரியங்களிலும் மாவிலை, தோரணம், கும்பம் வைத்தல், வாழைமரம் நாட்டுதல், என்பன எவ்வாறான முறையில் கடைப்பிடிக்க வேண்டும் என்பது கீழே விபரிக்கப்பகிறது.

**மாவிலை**

மாவிலை கட்டும் முறை என்பது பிரதானமான ஒரு விடயமாகும். ஆலயங்களில் நடைபெறும் உற்சவ விழாக்களிலும், திருமண மண்டபங்களிலும் வீடுகளில் சுப காரியங்கள் நடைபெறும் போது மாவிலையின் காம்பு நுனியை முன்புறமாக வளைத்து இலையின் முன்பகுதியில் காம்பைக் குத்தித் தொங்க விடுதல் வேண்டும். இது மாவிலை தலை குனிந்து வரவேற்கும் பாணியில் இருக்க வேண்டும். ஐந்து அல்லது ஏழு இலைகள் குத்தலாம். இது சுபகாரியத்திற்கான அறிகுறியைக் காட்டும்.

**மாவிலை**

வீட்டில் மரணச்சடங்கு நிகழும் போது மாவிலையின் காம்பு நுனியை பின் பக்கமாக மடித்துக் குத்தி தொங்கவிடல் முறையாகும். இது அபரக்கிரியை முறைக்கு மட்டும் உரியதாகும்.

**வாழைமரம் நாட்டுதல்**

ஆலயங்களிலும், விழாக்களிலும், வீடுகளிலும், திருமண வைபவங்களிலும், மற்றும் சுபகாரியங்களிலும் வாழைமரம் கட்டுதல் வேண்டும். இதன் நோக்கம் வாழையின் பெறுமதி மனிதனுக்குப் பெரும் பயனைத்தரவல்லது. இதன் இலையில் உண அருந்த முடியும், இதன் தண்டு, காய், பழம், பூஷனி என்பன உணவாகவும் நார் பூக்கட்டுவதற்கும் பயன்படுகிறது. இதனை அழிக்க முடியாது. வாழையடி வாழையாக வாழவேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் முகமாக வாழைமரம் கட்டப்படுகின்றது. வாழைமரம் பழுத்த பழமாக மஞ்சள் கனியாக மங்களமாக அமைந்தால் அது மிகவும் சிறப்பாக அமையும்.

**தென்னந்தோரணம்**

தென்னங்குத்து தோரணத்தின் நுனி மேற்பக்கமாக இருக்கும் படியாக சுபகாரியங்களுக்கு அமைய வேண்டும்.

அபரக்கிரியைகளுக்கு கீழ்பக்கமாக அமைய வேண்டும். தோரணத்தை வெட்டும் போது கவனமாக இருத்தல் வேண்டும்.

**கும்பம் வைத்தல்**

தேங்காயின் கீழ் மாவிலை அமைதல் வேண்டும். இதில் ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது இலைகளை அமைத்தல் சிறப்பாகும்.

---

# எமது தாய்

பச்சைப் பசும் வயல் வெளிகளில்
பூத்துக்குலுங்கும் நெற்பயிர்களும்
காற்றில் அசைந்தாடும் வாழைகளும்
காய்த்துத் தொங்கும் மரக்கறித்தோட்டமும் - என
காண்போரின் கண்களுக்கு குளிர்ச்சியளிக்கின்றன.

வரிசை வரிசையாய் தென்னைகளும்
வானுயர்ந்த பனைகளும் பிணிதீர்க்கும் வேப்பங்காற்றும்
பாய்ந்தோடும் வழுக்கையாறும் மூக்குத்துளைக்கும் இலுப்பைப்பூவும்.
துள்ளியோடும் செம்மறிக்கூட்டமும் - என
நம் இயற்கை அன்னைக்கு அழகு சேர்க்கின்றான.

சண்முக பெருமானை வழிபட்டு "சண்டிருப்பாய்"
ஒழுக்கசீலர்களாய் வாழ்ந்து "சீரணி"
மருதமரத்தின் பெருமைகூறும் மருதடியும்
தங்கத்தாத்தாவை ஈன்றெடுத்த நவாலியூரையும்
தன்னகத்தே கொண்டு தலைநிமிர்ந்து நிற்கின்றாள்.

**திருமதி. சுபாஸ்கரன் மல்லிகா**
**பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**சண்டிலிப்பாய் மேற்கு**

# சுதுமலை அண்ணாமலை வைத்தியர்

திரு.ஐ.சாந்தன்
சுதுமலை

தமிழர்களின் சொந்த வைத்தியமான சித்த மருத்துவம் யாழ்ப்பாணத்தில் தழைத்தோங்கியிருந்தது.

வலி தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள சுதுமலை மிகப் பழைமை வாய்ந்த ஊர் என்பதற்கு கண்ணகை வழிபாட்டின் அடையாளமாய் இங்கு இலங்கும் அம்மன் ஆலயமே சான்று. இத்தொன்மையின் இன்னொரு சான்று இங்கு மிக அண்மைவரை நின்று நிலவிய சுதேச வைத்திய முறைமைகள். யாழ் குடாநாட்டின் புகழ் பூத்த ஆயுள்வேத பரிகாரிமார் பலரும் இங்கு வாழ்ந்து வந்தனர்.

அத்துறையில் தம் பெயரைப் பதித்தவர்களில் முதன்மையானவர் அண்ணாமலை வைத்தியர்.

"தன்வந் திரிக்குப் பின்வந் தானென
திசைதொறுந் திசைதொறு நசைமீக் கூர்ந்து
சான்றோ ரேத்தும் ஏன்றமெய்ப் புகழான்"

என்று சுதுமலை அண்ணாமலைப் பரிகாரியாரைப் பாடினார் நாவலியூர் சோமசுந்தரப்புலவர்.

"திருவுறை சுதுமலைச் செழுப்பதியாங்கண்......
நாகலிங்கம் நலத்தகை யாளர்க்குச்
சீர்மலி புதல்வன், செய்தவக் கொழுந்து.
சாந்தப் பேடகம், சால்புக் களஞ்சியம்,
ஆதுலர்க் கருந்துணை, அயலார் பழநிதி,"
எனப் பரிகாரியாரைப் போற்றிய புலவரவர்கள்,
"அண்ணா மலையென்னும் புண்ணியப் பெயரோன்.
அன்னவனுக்கே,
என்வினைத் தொய்வுப் புன்மைகள் நீக்கி
நலமுறச் செய்யும் கருணையை வியந்து
சிறுவர் செந்தமிழ்ப் பனுவலை, வாழி!
உரிமை யாக்கினெ னுலகுவப் புறவே!"

என்று தம்முடைய "சிறுவர் செந்தமிழ்" நூலினைப் புலவரவர்கள் பரிகாரியாருக்கே உரிமையுரை பகர்ந்தார். (உரிமை - சமர்ப்பணம்)

"பல்லாண்டாக எனக்குற்ற தொய்வு நோய்க்கு விலையுயர்ந்த அருமருந்துதவி நோயொடு முதுமைத் தளர்வையும் நீக்கி வருகின்ற வைத்தியசிரோமணி, நாகலிங்கம் அண்ணாமலை அவர்களின் மாறாக் கருணை வண்மைக்கறிகுறியாக இப்பனுவலை அவர்க்கு உரிமையாக்குகின்றேன்." (சிறுவர் செந்தமிழ் - யாழ்ப்பாணத்து நவாலியூர், க.சோமசுந்தரப் புலவர் அவர்களால் இயற்றப்பட்டு, யாழ்ப்பாணம் அருட் சூசை மாமுனிவர் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது.

எளிய வாழ்வு, உயர்ந்த உள்ளம், பரந்த நினைப்பு, ஆழ்ந்த அன்பு இவற்றைக் கொண்டிலங்கிய அண்ணாமலை ஒரு கர்மயோகி போல் வாழ்ந்தவர். தமது வைத்திய சேவைக்குப் பிரதிபலன் எதுவும் எதிர்பாராமல் மக்கள் சேவையே மகேசன் சேவை எனப் பணியாற்றியவர். தம்மிடம் மருத்துவத்திற்கு வரும் அனைவரையும் சாதி, மதம், ஏழை, பணக்காரன் என்ற பேதம் பாராமல் மதித்து நடந்தவர். தமது மருத்துச் சிட்டைகளில் அச்சிட்டிருந்தவாறே "இறைவன் சந்நிதியில் எல்லோரும் சமம்" என்பதைத் தமது நெறியாய்க் கடைப்பிடித்து ஒழுகியவர்.

"சுதுமலையில் வாழ்ந்த அண்ணாமலை பரிகாரியாரிடம் சிகிச்சை பெறுவதற்காக குடாநாட்டின் நாலா பகுதிகளிலிருந்தும் அந்தக் காலத்தில் நோயாளிகள் வருவதுண்டு. அவர் ஏழை மக்களுக்கு இலவச வைத்திய சேவை புரிந்தமையை இன்று கூட நினைவு கூருபவர்கள் ஏராளம் பேர் உள்ளனர்" என மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராசா, யாழ்ப்பாணத்தவரின் ஆயள் ரேகையைத் தீரமானித்த ஆயுள்வேதம்" என்கிற தமது கட்டுரையில் (உதயன் 14.02.2006) அண்ணாமலை வைத்தியர் பற்றிக் குறிப்பிடுகிறார்.

"அண்ணாமலைப் பரியாரியாரிடம் ஆலோசனை பெற்றே பற்பொடி தயாரித்தோம். அவரின் ஆலோசனைப்படி மூலிகைகளைச் சேர்த்து இந்தப் பற்பொடியைத் தயாரித்த காரணத்தால் அவரின் பெயரைச் சூட்டினோம்" என்று அண்ணா தொழிற்சாலை அதிபர் பொ.நடராசா கூறுகிறார்.

காலை ஆறுமணியிலிருந்து மாலை ஆறுமணிவரை எழுந்திருக்க நேரமின்றி இடையில் ஒரு நாலுமுழந் துண்டும் தாடி சடைமுடியுமாய் ஒரு சித்தர் போலவே இருந்து மக்கள் பணியாற்றியவர் அண்ணாமலை. அன்னாரின் வீட்டிற்குச் செல்லும் பாதை எப்போதும் வாகனங்களால் நிரம்பி வழியும். நோயாளிகளை அன்புடன் நடத்துவதும் அனுதாபத்துடன் செவிமடுப்பதும் அவருக்கே உரிய இயல்புகளாய் இருந்தன. சித்த மருத்துவத்தை முற்றுமுழுதான சித்தமருத்துவமாகவே செய்துவந்தவர். தம்முடைய மருந்துகளைத் தயாரிப்பதற்தென்றே சொந்தமாக மருத்துவசாலை ஒன்றும் அவரிடமிருந்து.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில், தமிழ் நாட்டிற்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் தடையற்ற கடற்தொடர்பு இருந்த காலத்தில்

நாகபட்டினத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் கப்பலோட்டிக் கடல் வாணிபஞ் செய்து கொண்டிருந்த நல்ல பெருமாள் செட்டியாரின் மகன் முத்து என்பவருக்கு யாழ்ப்பாணத்தில் ஏதோ பிடிப்பு எற்பட்டு விட்டது. சதுமலையில் குடியமர்ந்து, கற்பம் என்பாரை மணமுடித்தார்.

செட்டிமுத்தர் கற்பகம் தம்பதிகளின் பிள்ளைகளிலொருவரான நாகலிங்கம், மானிப்பாயில் அமெரிக்க மிசனறியான கலாநிதி கிறீன் அவர்களால் நிறுவப்பட்ட வைத்தியசாலையில் இணைந்து கொண்ட மாணவ முன்னோடிகளில் ஒருவர். வைத்தியர் நாகலிங்கம் இணுவிலைச் சேர்ந்த இளையதம்பி என்பவரின் மகளை மணஞ்செய்து, வைத்தியத்துடன், சமய - சமூகப் பணிகளிலும் ஈடுபட்டிருந்தார். இணுவில் கந்தசாமி திருக்கோவிலின் வாசற்கோபுரம், முத்து நாகலிங்கத்தின் திருப்பணிக்கு இன்றும் சான்று பகர்வது. நாகலிங்கம் - கனகம்மா தம்பதிகள், நீண்டகாலம் பிள்ளைப் பேறில்லாமல் இருந்து திருவண்ணாமலைக்கு நேரத்தி வைத்துப் பெற்ற ஒரே மகன் அண்ணாமலை. 1907 ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் திகதி பிறந்தார். மானிப்பாய் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் அரசினர் சித்த - ஆயள் வேதக் கல்லூரி ஆகியவற்றில் பயின்று தேறிய அண்ணாமலை, தம் மைத்துனி அன்னம்மாவை மணந்தார். வைத்தியத் தொழிலையும் இல்லறத்தையும் மேற்கொண்டார்.

தமது மருத்துவ சேவையால் யாழ் மக்கள் மனதில் மட்டுமன்றி அதற்கப்பாலும் அண்ணாமலையின் அன்பும் புகழும் பரவியிருந்தன. திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் தமிழ் நாட்டிலிருந்தும் தொடர்புகளைப் பேணியதுடன் அண்ணாமலைப் வைத்தியரிடம் மருத்துவமும் செய்துவந்தார்.

"மன்னா! மதிநுட்ப வைத்தியநாத! வருத்துமெனக்கு அன்னாயனையாய் அமிர்த சஞ்சீவி அளித்தருளே" என்பது வாரியார் சுவாமிகள் அண்ணாமலையாருக்கு அனுப்பிய பாடல்களில் ஒன்று.

"பரிகாரியார்" என்ற பெயருக்கு இலக்கணமாக அண்ணமலை ஆனதெங்ஙனம் என்பதை முன்னாள் பலாலி போதனா பாடசாலை விரிவுரையாளர், பண்டிதர் பொ.கிருஸ்ணபிள்ளை அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"நோய்நாடி நோய்முதல் நாடி வைத்தியம் செய்தவர் அண்ணாமலைப் பெரியார். நோய் நீக்கும் அதி சிறந்த மருந்து வகைகள் அவரிடமிருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக அவரே பெரிய மருந்து போல அமிழ்தம் போல நோயாளிகளுக்குத் தோற்றம் தருவார். மகான் அரவிந்தரை நினைவூட்டின அண்ணாமலைப் பெரியாருடைய தாடியும் தலைமயிரும் முகமும்...... அவர் கண்ணும் முகமும் சொரியும் அருள், மருள் கொண்ட நோயாளிக்கு அரும்பெரும் மருந்தாகும். நாலு முழத்துண்டும், திறந்த மேனியும், சாந்த சுபாவமும், அவர் உலகில் ஒட்டாமல் வாழும் விதத்தை நமக்கு உணர்த்தும். இல்லறத்துறவி என்பதனைத் தெளிவுறுத்தும்.

அதிகாலையில் முதலாவது ஆளாகத் தாம் துண்டு பெற வேண்டுமென்று செல்பவர், தமக்கு முன் துண்டுடன் அங்கு பலர் வைத்தியரைக் காணக் காத்திருப்பதைக் காண்பர். அவரிடம் வைத்தியம் செய்விக்க தொகை பத்து. இருபது என்ற இரு இலக்க எண்களிலல்லாது ஒருநூறு, இருநூறு, முந்நூறு என்ற எல்லையை எட்டுவதை மேசையிலிருக்கும் பதிவுப்புத்தகம் தெளிவாகக் காட்டும்.

"மருந்துக்குக் காசு என்ற எண்ணம், மருந்துக்கும் அவரிடம் இல்லை. காசின் எண்ணம் அவரிடம் இருந்திருந்தால் பெரும் நிலபுலங்களை விற்று வைத்தியம் செய்ய நேர்ந்திருக்குமா? வைத்தியம் அவர் விஷயத்தில் இறைவன் திருத்தொண்டாகவே அமைந்தது. அவர்தம் புகழ் மிக்கோங்கிய பிற்காலத்திலே பிற நாடுகளுக்கனுப்பும் மருந்துக் காசினாற் தான் எஞ்சிய அவர் தம் நிலப்புலங்களும் எஞ்சின" (பண்டிதர் பொ.கிருஷ்ணபிள்ளை, விரிவுரையாளர் போதனா பாடசாலை, பலாலி, திரு.அண்ணாமலை அவர்களின் ஆண்டு நினைவு மலர், *1959.*)

ஒருவேளை மட்டும் உண்டயோகி அவர். மாலை ஐந்து மணியின் பின் எழுந்து அவசர அவசரமாய் தோய்ந்து. அந்த ஒரு வேளை சிற்றுணவை முடித்து. மீண்டும் ஆறுமணிக்குத் தயாராகப் புறப்படுவார். தம்மிடம் வர இயலாத நோயாளிகளைச் சென்று பார்ப்பதற்காக தம்முடைய பழைய காரில் யாழ் குடாநாட்டில் மூலை முடுக்கெல்லாம் சென்று வருவார். கன்வஸ் போன்ற தடித்த துணிக் கூடாரங் கொண்ட நீல நிற.ஃ.போட்கார். இப்போதைய ஆட்டோக்கள் மாதிரி, சற்றுப் பெரிது. இந்தக் கார் அப்போதைய யாழ் குடாநாட்டு வாசிகள் பலருக்கு நன்கு தெரிந்த - அவர்களின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரித்தாயிருந்த - வாகனம். வெள்ளை வேட்டியும் தோளிற் போர்த்திய துண்டுமாய் தாடியும் தலைமுடியும் காற்றிற் பறக்க தம்முடைய இந்தக் காரைச் செலுத்தி வரும் பரிகாரியார் போகவேண்டிய இடமெல்லாம் போய்த்திரும்ப இரவு பத்து. பதினொன்று ஆகும். வடமராட்சி தென்மராட்சி, தீவுப்பகுதி என்றெல்லாம் போய் வரும் அந்த டி - *3380.*

திருவண்ணாமலைக்கு நேர்த்தி வைத்ததன் பயனாய்ப் பிறந்த அண்ணாமலை, திருக்கார்த்திகை - விளக்கீடு - தினத்தன்றே *1958* நவம்பர் *26*ஆம் திகதி இயற்கை எய்தினார் அன்னாரின் மறைவு பற்றிக் கேள்வியுற்ற வாரியார் சுவாமிகள்,

"மண்ணில் வாழும் மாந்தர்க்கும் வறிஞர் தமக்கும்
பொருள் விரும்பா
தண்ணலே நீ மருந்தளித்தே அன்னைபோல
ஆதரித்தாய்
கண்ணின் இமைபோலக் கருணையுடன் காத்த
அண்ணாமலை நிருப!
விண்ணில் விபுதர் நோய்தீர்க்க மேவினாயோ
வித்தகனே?"

என இரங்கலுற்றார். (அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்தவாரி அவர்கள் அண்ணாமலை அவர்களின் மறைவுக்கிரங்கி 08.12.58ல் திருப்பூரில் இருந்து பாடி அனுப்பிய பாடல்கள். வைத்தியபூபதி திரு.அண்ணாமலை அவர்களின் நினைவுமலர் 1958)

வைத்திய கலாநிதி ஆ.இராமுப்பிள்ளை அவர்களின் வார்த்தைகள் இவ்வாறு இருந்தன.

"வட இலங்கை மலையிலாதால் எதிரிலங்கை வளமுடைத்தாய்
மறுகுவார்க்கு
உடல் வளமும் உளவளமும் ஓவாதேயளித்த மலை
உறுதி சான்ற
திடமலைசெந் தமிழ் மலை யொண் சேணுயர் காராளுமலை
சிவனார் நாட்டம்
அடர் மலை அண்ணாமலையால் அது எழுந்த சுதுமலைசீர்
அறையப் போமோ!"

அண்ணாமலை அவர்களின் பரம்பரைவீடும் வைத்திய நிலையமும் இருந்த வீதி, இன்றைக்கும் அன்னார் பெயரால் அண்ணாமலை வீதியென வழங்கப்படுகிறது. இப்படிப்பட்ட பெரியவர்களாற் போற்றப்பட்ட எமது சித்தவைத்தியம் அதன் தூய்மையும் பெருமையும் கெடாது பேணப்பட வேண்டும்.

**மருத்துவ மாமேதை**

மருத்துவ மாமேதை மக்கள் மனம் நிறை
அண்ணாமலை ஆற்றினான் அளப்பருஞ் சேவை
அருந்துயர் தீர அகிலமே வியக்க
உளம் மகிழ்ந்தனர்; உவந்தனர் மானிடர்

சுதுமலை என்னும் சுந்தர நாமம்
மாதரம் எங்கும் மணத்திட; மகிழ்வூறிட
இலவச வைத்தியம் இயற்றியே இன்பம்
நிலைத்திட வைத்தான் இறை நிகரவனே

அகிலம் நிலைத்திடும் ஆண்டுகள் தோறும்
அண்ணாமலை யவன் அரும்புகழ் அழியாது
உலகில் நிலைத்திடும் உண்மை இது சத்தியமென
உணர்ந்தே வாழ்த்துவாய்; உவந்தே என்றும்

**ஈ.குமரன்.**

# பார்க்கின்சன் நோய் பற்றி.....

சொறுாபிகா குணத்திலகம்
ஆராய்ச்சி உதவியாளர்
நொதேர்ண் வைத்தியசாலை

பார்க்கின்சன் நோய் (Parkinson's Disease) என்பது மூளையில் உள்ள உடலின் இயக்கம் மற்றும் தசைகளின் தொழிற்பாட்டைக் கட்டுப்படுத்தும் முக்கிய இரசயான மூலக்கூறாகிய டோபமின் (Dopamine) அளவு படிப்படியாகக் குறைவதால் ஏற்படுகின்ற இயக்க உபாதையைக் குறிக்கும். இந்து நோயானது எந்த வயதிலும் ஆரம்பிக்கலாம் ஆனால் பொதுவாக 50 வயதிற்கு மேற்பட்டவர்களிலேயே இந்நோய் ஆரம்பிக்கின்றது. மூளையின் மூளைத்தண்டில் உள்ள இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் மையங்களில் ஒன்றாகிய சப்ஸ்டான்சியா நைக்ரா (Substantia nigra) என்னும் பகுதியில் உள்ள நரம்புக்கலங்களே டோபமின் எனப்படும் இரசாயனப் பதார்த்தத்தினை உற்பத்தி செய்கின்றன. டோபமின் (Dopamine) ஆனது நரம்புக் கணத்தாக்கம் கடத்தப்பட்டு உடலில் கட்டுப்படுத்தப்பட்ட இயக்கம் நிகழ்வதற்கு பொறுப்பான ஒரு இரசாயனச் சேர்க்கை ஆகும். டோபமின் அளவு குறைவடைவதாலோ அல்லது அழிவடைவதாலோ வழக்கத்திற்கு மாறான கணத்தாக்கங்கள் தூண்டப்படுகின்றன. எனவே நோயாளர்களில் கட்டுப்பாடற்ற இயக்கம் ஏற்படுவதுடன் அவர்களால் தன்னிச்சையாக இயங்க முடியாத நிலை ஏற்படுகின்றது. அதே வேளை, சப்ஸ்டான்சியா நைக்ரா தவிர்ந்த (Non motor symptoms) அறிகுறிகள் ஏற்படுகின்றன. இது படிப்படியாக நிகழும் மாற்றம் என்பதால் இந்நோயின் பாதிப்புக்கள் முழுமையாகத் தென்படுவதற்கு பல வருடங்கள் எடுக்கலாம்.

உலகளாவிய ரீதியில் 10 மில்லியன் மக்கள் பர்க்கின்சன் நோயுடன் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இவர்களில் பெண்களை விட ஆண்களின் எண்ணிக்கை ஒன்றரை மடங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 800 பேர் இந்நோயுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் ஆசிய நாடுகளில் அதிகரித்த ஆயுட்காலம் (Life expectancy) காரணமாக வயது முதிர்ந்தோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டு வருகின்றது. எனவே பார்க்கின்சன் நோயாளர்களின் எண்ணிக்கையும் பாதிப்புக்களும் மேலும் அதிகரிக்கலாம் என ஆய்வுகள் எதிர்வுகூறுகின்றன.

இந்நோயின் பிரதான இயக்க உபாதைகளாவன

1. கை மற்றும் காலில் இறுக்கத்தன்மை (Rigidity)
2. குறிப்பிட்ட உடற்பகுதிகள் ஓய்விலுள்ள பொழுது ஏற்படும் நடுக்கம் (Tremor)
3. பாதிக்கப்பட்ட உடற்சமநிலை (Postural Instability)
4. மெதுவாக்கப்பட்ட / மிக மந்தமான இயக்கம் (Bradykinesia) உதாரணமாக முகபாவம், பேச்சு, நடை, கையெழுத்து, போன்ற செயற்பாடுகளை விரைவாகவும் இலகுவாகவும் செய்ய முடியாத நிலை

இருப்பினும் மேற்கூறிய அறிகுறிகள் நோயாளிக்கு ஏற்ற வகையில் வேறுபடலாம். மேற்கூறியவற்றில் ஆகக் குறைந்தது இரு அறிகுறிகள் இருப்பின் அவரைப் பார்க்கின்சன் நோயாளி என நரம்பியல் நிபுணர் இனங்காண்பது கடினமாகும். இதற்கான எந்த விதமான ஆய்வுகூடப் பரிசோதனைகளோ அல்லது கதிரியக்கப் பரிசோதனைகளோ இல்லை. ஆனால் நோயாளியின் அறிகுறிகளை வைத்து தகுந்த நரம்பியல் பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் இந்நோயை இணங்காண முடியும். இதற்கு பார்க்கின்சன் நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதில் பயிற்றப்பட்ட அனுபவம் மிக்க நரம்பியல் நிபுணரை நாடுதல் அவசியம். பார்க்கின்சன் நோய் ஏற்படுவதற்குரிய காரணங்கள் எதுவும் சரியாக அறியப்படவில்லை. எனினும் நிறமூர்த்தக் குறைபாடுகள் (பரம்பரைக் காரணிகள்) மற்றும் சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்கள் என்பன காரணமாக இருக்கலாம் என மருத்துவ ஆய்வாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

பார்க்கின்சன் நோயில் இயக்க உபாதை தவிர மன அழுத்தம் (Depression), களைப்புத் தன்மை (Dizziness / fainting), மலச்சிக்கல் (Constipation), பாதிக்கப்பட்ட நுகர்வுத்திறன் (Olfactory / Taste Dysfunction), நினைவாற்றல் குறைவு (Imparid cognition), நித்திரைக் கோளாறுகள் (Sleep disturbances,) அதிப்படியான உமிழ்நீர் சுரத்தல் (Excessive saliva), மாயத்தோற்றம் ஏற்படல் (Hallucinations), குமட்டல் மற்றும் வாந்தி (Nausea and Vomiting) விழுங்குவதில் ஏற்படும் சிரமம் / மூச்சத் திணறல் (Choking and swallowing difficulties) போன்ற அறிகுறிகளும் ஏற்படும். இயக்க உபாதை அறிகுறிகள் (motor symptoms) தென்படுவதற்கு முதலே இவை ஏற்படும் என சமீப ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக இவ்வறிகுறிகள் சரியாக அறிந்து கொள்ளப்படாததாலேயோ அல்லது அடையாளங்காண முடியாததாலேயோ இவற்றுக்குச் சிகிச்சைபெறும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. எனவே இவ்வறிகுறிகளை உன்னிப்பாக அடையாளங்கண்டு இவற்றுக்குத் தக்க சிகிச்சைகளை வழங்குவதன் மூலம் பார்க்கின்சன் நோயாளர்களின் வாழ்க்கைத்தரத்தனை பேணமுடியும்.

தூக்கக் கோளாறு என்பது பார்க்கின்சன் நோயாளர்களில் ஏற்படும் ஆரம்ப அறிகுறிகளில் ஒன்றாகும். ஏறத்தாழ 90% ஆனோரில் இப்பிரச்சினை காணப்படுகின்றது. இரவில் தூங்கும் வழமை குழப்பமடைவதால் முறிவடைந்த உறக்கம், சோர்வு, கனவு உறக்கத்தின் போதான மூச்சுத்திணறல் என்பன ஏற்படலாம். இவைதவிர இரவில் தூக்கமானது முறிவடைவதால் நோயாளர்கள் பகலில் நீண்ட நேரம் தூங்கும் நிலை ஏற்படுகின்றது. இதற்கு அவர்களால் உட்கொள்ளப்படும் மாத்திரைகளும் ஒரு காரணமாக இருக்கலாம். எனவே தூக்கத்தை பாதிக்கும் செயற்பாடுகளான மதுபானம் அருந்துதல் மற்றும் அதிகளவு உணவு உட்கொள்வதைத் தவிர்த்துக் கொள்வதுடன் போதிய உடற்பயிற்சி மற்றும் திட்டமிட்ட நித்திரை நேர அட்டவணை ஒன்றைப் பின்பற்றுதல் மூலம் தூக்கக் கோளாறுகளைக் குறைத்துக்கொள்ள முடியும். அத்துடன் இவ்வறிகுறிகள் இனங்காணப்பட்டதும் சிகிச்சையளிக்கும் உங்களது நரம்பியில் நிபுணரிடம் இவற்றைத்

தெரியப்படுத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் நீங்கள் உட்கொள்ளும் மாத்திரைகளின் அளவையோ அல்லது மாத்திரை வகையினை மாற்றுவதன் மூலம் முன்னேற்றங்களை பெறமுடியும்.

மேலும் மிகையான உமிழ்நீர் வடிதல் (Drooling) ஏறத்தாழ பத்து சதவீதமான பார்க்கின்சன் நோயாளர்களில் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் இது உணவருந்தும் போது அல்லது இரவு வேளைகளில் மட்டுமே ஏற்படும் ஆனால் நோய்க்கடுமை அதிகரிக்கும் பொழுது இவ்வுமிழ் நீர்வடிதல் எந்த நேரத்திலும் காணப்படலாம். இதனால் சமூகரீதியான சவால்கள் ஏற்படுவதுடன் நுரையீரல் அழற்சி போன்ற தீவிர நிலைகளும் ஏற்படலாம். முகர்வுத்திறன் குன்றுதல் (Olfactory and taste dysfunction) ஏறத்தாழ 90 சதவீதமான பார்க்கின்சன் நோயாளர்களில் காணப்படுகின்றது. ஆனால் இவ்வறிகுறிகள் இயக்கக்குறை ஏற்படுவதற்கு முன்னரே ஏற்படுவதால் இதனை பார்க்கின்சன் நோயின் ஒரு ஆரம்ப அறிகுறியாகக் கருதமுடியும். நுகர்வுத்திறன் குறைவடைவதால் நேரடியாகப் பாரிய பாதிப்பு இல்லை எனினும் இதனால் பசியேற்படும் தன்மை குறைந்துவிடும் மூளையிலும் மோப்பத்திற்குரிய பகுதியிலுள்ள கலங்கள் படிப்படியாக அழிவதனாலேயே இந்நிலை ஏற்படுகின்றது. பார்க்கின்சன் நோயாளிகளில் முதன்முதலாக இப்பகுதியே பாதிப்படைகிறது. இது தவிர புகைத்தல், தலை அதிர்வு மற்றும் நாசியழற்சி காரணமாகவும் மோப்பத்திறன் பாதிக்கப்படலாம்.

அத்துடன் பார்க்கின்சன் நோயாளர்களில் ஏறத்தாழ 50 சதவீதமானோரில் உணவு. நீர் அல்லது மருந்துமாத்திரைகள் என்பன விழுங்குவதில் சிரமம் ஏற்படுகின்றது. இது போசாக்குக்குறைவு, திணறல் மற்றும் நாசியழற்சி போன்ற பாரதூரமான சிக்கல்களிற்கு வழிவகுக்கும். வாய்வழி மற்றும் தொண்டையிலுள்ள தசைகளின் மந்தமான செயற்பாடு காரணமாகவே இந்நிலை உருவாகின்றது. இதன் விளைவாக உணவுருண்டைகள் தொண்டையூடாக உட்தள்ளப்படுவதில் சிரமம் ஏற்படுகின்றது. இது தவிர 20 சதவீதமான பார்க்கின்சன் நோயாளிகளில் குமட்டல் மற்றும் வாந்தி (nause and Vomiting) காணப்படுகின்றது. நோயாளர்கள் பார்க்கின்சன் நோய்க்குரிய மாத்திரைகளை உட்கொண்டதும் வயிறு வீங்கியுள்ளது போல உணர்வர். சிலவேளைகளில் மாத்திரைகளை உள்ளெடுக்காத போதும் கூட இவ்வுணர்வு ஏற்படலாம். இவை பாரக்கின்சன் நோயின் ஆரம்ப அறிகுறியாக இருப்பினும் இது பெரும்பாலும் பார்க்கின்சன் நோய்க்காக உள்ளெடுக்கப்படும் மருந்து மாத்திரைகளின் பக்கவிளைவாகவே காணப்படுகின்றது.

மலச்சிக்கல் (Constipation) பார்க்கின்சன் நோயாளிகளில் மிகவும் பொதுவான ஒரு இயக்கம் தவிர்ந்த அறிகுறியாக, அண்ணளவாக 75 சதவீதமானோரில் காணப்படுகின்றது. மலச்சிக்கல் என்பது வாரத்தில் மூன்று தடவைகளுக்கும் குறைவான தடவைகள் மலங்கழித்தல் அல்லது மலங்கழிக்கும் போது ஏற்படும் கோளாறுகளைக் குறிக்கும். இதனால் நாளாந்த வாழ்க்கை பாதிப்படைவதுடன் தீவிரமான குடல் சம்மந்தப்பட்ட பிரச்சினைகளும் ஏற்படலாம். எனவே கடுமையான மலச்சிக்கல் ஏற்படின்

அதற்குத் தகுந்த சிகிச்சையளித்தல் அவசியமாகும். மூளையிலுள்ள சமிபாட்டுத் தொகுதியின் கட்டுப்பாட்டு மையத்திலுள்ள நரம்புக்கலங்கள் இறப்பதனால் சாதாரணமாக மலங்கழிக்க முடியாத நிலை காணப்படும். இயக்க உபாதைகள் தென்படுவதற்கு முன்னரே ஆரம்பிப்பதால் பார்க்கின்சன் நோய் ஏற்படுவதை முன்கூட்டியே தெரிந்துகொள்வதில் மலச்சிக்கல் முக்கிய பங்குவகிக்கின்றது.

பார்க்கின்சன் நோயை முற்றாகக் குணப்படுத்த முடியாது எனினும் இதனை ஆரம்பித்தலேயே இனங்கண்டு இந்நோயின் அறிகுறிகளைக் கட்டுப்படுத்த முடியும். ஆனால் இந்நோய் காரணமாக நோயாளர் இறப்பைத் தழுவுதல் மிகவும் அரிது. பார்க்கின்சன் நோயளார்களில் மருத்துவ சிகிச்சை பயனளிக்கத்தவறும் பொழுது Deep Brain Stimulation (DBS) எனும் சத்திரசிகிச்சை சிறந்த பயனளிப்பதாக சமீப காலத்தில் கூறப்படுகின்றது.

நோய்க்கடுமை அதிகரிக்க நோயாளர்களின் வினைத்திறன் படிப்படியாகக் குறைந்து செல்லும். மேலும் இவர்கள் மற்றவர்களில் தங்கியிருக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். பொதுவாக உடற்பயிற்சி மூலம் பேச்சு, விழுங்குதல், உடற்சமநிலை, அறிவாற்றல், மனவழுத்தம் மற்றும் நடுக்கம் என்பவற்றில் குறிப்பிட்டளவு முன்னேற்றம் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக ஓடுபொறி பயிற்சி (Treadmill training), உடற்சமநிலைப் பயிற்சியைப் பேணுவதிலும் பங்களிப்பு வழங்குகின்றன. இவை தவிர தசையின் அளவு மற்றும் திணிவினை அதிகரிப்பதன் மூலம் படிகளில் ஏறுதல், சமநிலை பேணும் திறன் என்பவை அதிகரிக்கப்படுவதாக பல மருத்துவ ஆய்வுகளில் நிரூபிக்கப்பட்டுள்ளன. நமது உடலிலுள்ள தசைகள் அவை பயன்படுத்தப்படாத பட்சத்தில் சுருங்கிவிடுகின்றன. எனவே போதிய உடற்பயிற்சியை வழங்குவதன் மூலம் தசை சுருங்குவதை தவிர்த்துக்கொள்வதுடன் அவற்றின் வலிமையை மேலும் அதிகரித்துக்கொள்ள முடியும். மிக முக்கியமாக பார்க்கின்சன் நோயாளர்கள் சமநிலையைப் பேணுவதில் ஏற்கனவே சிரமங்களை எதிர்கொள்வதால் அவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபடும் பொழுது உதவியாளர்களின் பங்களிப்பு அவசியமாகின்றது.

சீரான உணவுப் பழக்கங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் இந்நோயின் பாதிப்பினை மேலும் குறைத்துக்கொள்ள முடியும். போதுமானளவு நார்ச்சத்து, திரவ உணவு போன்றவற்றை அதிகமாக உள்ளெடுப்பதால் குறிப்பாக மலச்சிக்கல் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளமுடியும். மேலும் உலர்ந்த சருமம் உடையவர்கள் மேலதிக உலர்வைத் தவிர்ப்பதற்கு நீர் அருந்துதல் அவசியமாகும்.

# இலவச சித்த மருந்தகம், ஆனைக்கோட்டை.

Dr.திருமதி அருள்மொழி சுதர்மன்
இலவச சித்த மருந்தகம்
ஆனைக்கோட்டை

இலவச சித்த மருந்தகமானது, யாழ் - காரைநகர் பிரதான வீதியில், சுழாவடிக்கும் ஆனைக்கோட்டைச் சந்திக்கும் இடையில், வலி தென்மேற்கு பிரதேச சபையின் உப அலுவலகமான மானிப்பாய்க் கிராம உப அலுவலகத்துடன் இணைந்து வலி தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவருகின்றது.

1965 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வைத்திய நிலையம் ஆரம்பத்தில் ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் ஆலயத்துக்கு அருகாமையில் இயங்கிவந்தது. அவ்வேளை மருத்துவராக அமரர் மருத்துவர் எஸ். இரட்ணசபாபதியும் பின்னர் எஸ். வைத்தியலிங்கம் மருத்துவர் எஸ்.வேதநாதன் என்போர் கடமையாற்றியிருந்தனர்.

1972 இல் தற்போதைய இடத்துக்கு வைத்தியசாலை மாற்றப்பட்டது. இங்கு முறையே மருத்துவர் பொன்.இராமநாதன், மருத்துவர் திருமதி எஸ்.அருமைநாயகம், மருத்துவர் திருமதி.கே.விஜயரத்தினம், மருத்துவர் செல்வி.ரி.கமலா மருத்துவர் திருமதி.பி.சரஸ்வதி, மருத்துவர் தி.சுதர்மன் போன்றோர் யூன் 2017 வரை கடமையாற்றியிருக்கின்றார்கள்.

ஆரம்பத்தில் இலவச ஆயுள்வேத வைத்தியசாலையாக இயங்கி வந்த இம் மருந்தகம் பின்னர் 2017 இல் வடமாகாண சபையின் தீர்மானத்துக்கமைவாக தமிழர்களின் பாரம்பரிய மருத்துவமான சித்தமருத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டு இலவச சித்த மருந்தகமாக பெயர் மாற்றம் பெற்றது வரவேற்கத்தக்கதாக அமைந்தது.

இம் மருந்தகமானது வாரத்தில் திங்கள் தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை தனது சேவையை செய்துவருகின்றது. பிரதி சனிக்கிழமைகள் தோறும் சண்டிலிப்பாய், கல்வளைப்பிள்ளையார் கோயில் முன்பாக உள்ள முதியோர் பகல்நேர பராமரிப்பு நிலையத்தில் சேவையாற்றி வருகின்றது. இங்கு முதியோர்கள் மட்டுமன்றி கிராம மக்களும் பயன்பெற்று வருகின்றனர். இச்சேவை பத்து வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

இலவச சித்த மருந்தகத்தின் சேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்த பிரதேச சபையானது வருடந்தோறும் ஒரு மில்லியன் ரூபாயினை சித்த மருந்துகள் கொள்வனவுக்காக வழங்கி வருகின்றது. இப்பணத்திலிருந்து இலங்கை ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனம், வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் சித்த

மருந்துற்பத்தி பிரிவு - (அச்சுவேலி) யாழ் மாவட்ட கூட்டுறவு சித்த மருந்துற்பத்தி சங்கம் - (கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு) போன்ற இடங்களில் இருந்து மருந்தகத்துக்கு தேவையான மருந்துகள் பிரதேச சபையினால் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. இதனைத் தவிர வருடந்தோறும் நோயாளர்களின் வருகைக்கேற்ப இலங்கை சுகாதார சுதேச வைத்திய அமைச்சானது அண்ணளவாக இரண்டு லட்சம் பெறுமதியான மருந்துகளை மானியமாக வழங்கி வருகின்றது.

ஒரு மருத்துவர், மருந்துக்கலவையாளர், சிற்றூழியர் என மூன்று ஆளணியினருடன் இயங்கிவரும் இம்மருந்தகத்தின் உச்ச பயன் எமது பிரதேச மக்களை முழுமையாக சென்றடைய வேண்டும்.

### அழகு

அம்மாநீஎழுந்தோடிவாராய் அகிலம்
அழகுடன் விளங்கும் அதிசயம் பாராய்

காலையில் அகிலம் விழித்ததுபாராய் (அது)
கதிரவன் கருணையால் மலர்ந்திடப் பாராய்
கோழிகள் கூவும் அழகினைப் பாராய்
குருவிகள் குதித்திடும் குதூகலம் கேளாய்

(அம்மாநீ)

சூரியன் சுடராய்ச் சுழல்கிறான் பாராய் (மெத்தப்)
பூரித்தேதாமரைமொட்டவிழப் பாராய்
அல்லிமலர் கைகூப்பிவணங்குவதைப் பாராய்
அகிலத்தில் இதுபோல் அழகுண்டோசொல்லாய்

(அம்மாநீ)

பனித்துளிபுற்களில் படிவதனைப் பாராய் (அது)
பார்ப்பவர்க்குமுத்தெனப் பளபளத்தல் காண்பாய்
சோலைகள் அழகுடன் மிளிர்வதைக் காண்பாய்
சோதிநிறைபூக்களங்குமலர்வதைப் பாராய்

(அம்மாநீ)

அந்தியில் செவ்வானம் அழகுறல் காண்பாய் (அது)
சிந்தையில் நாணம் கொண்டதோசொல்லாய்
மந்தைகள் (புல்)மேயும் அழகினைக் காண்பாய் (அருகில்)
மகிழ்வுடன் கன்றுகள் துள்ளுவதைப் பாராய்

(அம்மாநீ)

**பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை**

# சலரோகமும் நரம்பியல் கோளாறுகளும்

Dr.அஜந்தா கேசவராஜ்
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

நீண்டகால சலரோகம் காரணமாக ஏற்படுகின்ற பிரதான விளைவுகளில் நரம்பியல் கோளாறுகளும் ஒன்றாகும். மூளை, முண்ணான் மற்றும் அவற்றிலிருந்து வெளியேறும் நரம்புகள் உடலின் பிரதானமான அங்கங்களான இருதயம், நுரையீரல் போன்ற பகுதிகளுக்கும் தகவல்களை வழங்கும் ஊடகமாக விளங்குகின்றன. சலரோக நோய் காரணமாக இரத்தத்திலுள்ள குளுக்கோஸின் அளவு அதிகரிப்பதனால் நரம்புகளிற்கு குருதியினை வழங்கும் சிறிய இரத்தக்குழாய்கள் பாதிக்கப்படுகின்றன. இதன் விளைவாக நரம்புக்கலங்களின் தொழிற்பாட்டிற்குத் தேவையான சத்துக்கள் அவற்றை நோக்கி எடுத்துச் செல்லப்படாதவிடத்து அந்நரம்புக்கலங்கள் படிப்படியாக தொழிற்பாடற்று அழிவடைகின்றன. குறிப்பாக பிரதான அங்கங்களில் உள்ள நரம்புகள் பாதிப்படையும் பொழுது அவற்றின் பாதிப்புக்கள் ஆரம்பத்தில் நோயாளிகளினால் உணரப்படுவதில்லை. இதன் பொழுது கட்டுப்பாடற்ற நீண்டகால சலரோகத்தினால் உடலின் அனைத்துப் பகுதியிலுமுள்ள நரம்புகள் படிப்படியாக விரைவாக செயலிழக்கின்றன. இவ்வாறாக ஏற்படும் நரம்பியல் கோளாறுகள் மூன்று வகைப்படும்.

**1. உணர்ச்சி நரம்புகள் பாதிப்படைதல்**

நமது உடலிலுள்ள தொடுகை, வெப்பம், நோவு போன்ற உணர்வுகளிற்குப் பொறுப்பான நரம்புகள் பாதிக்கப்படுவதால் ஏற்படுகின்ற நிலையை இது குறிக்கும். இது பொதுவாக கால்கள் மற்றும் பாதங்களில் ஏற்படுகின்றதாயினும் சில நோயாளிகளில் கைகளிலும் ஏற்படலாம். இவ்வாறாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு பின்வரும் அறிகுறிகள் காணப்படும்.

- விறைப்பு மற்றும் கூசுவது போன்ற உணர்வு
- நோவினை உணர முடியாதிருத்தல்
- வெப்பநிலை மாற்றங்களை அடையாளங்காண முடியாமை
- உடற்பகுதிகளுக்கிடையான ஒருங்கிணைப்பு இழக்கப்படுத்தல் (குறிப்பாக மூட்டுக்களிலுள்ள நரம்புகள் பாதிக்கப்படும் பொழுது)
- எரிவு மற்றும் வலி (இரவு நேரங்களில் தீவிரமாக காணப்படலாம்)

இதனால் பின்வரும் சந்தர்ப்பங்களில் ஏற்படக்கூடிய சிறிய காயங்களைக் கூட அவர்களால் உணர முடியாது இருக்கும்

- வெறுங்காலுடன் நடத்தல்
- கரடுமுரடான காலணிகள் அணிதல்

- முறையற்ற அளவிலான காலணிகள் அணிதல்
- நெருப்புக்காயங்கள் ஏற்படல் (சைலென்சர்)

மூட்டுக்களிலுள்ள உணர்ச்சி நரம்புகள் செயலிழக்கும் பொழுது நிரந்தரமான வலியற்ற மூட்டு வீக்கங்கள் ஏற்படும். இதனால் நோயாளிக்கு நடப்பதற்கு மேலும் சிரமம் ஏற்படுவதுடன் விழுவதற்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கின்றன.

**2. பரிவு மற்றும் பரபரிவு தொகுதி சார்ந்த நரம்புக் கோளாறுகள்**

இந்நரம்புத் தொகுதியானது இருதயம், இரைப்பை, குடல் மற்றும் இனப்பெருக்கத் தொகுதிக்கான நரம்பிணைப்புக்களை மேற்கொள்ளுகின்றது. இதில் கோளாறு ஏற்படும் பொழுது

- இரைப்பை செயலிழத்தல்
- கட்டுப்பாடற்ற மலசல வெளியேற்றம்
- ஒழுங்கற்ற வியர்வை வெளியேற்றம் (குறைந்த வியர்வை வெளியேறுதல் / உண்ணும் பொழுது அதிகரித்த வியர்வை வெளியேற்றம் / வெப்பத்தைத் தாங்க முடியாத தன்மை)
- ஆண்மையின்மை

**3. இயக்கநரம்பு தொடர்பான கோளாறுகள்**

இதன் பொழுது தசைகள் சோர்வடைந்து மெலிய ஆரம்பிக்கும். இதனால் கால் மற்றும் கைகளில் உள்ள சிறிய தசைகள் சோர்வடைவதனால்

- அடிக்கடி சமநிலையற்று விழுதல் மற்றும் ஆடைகளிலுள்ள பொத்தான்களை பூட்ட முடியாதிருத்தல்
- அடிக்கடி கால் தசைகளில் பிடிப்பு

என்பன ஏற்படும்.

## நீண்டகால சலரோக நோயினால் ஏற்படும் நரம்புக்கோளாறுகளுக்கான சிகிச்சைகளும் அவற்றைத் தடுப்பதற்கான வழிகளும்

சலரோகத்தினால் ஏற்படக்கூடிய நரம்புக்கோளாறுகளிற்கு பல வகையான வலி நீக்கும் மாத்திரைகள் உட்பட சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் பின்வரும் வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் இவ்வாறான நரம்புக்கோளாறுகளைக் கட்டுப்படுத்தமுடியும்.

- இரத்தத்திலுள்ள குளுக்கோஸின் அளவினை கட்டுப்பாட்டிற்குள் பேணுதல்
- வருடத்திற்கு ஒரு முறையாவது பாதங்களை பரிசோதனை செய்தல்
- நரம்பியல் கோளாறு தொடர்பான அறிகுறிகள் உங்களுக்கு ஏற்படுவது போல இருப்பின் வைத்தியரிடம் முற்கூட்டியே தெரிவித்தல்

★ பாதங்களில் உணர்வற்ற தன்மை இருக்குமென நீங்கள் அறியும் பொழுது அவற்றை காயங்கள் ஏற்படுவதிலிருந்து பாதுகாப்பதுடன் காயங்கள் ஏற்பட்டுள்ளதா என நாளாந்தம் கால்களை சோதித்தல்
★ வைத்தியரின் ஆலோசனைகளிற்கேற்ப விசேடமாக வடிவமைக்கப்பட்ட காலணிகளை அணிதல்
★ பாதுகாப்பற்ற உடற்பயிற்சிகளை தவிர்த்தல்

**சலரோக நோயாளிகளில் நரம்பியல் கோளாறுகளை இனங்காணுதல்**

1. முறையான பாதப் பரிசோதனைகளை தகுந்த வைத்தியரின் உதவியுடன் குறைந்து மாதத்திற்கு ஒரு தடவையாவது மேற்கொள்ளல். இதன் பொழுது தோலில் ஏற்படும் காயங்கள், கொப்புளங்கள் என்பன இனங்காணப்படுவதுடன் தசைகள், எலும்புகள் மற்றும் இரத்த ஓட்டம் என்பவை சீராக நடைபெறுகிறதா எனவும் சோதிக்கப்படும்.
2. மேலதிக பரிசோதனை தேவைப்படின் நரம்பு மற்றும் தசைகளின் செயற்பாட்டினை அறிவதற்காக Nerve Conduction Studies யினையும் மேற்கொள்ளலாம்.

**கல்வளையந்தாதி**

கல்வளையந்தாதி சண்டிலிப்பாயில் உள்ள கல்வளையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் விநாயகப் பெருமான் மீது பாடப்பட்ட பிரபந்தமாகும். இதனைப் பாடியவர் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர். பறாளை விநாயகர் பள்ளு, கரவைவேலன் கோவை, மறைசையந்தாதி முதலான நூல்களும் இவரினால் இயற்றப்பட்டுள்ளன. இவர் ஒல்லாந்தர்காலத்தில் வாழ்ந்த புலவராவார். கல்வளைத் திருத்தலம் ஒல்லாந்தர்காலத்திலேயே புலவரால் பாடப்படும் அளவிற்குப் புகழ்பெற்றிருந்தமை தெளிவாகின்றது. இதனால் இத் தலத்தின் தோற்றம் யாழ்ப்பாண மன்னர்காலத்ததாகவோ அல்லது அதற்கு முற்பட்டதாகவோ இருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. கல்வளையந்தாதி இலக்கியச் சுவை மிக்கது. பதச்சோறாக அதிலிருந்து சில பாடல்கள் கீழே தரப்படுகின்றன.

அருந்துதிக் கையமில் கற்பீந்த மேனை யசலவரை
யருந்துதிக் கைக்கு மகளா பிறந்திடு மன்னைவிட
மருந்துதிக் கைப்புனை சூறைப் பினாகி யருள்கல்வனை
யருந்துதிக் கைக்குன்ற மேயடி யேனுன் னடைக்கலமே

கதிரைக் கடவுள் குறமானை மேவச்செ கங்கணநா
கதிரைக் கடலொலி போன்மள்ள ரார்த்துக் களைந்தசெந்நெற்
கதிரைக் கடைசியர் போரேற்று கல்வளை யாய்ககனக்
கதிரைக்கடவயிற் றார்ப்பாயென் றால்வருங் கைவலமே.

# எமது வாழ்வியலில் மருத்துவம்

திரு.யோ.ஜோ.ஜொலிநாதன்

சில்லாலை.

சித்தர்கள் தம் உடலையும், இப் பிரபஞ்சத்தையும் ஆதாராமாகக் கொண்டு ஆராய்ந்து எடுத்துக்கூறிய ஆழ்ந்த கருத்துக்களை இன்று விஞ்ஞானம் பல கோடி செலவு செய்து ஆதாரபூர்வமாக ஏற்றுக்கொண்டு நிருபித்து வருகின்றது.

சித்த வைத்தியத்தில் ஒரு பிரிவாக வர்மக் கலையும் அடங்கியுள்ளது பண்டைய காலங்களில் வர்மக் கலை பலராலும் மேற்கொள்ளப்பட்டது. அந்நிய ஆட்சிக் காலத்தில் நலிவடைந்து பின்னர் ஒரு சிலரால் சில இடங்களில் குரு சீடர் முறையிலும் எமது ஈழத்திருநாட்டில் குடும்ப பாரம்பரிய முறையில் சிதைவடைந்த நிலையிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பொருத்தமான தகுதியானவர்களுக்கு மட்டுமே போதிக்கப்பட்டு வருகின்றது. நம் முன்னோர்கள் தம் உடலில் உணர்ந்த சூட்சுமமான பேரொளி சக்தியையும் அரூபியான ஆற்றலான ஜீவகாந்த சக்தியையும் (மின்சார சக்தி) பல்வேறு நிலைகளில் ஆராய்ந்து அது இயங்கும் இடங்களை வர்மப் புள்ளிகள் என வரையறை செய்தனர்.

உடலில் நோய் வருவதற்கு இவ்வர்ம இடங்களில் உள்ள நுண்ணிய ஆற்றல்களின் சிதைவே காரணமாக அமையும். அவை கடின வேலை, அதிக தூக்கம், இடிபாடுகளுக்குள் சிக்குதல், விபத்து, உணவு ஒவ்வாமை என்பனவும் தற்காலத்தில் நவீன தொலைக்காட்சி காணொளிகளைப் பார்ப்பதனாலும், கேட்பதனாலும் அவற்றைப் பற்றி வேறு பொழுதின்மையினால் அக்காட்சிகளை தம் மனதில் உண்மைபோல கற்பனையில் எடுத்து தம் வாழ்க்கையில் வாழ முற்படுவதனால் ஏற்படுகின்ற தோல்வியை ஜீரணிக்க முடியாமையினால் ஏற்படுகின்ற மன இறுக்கம் அல்லது மன அழுத்தமும், அதிக ஒழுங்கற்ற, காரணமற்ற கற்பனைகள் அல்லது சிந்தனை போக்கு, தாம்பத்திய உறவு, மந்திர அல்லது ஜெபம் போன்றவற்றினால் ஏற்படும் உடல் கட்டுக்கள் போன்றவையும் நுண்ணிய ஆற்றல்களின் சிதைவுக்குக் காரணமாகின்றன. இவ் ஆற்றல்களை சீரமைக்க தட்டல், ஊன்றல், அமர்த்தல், பிடித்தல், உதைத்தல், நோக்குதல், மந்திர உச்சாடனம் (ஜெபம், தோத்திரங்கள்) என்பனவும் கைபாகம், செய்பாகமுறைகள், மாத்திரக் கணக்கு, பதிக்கணக்கு, அளவுக்கணக்கு என்ற நுட்பமான அளவு கோல்களைக் கையாண்டு வர்ம மருத்துவம் செய்யப்படுகின்றது.

நோய் தீர்க்கும் வர்மக்கலை நுண்மான் நுழைபுலன் அறிவு முறைபடி எவ்வாறு இயங்குகிறது என்று பார்த்தால் நோயற்ற உடம்பில் உயிர் மின்சக்தி ஓட்டமானது தங்கு தடையின்றி 12 வர்ம நாடிகளின் வழியாக ஓடிக்கொண்டும் அவ் ஓட்டத்தில் தடை ஏற்பட்டால் சப்த தாதுக்களில் ஏற்படும் இரசாயன பௌதீக மாற்றங்களினால் உடலில் வலி, நோ, அசைவற்ற நிலை குளிர், வெப்பம், குறை பிரசவம், அங்க குறைவு மற்றும் முற்தோசங்களில் (வதம், பித்தம், கபம்) ஏற்படும் தாக்கத்தினால் பலவிதமான நோய்களுக்கு வழிவகுக்கும். எனவே அவ்வுறுப்புடன் நேரடித் தொடர்புடைய நாடி நரம்பின் மேல் அமைந்த புள்ளிகளில் முறையாக வர்மசிகிச்சையை மேற்கொள்ள அமிர்த ஓட்டம் என்று சொல்லப்படும் சீரான ஜீவகாந்த மின் அலைகள் உருவாகி மஜ்ஜை, நரம்பு, எலும்பு, நாடி வழியாக உள்வெளி நோக்கிப் பயணித்து அவ் உறுப்பை சுருங்கி விரிய வைத்து இயங்கச் செய்யும். இதனால் அவ்வுறுப்பில் வலி அல்லது நோ தந்து கொண்டிருந்த வேதிஇயல் மாற்றமடைந்து சக்திப் பொருளாக மாறுவதால் வலி நீங்கி வேத சக்தி பெற்றுக் குணமடைகின்றது.

மற்றும் ஜீவகாந்த மின் அலைகள் மீதமுள்ள அசுத்தங்களை வேதியல் மாற்றம் செய்து செந்நீரில் கலந்து நுரையீரல் பகுதிகள் மற்றும் கழிவு உறுப்புகள் ஊடாக உடலைவிட்டு நீங்குகின்றன. இதனால் உயிர் மின் ஓட்டத்தை நீக்கி சீரான ஜீவகாந்த மின் ஓட்டமும், காற்றோட்டம், வெப்ப ஓட்டம், இரத்த ஓட்டம் போன்றன நடைபெற்று உடலில் நோய் நீங்குகின்றது. இதுவே வர்மக் கலையின் சூட்சுமம். "காற்றடைத்த காயம் தன்னில் காயம் தோன்றாமல் வலி வராமல் உச்சி முடி முதல் பாத நகக்கண் வரை நலம் பேண" உதவுகின்றது.

எது வர்மம் என்று பிரித்தறிய முடியாத நிலையில் நமது அன்றாட வாழ்க்கை நெறிமுறைகள் அமைந்துள்ளன. வாழ்க்கையை நெறிப்படுத்துகின்ற ஒவ்வொரு செயலிலும் வர்மக்கலை பொதிந்துள்ளது.

**நமது அன்றாட வாழ்க்கை நெறிமுறைகள்**

**கரு உற்பத்தி**

ஆணும் பெண்ணும் சேருவதால் ஆண்கருவும் பெண்கருவும் சேர்ந்து மனிதக்கருவை உருவாக்குகின்றன. இது சாதாரண சிந்தனை. இக்கரு தாயின் வயிற்றுக்குள் ஒவ்வொரு மாதமும் எந்த எந்த உறுப்புக்களைப் பெற்று, வளர்ந்து பூமியில் நடைபோடுகின்றது என்பது மருத்துவ சிந்தனை. ஆண் பெண் கருவைச் செயற்கையில் வளர்த்து தாயின் கருவறைக்குள் வைத்துப் பூமியில் நடைபோட வைப்பது நவீன மருத்துவ சிந்தனை. தாயின் வயிற்றுள் உருவான கரு பூமியில் நடைபோடும் பொழுது அதன் ஆயுள்

100ஆண்டுகள் வாழ்வது எப்படி? நோயின்றி வாழ்வது எப்படி? உலக அறிவை உட்கொண்டு வாழ்வது எப்படி? ஞானம் பெற்று வாழ்வது எப்படி? பிரமத்தின் ஞானத்தைப் பெற்று வாழ்வது எப்படி? இவற்றோடு ஆண்தன்மை மிக்க ஆண்மகவைப் பெறுவது எப்படி? பெண்தன்மை மிக்க பெண்மகவைப் பெறுவது எப்படி? நோயற்ற மகவைப் பெறுவது எப்படி? நோயில்லா சமுதாயத்தை உருவாக்குவது எப்படி? என்பன போன்ற கருத்துக்களைக் கொண்டு சித்தர்களால் உருவாக்கப்பட்ட மருத்துவம் வர்ம மருத்துவமாகும்.

கர்ப்ப உற்பத்திக்கு முன் தாய் தந்தை செய்ய வேண்டும் பற்பல காரியங்கள் உண்டு. அவற்றுள் மிக மிக முக்கியமானவை மலஜல நீக்கம். உடம்பினுள் மலமும் ஜலமும் தேங்கி இருக்கின்ற பொழுது கரு உற்பத்தி ஆகுதல் கூடாது. அவ்வாறு மலமும் ஜலமும் வயிற்றுனுள் இருக்கும் பொழுது கரு உற்பத்தி ஆனால் பிறக்கும் குழந்தை ஊமை, குருடு, செவிடாக பிறக்கலாம். எனவே கரு உற்பத்திக்கு ஈடுபடும் தாய், தந்தை இருவரும் மலஜலம் நீக்கி இருத்தல் மிகமிக அவசியமான ஒன்று.

மேலும் தாய், தந்தை இருவரும் நெற்றியில் திலர்தகாலம் என்ற அக்கினையை இயக்குதல் உச்சியில் கொண்டைகொல்லி என்ற துரிய மையத்தை இயக்குதல் மிக அவசியமான ஒன்றாகும்.

திலர்தகாலத்தின் முக்கியப் பணி என்னவென்றால் கண், காது, மூக்கு, உடல் இவற்றின் நுகர்வுப் பொருளை எந்தவித மாற்றமும் இன்றி மூளையில் பதிவு செய்தல் வேண்டும். இது போல ஒவ்வொரு உறுப்பும் நுகரும் தன்மைகள் மூளைக்கு மாற்றமின்றி சென்று பதிவுகளை ஏற்படுத்த வேண்டும் அதற்குரிய முக்கிய ஆற்றல் திலர்தகாலத்தில் உள்ளது.

இத் திலர்த காலத்தின் ஆற்றல் மூளையோடு மட்டுமல்ல அநாகதத்தோடும் நேரடியாக தொடர்புடையது. இதனால் இருதயம், கல்லீரல், நுரையீரல், பித்தப்பை, மண்ணீரல், கணையம், சிறுநீரகம் போன்ற உடல் உறுப்புக்களை இயக்கும் ஆற்றலும் திலர்த காலத்தில் உண்டு. எனவே திலர்தகாலம் மூளை மற்றும் உடல் உறுப்புக்களோடு தொடர்புடையது என்பதை உணர்தல் வேண்டும். திலர்த காலத்தை மிதமாகத் தொட்டு கைபாகம் செய்பாகங்கள் செய்வதன் மூலம் ஐம்பொறிகள், புலன்கள், மூளை, உள்ளுறுப்புக்களான இருதயம், மண்ணீரல் போன்றனவும் ஆற்றலுடையனவாகத் திகழ்கின்றன. இதுபோல கொண்டைக் கொல்லி என்ற துரிய பீடத்தையும் ஒவ்வொருவரும்

அறிந்திருத்தல் வேண்டும். வர்ம நூல்கள் இக் கொண்டைக்கொல்லி இடத்தை வெகுவாகச் சிறப்பித்தும் பேசுகின்றன. இவ் விடத்தில் 216 நரம்புகள் பின்னிப்பிணைந்து செல்லுகின்றன. மேலும் மூளையின் செயற்பாட்டை சீராக்குவது இவ் இடத்தில் முக்கிய வேலையாகும். பெருமூளை, சிறுமூளை, ஆனந்தமூளை (மனோன்மணி) என்ற மூவகை மூளைகளையயும் இயங்குகின்ற ஆற்றல் கொண்டைக் கொல்லியில் குவிந்துள்ளது.

இதனால் இவ்விரண்டு வர்ம இடங்களையும் ஒருவர் தினம் தினம் மிதமாக அசைத்து விட்டால் அவ்விடங்களிலுள்ள மிக நுண்மையான ஆற்றல் உடல் முழுவதும் பரவி உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உதவுவதுடன் மூளையின் உட்பக்கம் உள்ள "விந்து மூலம்" உருவாக காரணமாக அமைகின்றது. மூளையிலுள்ள விந்து மூலம் வாசியோடு கலந்து நுண்மையான ஆற்றலாக தச வாயுவின் இயக்கத்தால் உடலில் உள்ள எத்தனை நுண் அறைகள் (செல்ஸ்) வழியாக ஊடுருவி அவற்றின் ஆற்றலையும் தாங்கி கரு உற்பத்திக்கு தயாரான நிலைக்கு வருகின்றது.

கரு உற்பத்தி உறுப்புக்களைச் சென்றடையும் பொழுது தான் விந்து மூலம் ஆணுடம்பினுள் இயங்கும் பொழுது சுக்கிலமாகவும், பெண்ணுடம்பினுள் சுரோணிதமாகவும் மாறுகின்றது. எனவே ஒரு ஆண் பெண்ணின் மூளை, பொறி, இருதயம், உள்ளுறுப்பு, தசவாயு, நாடி, இரத்தம் முதலான சப்த தாதுவின் கூட்டமைப்பு இவற்றோடு நுண்மையான சூக்கும உடலின் பதிவுகளோடு மனித உடல் எடுக்க, பிரம்மத்தை அறிந்து செயற்பட பிரமத்தின் பிரதிபலிப்பாக வருகின்ற மூலக்கூறு என்பதை மனதில் கொள்ளுதல் நன்று.

இந்த விந்து மூலத்தை வெற்றி எனும் பாதையில் செலுத்தினால் ஒருவன் ஞானத்தை அடைய முடியும் என்பது சித்தர்களின் கருத்து. விந்துஜெயம் என்ற திருமூலரின் கருத்தையும் அதேபோல் திருவிவிலியத்தில் "ஒருவன் உலகமெல்லாம் தன தாக்கிக்கொண்டாலும் அவன் ஆன்மாவுக்கு கேடு விளைந்தால் அதனால் வரும் பயன் என்ன?" என்ற வசனத்தையும் இங்கு ஒப்புநோக்குவது நல்லது. அது போல ஞானத்தை அடைய உதவியாக இருக்கும் விந்து மூலம் சுக்கில சுரோணிதத்தோடு கலந்து மனிதனாக மாறும் தன்மையுடையது எனவே தான் மனிதன் ஒவ்வொருவரும் பிரமத்தின் ஞானத்தை அறியும் பாக்கியவானாக வருகின்றான்.

மேற்கூறப்பட்ட திலர்தம், கொண்டைக்கொல்லியில் இயங்கும் ஆற்றல் விந்து வாசி இவற்றோடு கலந்து பிராணன் முதலான தசவாயுக்களோடு கலந்து ஆதாரங்களின்

ஆற்றலோடு ஒரு கருவாக தாய் தந்தை மூலம் உருவாவதை நம் சித்தர்கள் கருவிலே திருவுடையார் எனக் கூறுகின்றனர் கருவிலே நோய் நீக்கம் செய்யப்பட்ட திருவுடைய குழந்தைகளைச் சமுதாயம் பெறுதல் வேண்டும். நோயற்று வாழ மருத்துவன் தேவையில்லை. தாய், தந்தை இருவருமே குழந்தைகளை நோயற்ற குழந்தைகளாகப் பெற்றுத்தருதல் இயலும். இது வர்ம சித்தர்களின் கொள்கை.

இதனால் மதம், இனம், மொழி, வருணம் வேறுபாடு இன்றி பூமியில் இருக்கும் அத்துனை ஆண்களும் பெண்களும் திலர்தம் கொண்டைக்கொல்லிடை இயங்கி இல்லறத்தில் நல்லறம் காணவும் சமுதாயம் நன்முறையில் வாழவகை செய்யும் குழந்தைகளைப் பெறுவதற்கு உதவ வேண்டும். துறவறத்தை விரும்புவர்களும் இவ்விடங்களை இயங்கினால் "விந்து செயம்" பெற்று பிரம்மத்தை உணரும் பாக்கியத்தைப் பெறுவர் என்பதில் ஐயமில்லை.

**குழந்தை மீது பிறர் தீண்டல்**

உரம் விழுதல் அதாவது ஒரு வருடத்திற்குள்ளான குழந்தையைத் தாயைத் தவிர வேறு ஒருவர், அக் குழந்தையின் இடது பக்கமும் வலது பக்கமும் தம் கைகளை ஊன்றிக் கொஞ்சி விளையாடினால் அவரிடமிருந்து அக்குழந்தையின் நெஞ்சுப் பகுதியில் ஆற்றல் ஈரர்த்துக் கொண்டால் ஆற்றல் மிகுதியால் உடல் வலி ஏற்பட்டு அழ ஆரம்பிக்கும். இதற்கு துணியை இருவர் இருபக்கத்தில் இருந்து பிடித்துக்கொண்டு குழந்தையின் உடல் உருளும்படி அசைப்பர். இதனால் குழந்தையின் உடலில் உள்ள அதிக ஆற்றல் குறைந்ததும் குழந்தை சமநிலைப்படுகின்றது.

பட்சிதோசம் என்றால் பறவைகளால் மனிதனுக்கு ஏற்படும் குற்றம் ஆகும். அதிகாலைவேளை, அந்திசாயும் வேளைகளில் குழந்தைகளின் தலைக்கு மேல் ஆந்தை கோட்டான், கூகை, வௌவால், கருங்காகம் முதலான பறவைகள் பறந்தால் அவற்றின் தீய ஆற்றலால் குழந்தையின் உள்சென்று நோய் செய்யும். இது கர்ப்பிணி பெண்களுக்கும் பெரியவர்களுக்கும் பொருந்தும்.

**படுக்கை நிலை**

உணவு உண்டதும் படுப்பது உடலுக்கு ஊறுதரும். உண்ட உணவு இரைப்பையில் தங்கிய பிறகு படுப்பது நல்லது. மன அமைதியை வேண்டுபவர் கிழக்கு பக்கம் தலைவைத்துப் படுப்பது நல்லது. சிந்தனை ஆற்றலைப் பெறுபவரும் சித்திக்கு முயற்சிப்பவரும் தெற்கே தலை வைத்துப் படுப்பர். "வடக்கொரு கோணம் தலை செய்யார்" (*ஆசாரக் கோவை 30*)

எப்பொழுது படுத்தாலும் இடது கைப்பக்கமாகப் படுப்பது நல்லது. இதனால் இருதயம் இரப்பை சார்ந்த ஆற்றல் உடலுள் பரவி உடலை வலுப்பெறச் செய்கிறது. இதனால் வலது பக்கம் மூச்சுக்காற்று வெளியேறுவதால் மூச்சுக்காற்றின் இழப்புத்தன்மை குறைந்து ஆழ்ந்த நித்திரை கிடைக்கும். ஆயுள் பரீட்சை என்ற தலைப்பில் திருமூலர் இதுபற்றி கூறியுள்ளார்.

படுக்கைக்குச் செல்வதற்கு முன்னர் காலினைக் குளிர்ந்த தண்ணீரால் கழுவிவிட்டு நன்றாக துணி வைத்து துடைத்து விட்டு செல்ல வேண்டும் "பள்ளியுள் ஈரம் புலராமை யேறற்க...." (ஆசாரக்கோவை 19) இது தூய்மையை வலியுறுத்தும் செய்தியாகும். துணியால் துடைப்பதால் உள்ளங்கால் வெள்ளை, முத்துத்தாமரை, பாதச் சக்கரம், பூமிக்காலம், படங்கால் வர்மம், விருத்திக்காலம், புளிமுத்தடங்கல் என்ற வர்ம இடங்கள் அசைக்கப்படுவதனால் முறையே நுரையீரல், இருதயம், மூளை, கணையம், கண்கள், இடுப்புப்பகுதி, இடகலை, பிங்கலை, ஓட்டம் ஆகிய வேலைகள் ஒழுங்காகும். இதனால் பிராணனின் இயக்கத்தை சீராக்கி நிம்மதியான நித்திரை கிடைக்கும்.

படுத்து உறங்கும் போது படுக்கை விரிப்பால் முகம் வரை மூடிப்படுத்தல் கூடாது. "மீக்கோள் உடற்கொடுத்துச் சேர்தல்வழி" (ஆசாரக் கோவை 19) அவ்வாறு செய்வதனால் சுத்தமான காற்றுக்கு பதிலாக அசுத்தமான காற்றை சுவாசித்து அதனால் உடல் ஆற்றலான பிராண ஆற்றல். பலம் குறையும். மறுநாள் காலை உடல்வலு குறையும். ஆகவே நல்ல காற்றோட்டமான இடத்தில் நிலத்தில் இருந்து சற்று உயர்ந்த அல்லது கட்டில் மட்டத்திலும் துயில்வது நல்லது. இதனால் (கனம் குறைந்த) சுத்தமான வாயுவை சுவாசிப்பதால் பிராண ஆற்றல் பெருகி உடல் வலுவாகும்.

வீட்டுத் தலைவாசலில் தலைவைத்து படுப்பதினால் வாசல் வழியாக வீட்டினுள் உட்புகும், வெளியேறும் காற்று நம் உடல் ஆற்றலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும். அத்துடன் தளர்வான ஆடைகளை உடுத்துவது நல்லது மிக மெல்லிய தலையணையை வைத்து துயில் கொள்ளும் போது கழுத்து நரம்புகளை ஆற்றலுடையதாக ஆக்கும். குதிக்கால்களுக்குத் தடை இல்லாமல் ஆற்றலைச் செலுத்தும். "இலவம் பஞ்சு" தலையணை மிக சிறந்தது.

படுக்கை அறையுள் மின் விசிறியை மிதமாகச் சுழல விடலாம். காற்று காதுக்குள் விரைவாகப்படுவதால் முகவாதநோய் வரக் காரணமாக அமையும் அத்தோடு

பிரபஞ்சத்தில் இருந்து உடல் உறுப்புக்களை ஈர்த்துக் கொள்ளும் "விண் ஆற்றலை" தடை செய்வதால் காலையில் விழித்து எழும்பொழுது உடல் சோர்வாக இருக்கும். அன்றைய வேலைதிட்டங்கள் தடைப்படும் மூளையின் சேர்வை உணர முடியும்.

தூங்கும் நபரின் உடலை தொட்டு எழுப்புதல் கூடாது (முதலில் கூப்பிட்டு பின்னர் பாதத்தில் மிதமாகத் தட்டி எழுப்புதல் நல்லது). ஏனெனில் பருவுடல், நுண்ணுடல் சேர்க்கையில் சிக்கல் ஏற்படும் சிலருக்குத் தலைவலியும் சிலருக்கு இத்தாக்கத்தால் வெகுநாள் சென்ற பின் நரம்பு, மனஅழுத்தம் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. தூக்கத்தில் பரு உடம்பும் நுண் உடம்பும் தனித்தனியாகச் செயற்படுவது உண்டு. எனவே இருக்கையில் அமர்ந்து உறங்குவதை தவிர்த்தல் வேண்டும். படுக்கையில் கால்களை நீட்டித் தூங்குதல் நல்லது. உறங்குவதற்கு முன் படுக்கையில் படுத்த நிலையில் மிதமாக மூச்சுக்காற்றை இழுத்து விட்டு அதை கவனித்த நிலையில் (மனம் ஒருநிலைப்படுவதனால்) தூங்கும் போது நல்ல தூக்கம் வரும். இதனால் பிரண ஆற்றல் அதிகரித்து உணவு செரிமானம் சரிவர இடம் பெற்று உடலுக்கும் உயிருக்கும் தேவையான சக்தியை அவை பெற்று புத்துணர்ச்சி பெறுவதோடு, மனஅழுத்தம், அஜீரணக் கோளாறுகள் என்பவை தவிர்க்கப்படுவதினால் இவற்றினால் ஏற்படும் பிறநோய்களும் தவிர்க்கப்படுகின்றன.

படுக்கையிலிருந்து துயில் எழுவதற்கு முன்பு கால்களையும் கைகளையும் நன்றாக நீட்டி தசைகளை அசையும்படி மெதுவாக செய்தல் வேண்டும். அல்லாமல் வேகமாக வீசிய நிலையில் செய்தால் இடுப்பு, கைத்தோள் பட்டை தொடர்பான நோய்கள் வர வாய்ப்புண்டு எழுவதற்கு முன் உந்திப் (தொப்புள்) பகுதியை மிதமாக கைகளால் அழுத்திவிடவும் பின் முதுகுப்பகுதியை முழுமையாகப் படுக்கையில் அழுந்தி இருக்குமாறு ஐந்து நிமிடம் படுத்துவிட்டு வலது பக்கமாக சரிந்து எழுதல் நல்லது. இச் செயல்முறையால் உடலுள் வேத சக்தியின் ஆற்றல் ஒழுங்காகும் உடல் உயிர் மனம் மூன்றும் செம்மையாகும்.

உறங்கி எழுந்தவுடன் குளிர்ந்த நீரில் முகம் கழுவுதல் நல்லது. ஒத்துக்கொள்ளாதவர்கள் இளஞ்சூடான நீரை பயன்படுத்தலாம். கண்ணும் மூக்கும் சேருகின்ற இடத்திலிருந்து, காது நோக்கி தண்ணீரால் மிதமாக அழுத்தித் தடவி கழுவுதல் வேண்டும் இதனால் இவ்விடத்தில் இருகின்ற வேத சக்தி கண்களைக் குளிர்ச்சி பெறச் செய்யும். கண்ணீர் பையை வலுவுடையதாக்கி கண்ணை, கண் நரம்புகளை பாதுகாக்கும். இவ்விடத்தில் ஏற்படும் பிராண இயக்கமானது (வேதசக்தி) இரப்பை, இருதயம், சிறுநீரகம், மலஜல உறுப்புக்களை இயக்கம் பெறச் செய்து (உடற்கழிவுகளை) வேதியல் மாற்றக் கழிவுகளை வெளியேற்ற உதவுகின்றது.

முகத்தை அடிக்கடி கழுவுவதால் இதயத் துடிப்புச் சீராக்கப்படுகின்றது. காது நோக்கி தூண்டப்படுவதினால் முன் மூளையை ஆற்றலுடையதாக ஆக்குவதினால் சுக்கிலம், சுரோணிதம் சார்ந்த பகுதிகளுக்கு ஆற்றலை கொடுக்கின்றது. மேலும் சுவாசப்பை காரீரல்களுக்கு ஆற்றலைப் பாய்ச்சுகின்றது. நாக்கை அடிவரை வழித்து அழுத்தி கழுவுவதினால் பெருங்குடல் இயக்கம் பெறத் தொடங்கி இரப்பை வரை அழுத்தம் ஏற்படுவதால் மலஜலம் சீராக கழிப்பதற்கு இலகுவாக்கப்படுகின்றது. இதனால் உடலில் அசுத்தங்கள் அகற்றப்படுகின்ற பொழுது பசி தூண்டப்பெற்று உடலுக்குத் தேவையான ஆற்றல்களை பெறுவதற்கு உதவியாக அமையும். இதனால் மூலநோய், மாதவிடாய் நோய், பெரும்பாடு, குடல் இறக்கம் என்பன வருவதை தவிர்க்கின்றது.

**கை கழுவுதல்**

சாப்பிடுவதற்கு முன்னர் கைகழுவுகின்ற பழக்கம் சுகாதாரத்தை உணர்த்துகின்றது என்றாலும் இருதயத்தை இயக்கும் புள்ளிகள் உள்கையிலும் மூளையை இயக்கும் புள்ளிகள் புறங்கையிலும் கைவிரல்கள் ஐந்திலும் பிராணன், உதானன், வியானன், அபானன், சமானன் என்ற வாயுக்கள் தொழில் செய்கின்றன. எனவே இச்சிறு அசைவு மேற்சொல்லப்பட்ட வாயுக்களை இயக்கம் பெறச் செய்து உடலினுள் இரைப்பை, கணையம், காரீரல், வெள்ளீரல் (கல்லீரல்,, மண்ணீரல்), பெருங்குடல் ஆகிய உறுப்புக்களை சீராக இயங்கச் செய்கின்றது.

**எண்ணெய் தேய்த்துக் குளித்தல்**

வாரத்தில் ஒருமுறையாவது உடலுக்கு எண்ணெய் தேய்த்து குளிப்பதனால் நாடி, நாளங்கள் (நரம்புகள்) இயக்கப்பட்டு மர்ம ஸ்தானங்களில் தேங்கி நிற்கின்ற ஜீவகாந்த ஓட்டம் சீராகி உடல் ஆரோக்கியத்தைத் தருகிறது என்றால் வர்மம் நம் வாழ்வில் எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என அறியலாம்.

**வழிபாட்டு முறைகள்**

தமிழரிடம் ஒட்டிப்பிறந்த பண்புகளுள் ஒன்று ஆன்மீகத் தன்மை. உடலுள் இயங்கும் சூக்கும ஆற்றலைத்தான் ஆன்ம வளர்ச்சிக்கு மூலம் என கீழ்வரும் பாடல் மூலமாக அறியலாம்.

"இவ் உடல் இழுக்கு என இருந்தேன்
அதனுள் உட்பொருள் கண்டேன்
அதன்பின் அவ் உடலை தூய்மை எனக்கண்டு
அதனை பாதுகாக்க கருதினேன்"

என்று குறிப்பிடுவது மட்டுமன்றி இறைவனையும் வேதி என்ற நுண்பொருளாகவே

திருமூலர் கண்டார். இதன் மூலம் மருத்துவமும் ஆன்மீகமும் கலந்த ஒரு கலை வர்மக் கலை. இதற்கு ஆன்மீகச் சாயல் பெருமளவில் பூசப்பட்டு பலருக்குத் தெரியாத எட்டாக் கனியாக ஆகிவிட்டது.

இதை உணர்ந்தவர்கள் காலத்துக்கு காலம் தாம் உணர்ந்தவாறு இச் சூக்சுமத்தை பருப்பொருளாக காட்டவும், அன்றி அதைச் செயற்படுத்த பொருளுடைய ஒலிகளை எழுப்பச் செய்து ஆன்மீகம், யோகம் போன்ற சாதனைகளைச் செய்ததுடன் மனிதனை இறைவனாக ஆக்கவும், தன்னைப் பாதுகாக்கவும், சொல் வெல்லவும், வில் வெல்லவும் இந் நுண்மை ஆற்றலை பயன்படுத்தினர். அது மட்டுமன்றி இதற்கு

வைதீக சமயம் : இறைகோட்பாடு
பௌத்தசமயம் : கணபங்கக் கோட்பாடு
சமணர் சமயம் : அணுக்கோட்பாடு
சைவசமயம் : சிவக் கோட்பாடு
தாந்திரீகர் : இயற்கைக் கோட்பாடு
வேத நூல்கள் : பிராண சக்தி
ஆன்மீக நூலார் : இறை (இறைவன்)
அறிவுநூலார் : மெய்ப்பொருள்
தத்துவ நூலார் : செம்பொருள்

சித்தர்கள் : வாசி, சரம், காற்று, கலை, உயிர், இறை, கூர், மாய்கை, புரவி, வேதி, மாற்றம், நிலை வர்மம், மர்மம் என பெயரிட்டு முழு வடிவம் கொடுத்தனர்.

**யாத்திரை**

ஒரு மனிதனுடைய வாழ்வில் ஏற்படுகின்ற, ஒழுங்கற்ற கற்பனையில் தோன்றுகின்ற எண்ணங்களின் எழுச்சிக்கும் நிஜவாழ்க்கைக்குமிடையிலான வேறுபாடுகளினாலும் வாழ்க்கை நெறிமுறையில் ஏற்படுகின்ற செயற்பாடுகளின் தோல்வியினாலும், பிரபஞ்சத்தில் ஏற்படுகின்ற மின்காந்த அலையில் (கிரக கோளாறு) ஏற்படுகின்ற கதிர் இயக்கத்தினாலும் ஒரு மனிதன் உடலில் ஏற்படுகின்ற இரசாயன வேதியல் மாற்றத்தினால் மன அழுத்தம் அல்லது இறுக்கம் ஏற்படுகின்றது. இதனால் மனநிம்மதி தேடி யாத்திரையாக பிறிதொரு இடத்துக்செல்லும் பொழுது அங்கு நிகழும் பிறழ்வுக் காற்றானது அவனது உடம்பில் தென்றலாய்படுகின்ற பொழுது அவனது தோல் ஆனது மெல்லிய அசைவு ஏற்பட்டு உட்செல்லும் பொழுது, தன்னை மறந்த நிலையில் அமைதி நிலையை அடையும் பொழுது, பிரணவமானது உடல்முழுவதும் சென்று மர்மச் ஸ்தானங்கள் இயக்கப்பட்டு வேதியல் மாற்றம் அடைந்து உடல் பூராகவும் உள்ள

தசவயுக்கள் இயக்கப்பட்டு சப்த நாளங்கள் தூண்டப்பட்டு உடல் இலேசாகின்ற பொழுது, மன அழுத்தம் அல்லது இறுக்கம் இல்லாமல் போகின்றது.

காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி, இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலாநிறைய நீரமையவாட்டிய
பூசனை ஈசனார்க்குப் போற்றிக் காட்டினோமே" (அப்பர் தேவாரம்)

நாளமில்லாத சுரப்பிகளின் இயக்கம் இதனால் சீராக்கப்படுவதினால் பலவிதமான நோய்களிலிருந்து விடுபட முடிகின்றது. மட்டுமல்லாமல் உறவுகளையும் மேம்படுத்த முடிகின்றது. இதை உணர்ந்த ஞானிகள் தத்தம் சமயங்களில் யாத்திரை செல்ல வேண்டும் என மக்களை வழி நடத்தினார்கள். ஆனால் தற்காலத்தில் யாத்திரை செல்லல் என்பது தம்முடைய உலகியல் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை பூர்த்தி செய்வதாக எண்ணியே யாத்திரை செல்லுகின்றனர். இதனால் ஏமாற்றமே மிஞ்சுகின்றது. ஒழிய உடல், மனம் மேலும் இறுக்கம் அல்லது அழுத்தம் அடைந்து மென்மேலும் துன்பத்துக்கு உள்ளாக்கப்படுகின்றான். இதனால் கடவுள் இல்லை அல்லது இறை சக்தியை உணராமல் தன் மூலத்தை நிந்தனை செய்து சமயம் மாறினால் நிம்மதி கிடைக்கும் அல்லது உலக தேவையை பூர்த்தி செய்து கொள்ளலாம் என்று எண்ணி மேலும் மேலும் உடல் துன்பம், மனதுன்பம் அடைகின்றான். ஆகவே யாத்திரை என்பது உடல், மனம் போன்றவற்றுக்கு ஓர் பயிற்சியே தவிர உலகத் தேவையை பூர்த்தி செய்ய அல்ல என்பதை உணர வேண்டும்.

**தலையில் இரு கன்னத்திலும் குட்டுவது, சிலுவை அடையாளம் இடுதல், அங்கங்களில் திருநீறு அணிதல், தலைப்பாகை அணிதல்**

இது இடகலை, பின்கலை இரண்டு நாளங்களில் (சிவசக்தி நாளங்கள்) தாக்கப்படுவதினால் அவ்விடத்திலுள்ள வர்மபுள்ளிகள் இயக்கப்பட்டு மூளைக்கும் உடல் பூராகவும் பிராணன் செலுத்தப்பட்டு, தசவாயு சீராக்கப்பட்டு பருவுடலும் நுண்உடலும் இணைந்து செயற்படும். இதனால் மூளை நரம்புகள் சரிவர இயங்குவதினால் மனம் என்ற அறிவு உடல்பூராகவும் குவிக்கப்படுகின்றது. இதனால் பிராணசக்தியானது வேதியல் மாற்றத்துக்கு உள்வாங்கி உடலையும் மனதையும் செம்மையாக வைக்க உதவுகின்றது.

தோப்புக்கரணம், பஞ்சாங்க நமஸ்காரம், அடி அழித்தல், அட்டாங்க நமஸ்காரம், அங்கப் பிரதட்ஷணம், கற்பூர சட்டி எடுத்தல், காவடி எடுத்தல் இவற்றைச் செய்கின்ற பொழுது இடகலை பின்கலை என்பன இயக்கப்படுவதன் ஊடாக சுழுமுனை நாடி இயக்கப்பட்டு மூலாதாரம் என்ற மூல அக்கினி எழுச்சி பெற்று ஒவ்வொரு சக்கரத்தின்

ஊடாகவும் துரியம் வரை எழுந்து பிரபஞ்ச சக்தியோடு இணைக்கின்றது. இச்செயற்பாடானது தசவாயுக்கள் இயக்கப்பட்டு முற்தோசங்களும் சமநிலையில் இயங்க உதவுகின்றது. இதனால் கால் மூட்டுவலிகள், இடுப்புவலி, வயிறு தொப்பை, சமிபாட்டுத் தொகுதி, மலசல உறுப்புக்களில் ஏற்படும் அபானவாயுக்களின் தொந்தரவு, முள்ளந்தண்டு, கால்தொடைகள், இடுப்பு பகுதிகளில் வலிகள் ஏற்படல் என்பன இல்லாதொழில்கின்றன. காதுகளில் கை பிடிப்பதனால் தலைப்பகுதியில் உள்ள நரம்புகள் இழுக்கப்படுவதனால் மூளைக்கு இரத்தம், வாயுகள் சீராக இயங்குவதால் காது தொடர்பான நோய்கள் சீராகுதல், ஞாபகசக்தி ஏற்படுதல் என்பன சீராக்கப்படுகின்றன.

அத்துடன் பெண்களுக்கு ஏற்படுகின்ற பால் உறுப்புக்கள் தொடர்பான பிரச்சினைகள், கொங்கை (மார்பு), பிள்ளை பெற்ற பின் ஏற்படுகின்ற வயிறு வீக்கம், நரம்பு நிலந்தி, மூட்டுக்களில் ஏற்படுகின்ற வலி, தலைக்கு ஏறும் பித்தம் தொடர்பான நோய்கள், மன இறுக்கம் போன்ற நோய்களை சீராக்குவதற்காக வழிபாட்டு முறைகளில் இவ்யோக முறைகள் புகுத்தப்பட்டுள்ளன.

இக்கலையானது தமிழ்க் கலாசார பண்பாட்டில் வளர்ந்து வந்த கலை என்பதற்கு தமிழ் இலக்கண நூலான ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியன் காட்டும் "உந்தி முதலா முந்துவளித்தோன்றி" எனத் தொடங்கும் நூற்பா கூட தமிழனின் மருத்துவத்தின் தொன்மையை காட்டுகின்றது. மொழியைக் கூட மருத்துவமாகப் பயன்படுத்திக் காட்டியவர்கள் தமிழர்கள் என்பதற்கு வர்மக்கலை பாடல்களும் தொல்காப்பிய நூற்பாக்களும் சங்க இலக்கியங்களான புறநானூறு, பரிபாடல் என்பனவும் சான்று பகர்கின்றன.

ஆனால் இக்கலையானது போகர், கோரக்கர் மற்றும் அவர்களுடைய சீடர்களால் சீனாவிலுள்ள துறவிகளுக்கு போதிக்கப்பட்டு அங்கு "அக்குப்பஞ்சர்" என்றும் அதிலிருந்து ஜப்பானியர்கள் "சியாச்சு' என்றும் கொரியாவில் 'சுஜோக்' என்றும் ஐரோப்பியர்கள் 'ஜொன்திராப்பி' என்றும் வெவ்வேறு பெயர்களில் வழங்குகின்றது. வர்மத்தின் சில பிரிவுகளை உள்ளடக்கி மருத்துவ உலகுக்கு அறிமுகம் செய்கின்றனர். ஆனால் நம் கலையை தமிழர்களாகிய நாம் உணராமல் அது வாழ்க்கைக்கு எவ்வாறு பயன்படுகிறது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

# எங்களூர் சில்லையூரே

ஆ.த. குணத்திலகம்

ஓய்வு நிலை ஆசிரியர் சில்லாலை

1. சில்லையூர் எங்களூர் சீர்பல நிறைந்தவூர்
எல்லையில் வளத்துடன் எழில் கொழிக்குமூர்
தொல்லைகள் இல்லாவூர் தூய செந்தமிழூர்
இல்லை என்பவர் இல்லாத சில்லையூரே

2. மாதகல் வடக்கிலும் மாகடல் மேற்கிலும்
பண்டத் தரிப்புக் கிழக்கிலும் வடலியூர்
பணிப்புலம் தெற்கிலும் எல்லையாய் கொண்டிடும்
பல்வளம் கொண்ட எங்களூர் சில்லையூரே

3. சின்னால மரங்கள் பல முன்நாளில் நின்றதனால்
சின்னாலை என்னும் பெயர்வந்து மருவியும்
நெல்லாலை நிறைந்த தொல்லூரே மருவியும்
சில்லாலை ஆனதெனச் சொல்லுமூர் சில்லையூரே

4. கதிரையில் இருந்து கன்னி மரியாளும்
குதிரையில் அமர்ந்து புனித யாகப்பரும்
நதியென பாய்ந்திடும் நல்லருள் வீசி
மதிமுகம் மருவிடும் மாசிலாச் சில்லையூரே

5. அன்னை மரியாயின் அருளதைப் போற்றியே
சின்னரோமை எனச் சொன்னாரர்கள் மேல் நாட்டார்
என்ன குறைகளும் ஏற்படா தெமைக் காக்க
முன்னவள் கதிரையில் உறையுமூர் சில்லையூரே

6. வேண்டுவார் குறைநீக்க விரும்புவரம் அளித்தருளும்
தாண்டவன் முதல்மகன் தரித்துறையும் சாந்தையூரும்
மான்மகள் தெய்வானையுடன் மயில் மீது அமர்ந்தவனும்
மேன்மையுடன் விளங்கிடும் ஊரெங்கள் சில்லையூரே

7. வீரசைவகுல மன்னர்கள் யாழ். மண்ணை
தீரமுடன் ஆண்டபோது தேவியர் நீராட
"நீராவியடி" என்னும் தாடாகம் அமைந்தவிடம்
ஆராய வேண்டியதாய் அமைந்தவூர் சில்லையூரே

8. மாதவள் சங்கமித்தை மாபோதிக் கிளையுடன்
பாதம் பதித்திட்ட சம்பில் துறையதுவும்
நாதன் சம்புகேஸ்வரன் நங்கைஒரு பாகங்கொண்டு
வேதங்கள் ஓதி வதியும்பதி சில்லையூரே

9. வெற்றிலை பாக்குடன் விரும்பிடும் பழவகை
மற்றும் பலவித மரக்கறி வகையுடன் திரி
சுற்றிலும் களனிகள் சூழ்ந்ததோர் வளமிகு
நற்றிரு நிறைந்திடும் நம் சில்லையூரே

10. பஞ்சமெனும் பேயை விரட்டி அடித்துநிதம்
கஞ்சி அளித்திடும் களனிகள் சூழ்ந்ததுவும்
கொஞ்சிக் கடலுடன் விளையாடும் வானமும்
நெஞ்சுரம் கொண்டோரின் உறைவிடமும் சில்லையூரே

11. வன்மை மிகுந்துவா னளாவி வளர்ந்துயர்
நன்மை அளிக்கும்நற் பனைகள் நிறைந்தவூர்
தன்னலம் கருதாத தவயோசவ் வாசடிகளார்
முன்னர் கால்பதித்த முத்தான சில்லையூரே

12. கட்டடம் அமைப்பதில் கைதேர்ந்த கலைஞர்களும்
மரத்தைச் சிலையாக்கும் மாசிற்ப விற்பன்னரும்
அறிவில் ஆதம அறிஞர்கள் பலரும்
செறிவுடன் வாழுமூர் எம் சில்லையூரே

13. எல்லோரும் கைவிட்ட பொல்லாத நோய்களுக்கும்
சில்லாலை சென்றுவிட்டால் இல்லாமற் போகடிக்கும்
சித்த வைத்தியத்தில் மெத்த புகழ்படைத்த
பத்துத் தலைமுறையார் வாழ்ந்தவூர் சில்லையூரே

14. இத்தனை பொலிவுடன் இருந்த எம்மூரின்று
அத்தனையும் இழந்தது துர்அதிஸ்டம் அன்றோ
முப்பது வருஷப் போரின் வலிமாறி
இப்போது மீண்டெழும் எம் சில்லையூரே

# கற்பு நிலை காத்து நிற்போம்

பண்டை நகர் நாயகன்

பத்திரிகை படித்துப்பல புதினங்கள் அறிகின்றோம்
நித்திரையும் இல்லாமல் புரண்டுமனம் வெம்புகின்றோம்
சத்தியமாய் மனிதத்தை மறந்து நாம் நிற்கின்றோம்
உத்தமராய் நினைத்தோரை ஊதாரியாய்க் காண்கின்றோம்

சித்தம்தனைச் சிதறவைக்கும் செய்திகளைப் படிக்கின்றோம்
நித்தம் இது தொடர்கதையாய் வருவதையும் காண்கின்றோம்
யுத்தம் தொலைந்த போதிலும் இவ்வுலகம் பார்க்கின்றோம்
சுத்தமாக இதை ஒழிக்க சுகந்திரமாய் கை கோர்ப்போம்

குழந்தை முதல் குமரி தாண்டி பாட்டிவரை நுகர்கின்றோம்
மடந்தையாகப் பெண்ணை எண்ணி பண்ணும் கொடுமை காண்கின்றோம்
உடந்தையாக ஒத்துப்போனால் ஒன்றுமில்லை என்றிருப்போம்
குழந்தைகட்கே குழந்தைவழங்கும் கொடுமையை நாம் என்னவென்போம்

பக்கம் புரட்டிப்பக்கம் பார்த்தால் வெட்கப்பட்டுக் கொள்ளுகின்றோம்
தர்க்கம் புரிந்து குற்றம் மறைத்து தப்பிக்கொள்ளக் பார்க்கின்றோம்
அன்னை பெண் பிள்ளை உறவை அவமதித்தே வாழுகின்றோம்
மண்ணை நம்பி வாழும்பெண்ணின் கற்பைக் கெடுத்துக் கொள்ளுகின்றோம்

வல்லுறவு வன்புணர்வு சொல்லுறவைக் காண்கின்றோம்
நல்லுறவு கொள்ளும் மனித நேயத்தைத் தொலைக்கின்றோம்
கள்ளமுள்ள காமுகராய் உள்ளவரை வாழ்கின்றோம்
பிள்ளைமுறை உள்ளோரிலும் காமம் தீர்த்துக் கொள்ளுகின்றோம்

மற்றவனை பழியாக்கி அந்தஸ்த்தைப் பேணுகின்றோம்
உற்றவனே பயிர்மேயும் உண்மையை நாம் என்னவென்போம்
கற்றவனும் காமத்தீயில் காய்கின்றான் கண்டுகொண்டோம்
சற்றேனும் மாற்றம் செய்ய நாம் கொஞ்சம் சிந்திப்போம்

எனவே................!
கடமைகளை நன்குணர்ந்து கண்ணியத்தைக் கடைப்பிடிப்போம்
மடமைகளைப்போக்கும் நல்ல அறிவுரைகள் கொடுத்து நிற்போம்
வறுமை நிலை வந்தாலும் கற்பு நிலை காத்துக் கொள்வோம்
பொறுமை தனை மூலமாக்கி முழுவதையும் வென்று கொள்வோம்

# நாணயங்களின் தோற்றமும் முத்திரை நாணயமும்

கதிரேசு துஸ்யந்தினி
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொல்லியல் திணைக்களம்.

நாணயங்கள் தோன்றிய வரலாறு மனித வரலாற்றோடு பின்னிப்பிணைந்தது. ஆதிகால மக்களுக்கு தேவைப்பட்டதெல்லாம் உணவு, உடை, உறைவிடம்தான். இவற்றைக் கூட அவன் இயற்கையின் வாயிலாகப் பெற்று வேறு எவ்வித விருப்பமும் கவலையுமின்றி வாழ்ந்து வந்தான். நாளடைவில் பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து தனி இனமாக அல்லது சமுதாயமாக வளர்ந்தது. இவ்வாறு தோன்றிய ஒவ்வொரு இனத்தவரும் தமக்கென்று குறிப்பிட்டதொரு வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டனர். தாம் உற்பத்தி செய்த எல்லாவற்றையும் அந்தந்த இனத்தவரே ஆண்டு அனுபவித்தனர். காலைப்போக்கில், ஓர் இடத்தில் வாழ்ந்த இனத்தவர் மற்ற இடங்களில் வாழ்ந்த இனத்தவரோடு தொடர்புகொண்டு புதியதொரு வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டனர். இதனால் பல்வேறு இனத்தவரிடையே சமுதாயத்தொடர்பு ஏற்பட்ட பின்னர், ஒவ்வொரு இனத்தவரும் மற்றவர்கள் உற்பத்தி செய்த பொருள்களை அறிந்து அவற்றை அடைவதற்கு விரும்பினர். இந்நிலையில் ஒரு பண்டத்தைக் கொடுத்து தமக்குத் தேவையான மற்றப் பண்டங்களை வாங்கும் புதிய பழக்கம் தோன்றியது.

காலப்போக்கில் மக்கள் குறிப்பிட்ட இடங்களில் குடியமர்ந்து பெரிய சமுதாயமாக வளர்ந்து வாழத்தொடங்கிய போது, பண்டங்களுக்குப் பண்டம் பரிவர்த்தனை செய்யும் தேவையும் அவசியமாகின்றது. இத்தேவை வியாபாரம் போல் வளர்ந்து பண்டமாற்று முறையாக மலர்ந்தது. இவ்வாறு தோன்றிய பண்டமாற்று முறையில் பல சிக்கல்கள் எழுந்தன. இச் சிக்கல்களைப் போக்குவதற்காக புதியதொரு முறை கண்டுபிடிக்கப்பட்டது. எல்லா வியாபாரத்திலும் பொருள்களைக் கொடுப்போரும் வாங்குவோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொதுப் பண்டத்தை நிர்ணயித்தனர். இதனால் நாளடைவில் சில பண்டங்களுக்கு மற்றவற்றை விட கிராக்கியும் மதிப்பும் ஏற்பட்டது. அப்பண்டங்களே பரிவர்த்தனை செய்வதற்கேற்ற சாதனங்களாக மாறின. அவற்றைக்கொண்டு பிற பண்டங்களின் மதிப்பு அளவிடப்பட்டது. இவ்வாறாக மதிப்பின் அளவுகோல் என்ற கருத்து உருவாகி, நாணய வரலாற்றுக்கு முதல் படிநிலை தோன்றியது.

நாணயங்களின் தோற்றம் நாகரிக வரலாற்றில் புரட்சிகரமான மாறுதல்களைக் குறித்து நிற்கின்றது. நாணயங்களின் தோற்றத்திற்கு பண்டமாற்று வர்த்தகத்தில் ஏற்பட்ட சிக்கல்களே காரணம் எனக் கூறப்படுகின்றது. இருப்பினும் நாணயங்களின் தோற்றத்திற்கு பண்டமாற்று வர்த்தகத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் மட்டுமன்றி மிகை உற்பத்தியும் வணிகக்கவர்ச்சியும் முக்கிய காரணங்களாக இருந்துள்ளன. நாணயத்தின் தோற்றத்திற்கு முன்னரே இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் இப்பண்டமாற்று முறை பெருங்கற்காலத்துடன் தோன்றியதற்கு பலவகை சான்றுகள் உள்ளன. பண்டமாற்று வர்த்தகத்தில் பசு ஒரு வர்த்தகப் பரிமாற்றுப் பொருளாக பயன்பட்டதற்குச் சான்றுகள்

உள. காலப்போக்கில் பசுவுக்குப் பதிலாக கோழிகள், குன்றுமணிகள், சிப்பிகள், சில வகைக் கற்கள் பயன்பட்டன. ஆனால் இவற்றிலும் பலவகைக் குறைபாடுகள் இருந்தன். இவற்றுக்குப் பதிலாக பொன், வெள்ளி, செம்பு, ஈயம் போன்ற உலோகங்களைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி அவற்றை வர்த்தகப் பரிமாற்றுப் பொருளாக பயன்படுத்தினர். இதனையே வரலாற்றாசிரியர்கள் தென்னாசியாவில் நாணயங்களின் தோற்றத்திற்கான தொடக்க காலமாகக் கொள்கின்றனர். தென்னாசியாவில் நாணயத்தின் தோற்றம் எப்போது ஏற்பட்டது என்பதில் நாணயவியலாளர்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. தெளிவான எடை, வரையறுக்கப்பட்ட வடிவம் என்பவற்றுடன் கூடிய நாணயங்கள் சிந்துவெளி நாகரிக காலத்தில் தோன்றியதாக ஒரு சில அறிஞர்கள் கருதுகின்றனர். சிந்துவெளி நாகரிகத்தில் பயன்பட்ட பல அளவுகளை உடைய முத்திரைகளைக் குறிப்பிடுகின்றனர். இன்னொரு சார்பினர் கிரேக்க நாட்டுடன் ஏற்பட்ட தொடர்பால் அங்கிருந்து நாணயங்களை வடிவமைக்கும் மரபு தென்னாசியாவுக்கு வந்ததாகக் கூறுகின்றனர்.

நாணயங்களில் குறிப்பிட்ட எடையும் வடிவமும் கொண்ட உலோகத்தைக் கொண்டு பண்டங்களை விற்கும், வாங்கும் பழக்கம் ஏற்பட்ட போதிலும் இம்முறையில் கூட சில குறைபாடுகள் இருந்தன. அவ்வுலோகம் கலப்படமற்றதா குறிப்பிட்ட எடை கொண்டதா என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லாததால் அதைப் பெற்றுக்கொண்டவர்கள் தம்மைத்தாமே திருப்திப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்தனர். இதற்கு ஒவ்வொரும் தராசும் உரைகல்லும் வைத்திருந்தனர். எனவே அவ்வுலோகம் இவ்வளவு எடையும் தூய்மையுள்ளது என்பதை உறுதிப்படுத்தி அதற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அவற்றில் குறிப்பிட்ட அடையாளத்தை முத்திரையிடலாம் என எண்ணினர். இதன் மூலம் நமது நாட்டில் மட்டுமன்றி பிற நாடுகளிலும் பழைய முறையிலிருந்த குறைகள் நீக்கப்பட்ட நாணயங்கள் முறையாக தோற்றுவிக்கப்பட்டன.

கிரேக்க, உரோம தொடர்புகள் இந்திய நாணய மரபில் செல்வாக்கை ஏற்படுத்தியிருந்தாலும் அதற்கு முன்னரே நாணயங்களை வெளியிடும் மரபு இந்தியரிடம் தோன்றிவிட்டதாக சில அறிஞர்கள் கூறுகின்றனர். இருப்பினும் சிந்துவெளி நாகரிகத்தில் நாணயப் பயன்பாடு இருந்ததா? இல்லையா? என்பது பற்றி இற்றைவரை உறுதிப்படுத்தப்படவில்லை. அந்நாகரிகத்தில் பயன்பட்ட முத்திரைகளை நாணயமாகக் கொண்டாலும் அவ்வகை நாணய மரபில் பிற்கால இந்திய நாணயமரபு தொடர்ந்ததற்கு இதுவரை சான்றுகள் கிடைக்கவில்லை கிரேக்க உரோம நாணயமரபின் செல்வாக்கு இந்திய நாணய மரபில் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதில் வேறுபட்ட கருத்துக்கள் இல்லை. இத்தாக்கம் வட இந்தியா தொட்டு தெற்கே தமிழ்நாடு வரை வெளியிடப்பட்ட பண்டைய கால நாணயங்களில் செல்வாக்குச் செலுத்தியதை பல அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனால் கிரேக்க உரோம தொடர்புக்கு முன்னரே சுதேச நாணய மரபு இந்தியாவில் தோன்றியதற்குப் பலவகை சான்றுகள் உள்ளன. குறிப்பாக கி.மு 6ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கூறப்படும் அட்டகாலி என்ற பாளி இலக்கியம் வட

இந்தியாவில் பயன்படுத்தப்பட்ட பலவகை நாணயங்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றது. அதேபோல் கௌடிலியரின் அர்த்த சாஸ்திரத்திலும் (கி.மு 4ஆம் நூற்றாண்டு) நாணயங்களின் பயன்பாடு பற்றியும் நாணயங்களை வடிவமைக்கும் முறை பற்றியும் அக்காலத்தில் கள்ள நாணயம் தயாரிப்பவர் பற்றியும் பலவகைச் செய்திகள் காணப்படுகின்றன. இவற்றை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் மகத அரசு தோன்றப் பின்னணியாக இருந்த 16 மகாஜன பதங்களின் அரசு காலத்தில் வெளியிடப்பட்ட பலவகையான முத்திரை நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் உலோக வடிவமைப்பு இவற்றில் இடப்பட்ட முத்திரைகள் அர்த்தசாஸ்திரத்தில் கூறப்படும் நாணயங்களின் தன்மையை அப்படியே ஒத்துள்ளன. இவ்வாதாரங்கள் அனைத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தென்னாசியாவில் கி.மு 6ஆம் நூற்றாண்டில் இருந்தே சுதேச நாணய மரபு ஒன்று தோன்றி வளர்ந்தது என்று கூறலாம்.

இலங்கையை பொறுத்தவரை நாணயங்களின் தோற்றம், வளர்ச்சி இந்திய நாணயங்களின் வரலாற்றோடு இணைந்த ஒன்றாகும். இலங்கையில் ஆரம்பகால நாணயங்கள் (முத்திரை நாணயங்கள்) இந்தியாவிலிருந்தே கொண்டுவரப்பட்டவையாகும். காலப்போக்கில் இலங்கையில் வெளியிடப்பட்ட நாணயங்கள் கூடப் பெரும் அளவுக்கு இந்திய நாணய மரபை அடியொற்றித் தோன்றியவையாகும். இருப்பினும் இலங்கையில் வெளியிடப்ப்ட்ட நாணயங்களில் இலங்கைக்கே தனித்துவமான நாணய மரபு காணப்படுகின்றது.

இந்த வகையில் தென்னிந்தியாவில் பசு, கோழிகள், குன்றுமணி என்பவற்றினூடாக இடம்பெற்ற பண்டமாற்று முறையில் ஏற்பட்ட அளவு, தரம், பெறுமதி போன்ற சிக்கல்களால் முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்ட நாணயமாக விளங்குவது முத்திரை நாணயங்களாகும். முத்திரை நாணயம் என்பது ஒரு உலோகத்தின் மீது பல்வகை உருவங்கள், வடிவங்கள் கொண்ட முத்திரை அச்சுக்களினால் பல்வகைக் குறியீடுகள் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் எதுவுமற்ற நாணயமாகும். தென்னாசியாவில் முதன் முதலில் தோன்றிய முத்திரை பதிக்கப்பட்ட நாணயங்கள் குறிப்பாக வட இந்தியாவில் கி.மு 6ஆம் நூற்றாண்டளவில் தோன்றியதாக வடமொழி, பாளி, இலக்கியங்களும் (அர்த்தசாஸ்திரம், அஷ்டத்தியாயி), பௌத்த, தமிழ் இலக்கியங்களும், ஜாதகக் கதைகளும் வெட்டுக்களும் எடுத்துக் கூறுகின்றன. இந்த வகையில் முத்திரை நாணயங்களின் தோற்றம், வளர்ச்சி, அதன் அமைப்பு, வகைகள், இயல்புகள் என்பவற்றை விரிவாக ஆராய்வதன் மூலம் அதன் சிறப்புக்களை, தனித்தன்மையை அறிந்து கொள்ளமுடியும்.

புராதன கால இலக்கியங்கள், கல்வெட்டுக்களில் முத்திரை நாணயங்களைப் பற்றிய பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவற்றில் இந்நாணயத்திற்கு வழங்கப்பட்ட பெயர்கள் நாணயம் செய்யப்புட்ட முறை, நாணய முத்திரைகளின் வடிவங்கள் என்பன பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பாளி இலக்கிய ஆதாரப்படி முத்திரை நாணயங்கள் புராணஸ் அல்லது புராண நாணயங்கள், கர்ஷாபணம் போன்ற மறுபெயர்களால் வழங்கப்பட்டமையும், இலங்கையில் கேகாலை - மாம்பிற்ற விகாரைக் கல்வெட்டில்

கஹபணம் பற்றிக் கூறப்பட்டிருப்பதும் (கி.மு 3ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) குறிப்பிடத்தக்க சான்றுகளாகும். அத்துடன் ஈழத்தில் கஹபணத்தின் தோற்ற காலம் கி.மு 3ஆம் நூற்றாண்டெனக் கூறப்படுகிறது. இவ்வாறு பிராந்தியம், கல்வெட்டு அடிப்படையில் வெவ்வேறு பெயர்களால் வழங்கப்பட்டு வந்த முத்திரை நாணயங்கள் கி.பி 3ஆம், 4ஆம், 5ஆம் நூற்றாண்டுகள் வரை புழக்கத்திலிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வட இந்தியாவில் முதன் முதலில் தோன்றிய முத்திரை நாணயங்கள் எவ்வாறு அச்சிடப்பட்டன. அதிலுள்ள குறியீடுகள், நாணய வடிவங்கள், நாணய வகைகள், நாணயத்தின் தன்மை போன்ற விடயங்கள் கி.மு 6ஆம் நூற்றாண்டில் கௌடிலியரால் எழுதப்பட்ட அர்த்த சாஸ்திரம் எனும் நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்நூலில் கூறப்பட்ட படி நாணயங்கள் எவ்வாறு அச்சிடப்பட்டன என்பதனை நோக்கும் போது. உலோகத்தை முதலில் மட்கலத்தில் (மூசையில்) உருக்கி பின் அதில் காரப்பொருள் சேர்த்துச் சுத்தம் செய்து பின்னர் அந்த உலோகத்தைப் பட்டைக் கல்லில் வைத்து, வேண்டிய அளவு, வேண்டிய நீளம், தடிப்பு என்பவற்றுக்கமைய சம்மட்டியால் நீண்ட தகடுகளாக அடிக்கப்பட்டன. பின்னர் கத்தரிக்கோலால் சிறுசிறு துண்டுகளாக (½ அங்குலம்) வெட்டி அவற்றின் ஒரு பக்கத்தில் ஒன்றன்பின் ஒன்றாக முத்திரை அச்சுக்களைக் கொண்டு முத்திரைகள் இடப்படும் என அர்த்தாஸ்திரம் கூறுகிறது.

பிற்காலத்தில் (கி.மு 3ஆம் நூற்றாண்டு) இலங்கையில் தோன்றிய முத்திரை நாணயங்களின் செய்முறை பற்றி ஒஸ்மண்ட் பொப்பியாரய்ச்சி என்பவர் பொருளியல் நோக்கு என்னும் சஞ்சிகையில் (இலங்கையின் புராதன நாணயமாக கஹபணவின் தோற்றம்) கூறுகிறார். இலங்கையில் பெரும்பான்மையாக வார்த்து வெள்ளி மூலாம் பூசப்பட்ட முத்திரையிடப்பட்ட நாணயங்கள் உலோக ரசக்கலவை முறைக்கமையச் செய்யப்பட்டதாக கூறுகிறார். இச் செயற்பாட்டை நோக்கும் போது முத்திரையிடப்பட்ட செப்புத் தகடுகளைப் பாதசரத்தில் வெள்ளி கரைக்கப்பட்ட ஒரு கலவையினுள் தோய்த்தெடுக்கும் போது அக்கலவை தகட்டின் மேற்பரப்பில் பற்றிக்கொள்ளும். பின்னர் பாதசரத்தின் கொதிநிலையானது $357^{0}$c இற்கு வெப்பமேற்றும் போது பாதரசம் கலைக்கப்பட மேற்பூச்சாக வெள்ளி தங்கிநிற்கும். இவ்விதம் இலங்கை முத்திரை நாணயம் செய்யப்பட்டதைக் காணலாம்.

மௌரியப் பேரரசின் இறுதிவரை நிலைத்திருந்த இம் முத்திரை நாணயங்களின் வடிவங்கள், அளவு, நிறை, தன்மை என்பவற்றை ஆராயும் போது முதலில் முத்திரைகள் எவ்வாறு முன்னர் முத்திரையிடுவதற்கெனச் செம்புத்தகட்டு நாணயத்தில் பதிக்கப்படன என நோக்கின் முத்திரைகள் பதிக்கப்பட முன்னர் நாணயத்தின் எடை கணிப்பிடப்பட்டதுடன், சரியான எடை (32 குன்றுமணிகளின் நிறை 157 கிறெயன்) இருப்பதகாகத் தகடுகளின் நுனியைக் கத்தரித்தனர். சில சமயங்களில் சரியான எடையுள்ள நாணயங்களைத் தயாரிப்பதற்காக குறிப்பிட்ட எடைக்குரிய உலோகத்தை உருக்கி அதனைத் தரையில் அல்லது சமமான பலகையில் ஊற்றிய பின் அது எவ்வடிவத்தில் வந்தாலும் அதை நாணயம் வடிக்கப் பயன்படுத்தியிருந்தமையைக்

காணலாம். சில வேளைகளில் ஏற்கனவே செய்யப்பட்ட நாணயத்தின் நிறை குறைவாக இருக்கும் பட்சத்தில் உருக்கப்பட்ட உலோகத்திலிருந்து சிறுகுமிழி வடிவங்கள் செய்து அவற்றை அடித்துக் தகடாக்கி முத்திரை பொறியின் உதவியால் ஒரு பக்கம் முத்திரையாகப் பதித்தனர்.

முத்திரை நாணயங்கள் அதன் பெயர்க் காரணத்திற்கேற்ப தனித்தனியாகச் செய்யப்பட்ட முத்திரை அச்சுக்களைக் கொண்டு முத்திரையிடப்பட்டன எனக் கூறப்படுகின்றது. இவ்வகை நாணயங்களை நேர்த்தியகச் செய்வதற்குச் சுடுமண், மரம், உலோகம் ஆகியவற்றினால் செய்யப்பட்ட நாணய அச்சுக்கள் பயன்படுத்தப்பட்டதைக் காணலாம். ஆரம்பகாலத்தில் முத்திரை நாணயங்களின் ஒரு பக்கமே முத்திரைக் குறிகள் பதிக்கப்பட்டிருந்ததைக் காணலாம். முத்திரை நாணயங்கள் செய்யப்பட்ட நாணய அச்சுசாலைகள் இந்தியாவிலும் இலங்கையிலும் இருந்ததைத் தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இந்தியாவில் நாணயங்களில் சின்னங்களைப் பொறித்து வெளியிடுவதற்கெனப் பயன்பட்ட களிமண் வார்ப்பிடங்கள் அலாகாபாத்திலுள்ள மதுரா, ஒரிசா, ஜூசி, சிசுபாலன் - ஆந்திரா கொண்டபுரி ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் தமிழ் நாட்டில் சேரர் தலைநகரில் சுடுமண் நாணய அச்சுக்களும், கரூரில் உலோக நாணய அச்சும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதே போல் இலங்கையிலும் அனுராதபுரம் கெடிகே, அக்குகொட ஆகிய இடங்களிலிருந்து மீட்கப்பட்ட சுடுமண் அச்சுக்களும் நாணய வெளியீட்டை உறுதிப்படுத்துகின்றன.

அடுத்து முத்திரை நாணயங்களில் இடப்பட்ட முத்திரைகளைப் பற்றியும் அவற்றிலுள்ள குறியீடுகள், தன்மை என்பவற்றை நோக்கும் போது ஆரம்பகால முத்திரை நாணயங்களில் ஒரு புறம் மட்டுமே முத்திரைக் குறிகள் இடப்பட்டதைக் காணலாம். ஒரு முத்திரை நாணயத்தின் ஒரு பக்கத்தில் மட்டும் 5 முத்திரைக் குறியீடுகள் இடப்பட்டிருக்கும். குன்றுகள், மரங்கள், பிராணிகள், பறவைகள், ஊர்வன, மனிதன் போன்ற உருவங்களும் பல வகையில் மத அடையாளங்களும் (சுவாஸ்திகா), சதுரம், முக்கோணம், வட்டம் போன்ற வடிவங்களும் அதில் பொறிந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். முத்திரை நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ள முத்திரைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நோக்கத்திற்காகப் பொறிக்கப்பட்டுள்ளதனைக் காணலாம். அதாவது குறிப்பிட்டதொரு நாணயத்தின் வகைக்கேற்ப அதற்கு எனத்தனியான சின்னமும், அல்லது குறிப்பிட்ட பிரதேசத்தில் புழக்கத்திலிருக்கும் நாணய வகைகளுக்குத் தனித்ததொரு சின்னம் எனப் பல்வேறுபட்ட சின்னங்கள் ஒவ்வொன்றும் பல நோக்கங்களின் நிமித்தம் பொறிக்கப்பட்டதனைக் காணலாம்.

இம்முத்திரைக் குறியீடுகளைக் கொண்டு, அந்தந்த நாணயங்களின் இடம், அரசு காலம் போன்றவற்றைத் தனித்தனியாக அறியமுடியும் தொடக்க காலத்தில் வெளியிடப்பட்ட முத்திரை நாணயங்கள் பெரும்பாலும் தடிப்பில் மெல்லியதாகவும், ஒரு பக்கம் மட்டுமே முத்திரையிடப்பட்டனவாகவும் விளங்கின. இதன் மறுபக்கம் வெறுமையாக விடப்பட்டது. பிற்காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள் தடிப்பில் மொத்தமானவையாக

விளங்கின. பொதுவாக நாணயங்கள் அச்சகசாலையில் அச்சிட்டு வெளியிடும் போதே பின்புறம் வெறுமையானதாகக் காணப்படும். அந்நாணயங்கள் புழக்கத்திற்கு வந்த பின் அதன் பாவனையாளர்கள் சிறுசிறு அடையாளங்களை, எதிர்க்குறிகளை இட்டுக்கொண்டனர்.

நாணயத்தின் பின்புறத்தில் ஒரிரு குறியீடுகள் முதல் 10, 12 குறியீடுகள் வரை பொறிக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். இக்குறியீடுகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் தன்மைகளைக் கண்டறியலாம். பின்புறத்தில் ஒரிரு குறியீடுகளையுடைய நாணயங்களை நோக்கும் போது அவை அழிவடையாது தெளிவான முத்திரைகளைக் கொண்டு விளங்கியதுடன் மக்களிடையே அதிகம் புழுங்கியிராத நாணயமாகவும் விளங்கியதைக் காணலாம். இத்தகைய நாணயங்களை (ஒரிரு குறியீடு அல்லது குறியீடே இல்லாதவை) ஒரிரு தடவைகள் மாத்திரம் புழுங்கிய நாணயங்களாக கொள்ளலாம். ஏனெனில் இத்தகைய நாணயங்களை வட்டிக்கடைக்காரர், வங்கியாளர், நாணயத்தைச் சோதித்துப் பார்ப்போர் போன்றோர் அவை தரமான, சரியான நாணயங்கள் என உறுதிப்படுத்துவதற்காகச் செய்திருக்கலாமெனக் கூறப்படுகிறது. இத்தகைய நாணயங்கள் அதிகாரபூர்வமானவையாக இருப்பினும் அதன் தரம், மதிப்பு ஆகியவற்றில் மக்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டதனாலேயே இவை அதிகம் மக்களிடையே புழங்கவில்லை. பின்புறத்தில் அதிக குறியீடுகள் பொறித்த நாணயங்கள் தேய்வடைந்து காணப்பட்டதுடன், பழுதடைந்தும் உள்ளன. முத்திரை நாணயத்தில் அதிகமான குறியீடுகள் காணப்படுமாயின் அவை நீண்டகாலம் புழக்கத்திலிருந்தன எனக்கருதலாம்.

தென்னாசியாவின் ஆரம்பகால முத்திரை நாணயங்கள் வட இந்தியாவில் தோற்றம் பெற்று மௌரியப் பேரரசின் இறுதிவரை நிலைத்திருந்ததோடு படிப்படியாகத் தென்னிந்தியாவுக்கும் பின் ஈழத்திற்கும் பரவியமை குறிப்பிடத்தக்கது. முத்திரை நாணயங்கள் இடத்துக்கிடம் பல பெயர்கள், பல வகைகள், பல உருவ முத்திரை வேறுபாடுகளைக் கொண்டிருந்ததுடன் பொதுவாக பொன், வெள்ளி, செப்பு உலோகங்களால் உருவாக்கப்பட்டிருந்ததனைக் காணலாம்.[12] இந்திய முத்திரை நாணயங்களை பொறுத்தவரையில் பாணினியின் அஷ்டயாயின் நூலின் கார்ஷாபணம், நிஷ்கா, சதமானம், பாதம், விம்சதிக, கானா, எனப் புராதன இந்திய நாணயங்களுள் உருவம் பொறிந்த நாணயங்கள் நிஷ்கா (ரூபா) எனவும் பொன், வெள்ளி, செப்பு, நாணயங்களை கார்ஷா பணம் எனவும் கூறப்படுகின்றன. கார்ஷா பணத்தில் பின்னங்களைக் குறிக்க கர்ஷாபாணா, அர்த்தகார்ஷா, பாண, பாதகர்ஷா பாண போன்ற சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டதைக் காணலாம். வடமொழியில் கார்ஷா பாண எனப்படும். முத்திரை நாணயங்கள் புராண அல்லது புராணாஸ் நாணயங்கள் என அழைக்கப்படுகின்றன. இலங்கையில் கிடைத்த முத்திரை நாணயங்களை இலங்கை பாளி நூல்கள் கஹயன எனவும் கல்வெட்டுக்களில் கஹப எனவும் சிங்கள மொழியில் கஹவனு எனவும் அழைக்கப்பட்டதைக் காணலாம்.[13] இதனை கி.மு3ஆம் நூற்றாண்டு இறுதிப்பகுதிக் கல்வெட்டான மாம்பிற்ற விகாரைச் சாசனம் (கேகாலை), மகாவம்சம் - பாளி நூல் என்பன எடுத்துக் கூறுவதனைக் காணலாம்.

என்பன பற்றி ஆராயும் போது அவற்றை பரமேச்வரி லால்குப்தா அவர்கள் இரண்டு வகையாகப் பிரிப்பதைக் காணலாம்.அவையாவன தலநாணயங்கள், பேரரசவரிசைக்குரிய நாணயங்கள் என்பனவாகும். ஆரம்பத்தில் அச்சுக்குத்தப்பட்ட முத்திரை நாணயங்களை பாரதப்போரின் பின் கி.மு 16ஆம் நூற்றாண்டிலிருந்து ஜனபத என்ற சிற்றரசுகளும் கி.மு 11ஆம் நூற்றாண்டிலிருந்த பேரரசான மகாஜனபதங்களும் முதலில் வெளியிட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர் நாளடைவில் ஆள்புலத்துக்காகத் தம்மிடையே போரிட்ட இவ்வரசுகள் படிப்படியாகக் குறைவடைந்து சென்றன. பின்னர் இவ்வரசுகள் அனைத்தும் கி.மு 5 இல் தோன்றி ஆரம்பத்தில் ராஜகிரியையும் பின்னர் கி.மு 4இல் பாடலிபுத்திரத்தையும் தலைநகராகக் கொண்டு விரிவடைந்த மகதப் பேரரசில் அடக்கப்பட்டுவிட்டன.

வடஇந்தியாவில் தோன்றி வளர்ந்த முத்திரை நாணயங்கள் அங்கிருந்து வர்த்தக தொடர்பால் தென்னிந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்குப் பரவியதாகவும், அப்பிரதேசங்களில் வடஇந்திய முத்திரை நாணயங்கள் புழக்கத்துக்கு வந்ததாகவும் கூறப்படுகின்றது. தென்னிந்தியாவில் ஏற்பட்ட முத்திரை நாணயங்களின் புழக்கம் பற்றி ஆராயும் போது வட இந்திய முத்திரை நாணயங்களிலிருந்து தான் தென்னிந்திய முத்திரை நாணயங்கள் தோன்றின என்பது சந்தேகத்துக்குரிய விடயமே. குறிப்பாக தமிழகத்தில் நாணயமரபு தோன்றுவதற்கு வடஇந்திய வணிகத்தொடர்பு ஒரு காரணமெனக் கொண்டாலும், ஏறத்தாழ மௌரிய வம்சத்துக்குச் சமமான காலத்தில் வடஇந்திய முத்திரை நாணயங்களையொத்த நாணய மரபைப் போல் தமிழகத்தில் தோன்றிவிட்டதெனத் தொல்லியற் கண்டுபிடிப்புக்கள் எடுத்துக்காட்டுகின்றன. அவை இரு வகையில் வடஇந்திய முத்திரை நாணயங்களில் இருந்து வேறுபடுவதைக் காணலாம். அவையாவன வட இந்திய முத்திரை நாணயங்களில் வரும் 16 கதிர்ச்சூரியனுக்குப் பதிலாகத் தமிழக முத்திரை நாணயங்களில் 12 கதிர்ச்சூரியனும் தமிழகத் தனித்துவ அம்சமாக முத்திரை நாணயங்களில்அவற்றை வெளியிட்ட அரசவம்சத்தின் குலச்சின்னமும் பொறிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சேரருக்கு அம்பும் வில்லும், பாண்டியனுக்கு மீனும், சோழருக்குப் புலியும், மலையமான் போன்ற குறுநிலமன்னர்களுக்கு ஆற்றுச் சின்னமும், சமயச்சின்னங்களும், மங்கலச் சின்னங்களும் (திரிசூலம், நந்திபாதம், வச்சிராயுதம், இந்திரதுவஜம், ஸ்ரீவத்சம்) சங்ககால ஆரம்பகால முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ளன. கி.மு 3இல் வெளியிடப்பட்ட இந் நாணயங்களுக்குப் பின் முத்திரைகளுடன் எழுத்துப் பொறிக்கும் மரபு ஏற்பட்டது. தமிழகத்தில் கிடைத்த முத்திரைகளுடன் எழுத்துப் பொறிக்கும் மரபு ஏற்பட்டது. தமிழகத்தில் கிடைத்த முத்திரை நாணயங்கள் தமிழகத்திலேயே தோன்றியதற்கான சான்றுகளாக காஞ்சிபுரம், மாமல்லபுரம் போன்ற இடங்களில் கிடைத்த சுடுமண் அச்சுக்கள், உலோக அச்சுக்கள் தஞ்சையில் கிடைத்த முத்திரைக் காசுகள் - சங்ககால சேர, சோழ, பாண்டிய, மலையமான், அறியமான், காசுகள் (கரூர், அமராவதி, திருக்கோயில், வைகை ஆறு) போன்றவற்றைக் கூறலாம்.

தமிழகத்தைப் போல இலங்கையிலும் முத்திரை நாணயங்கள் வெளியிடப்பட்டதாக கொட்றிங்ரன் முதல் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வாளர்கள் வரை குறிப்பிட்டுள்ளனர். நாணயங்களில் ஆரம்பகால நாணயங்கள் இந்தியாவுக்குரியதாகவும் பிற்கால நாணயங்கள் இலங்கைக்கு உரியதாகவும் விளங்கின. இலங்கை முத்திரை நாணயங்களின் புழக்கம் கி.மு 5ஆம், 4ஆம் நூற்றாண்டுகளுக்குப் பின் புழக்கத்தில் இருந்ததாகக் கூறப்படுகின்றது. வட இந்தியாவை ஒத்த நாணய மரபிலேயே இலங்கையிலும் முத்திரை நாணயங்கள் வெளியிடப்பட்டன. குறிப்பாக ஏராள், உஜ்ஜையினி, சாதவாகன, யௌதேய, மகாசற்றப நாணயங்களைப் பார்த்து நேரே பின்பற்றப்பட்டன. அல்லது பிரதி செய்யப்பட்டன. இலங்கையைப் பொறுத்தவரை குறியில்லாத நாணயங்களை இலங்கைக்குரியதாக கொட்றிங்ரன் கருதுகின்றார். இலங்கையில் நாணயங்கள் வெளியிடப்பட்டதற்கான சான்றுகளாக முத்திரையிடும் சுடுமண் அச்சுக்களை அனுராதபுரம் - கெடிகே தென்னிலங்கையில் அக்குறுகொட ஆகிய இடங்களில் கிடைத்துள்ளமையும், பல முத்திரை நாணயங்களும் இங்கு கிடைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் வட இலங்கையில் கந்தரோடை, பூநகரி, வல்லிபுரம், இரணைமடு, மாதோட்டம் ஆகிய இடங்களில் கிடைத்த நாணயங்களும் கி.மு 3ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி கேகாலை - மாம்பிற்ற விகாரைச் சாசனமும், மகாவம்சத்தில் உள்ள கஹபணம் பற்றிய ஆதாரமும் இலங்கையில் பல்வகை முத்திரை நாணயங்கள் புழக்கத்திலிருந்துந்தமைக்குச் சிறந்த சான்றாகும்.

இலங்கையில் வெளியிடப்பட்ட முத்திரை நாணயங்கள் அளவிற்சிறிய, தடித்த நாணயங்களாகவும் வெள்ளி, செப்பு நாணயங்களாகவும் விளங்கின. கஹபண, காகஹபண, பத, மசக, கெறிக எனப்பல்வேறு பெயர்களால் இவை அழைக்கப்பட்டன. இலங்கையில் வெளியிடப்பட்ட முத்திரை நாணயங்களுள் குறிப்பிடத்தக்கன யானை - சுவஸ்திகா, குதிரை - சுவஸ்திகா, சிங்கம் - சுவஸ்திகா மரம் - சுவஸ்திகா என்பனவும், சிறப்பாக அமர்ந்த நிலையில் அல்லது நிற்கும் நிலையிலுள்ள லட்சுமி உருவங்கொண்ட அலங்காரத்தகடுகளும், பிடரிமயிரற்ற சிங்க உரு நிற்கும் நிலையிலுள்ள லட்சுமி உருவங்கொண்ட அலங்காரத் தகடுகளும், பிடரிமயிரற்ற சிங்க உரு நிற்கும் அல்லது அமர்ந்திருக்கும் சிங்க உரு, மீன், ஆமை, சக்கரம், விலங்குருவங்கள், நாகமுத்திரைகள், 3 கடுள்ள மலைமேல் வேலியிட்ட மரம், மத்தளம், எருது எனப் பலவகைப்பட்ட முத்திரைச் சின்னங்களும், சங்ககால முத்திரை நாணயங்களும் இலங்கையில் அதிகம் கிடைத்தவையாகும். இவ்வாறு இலங்கையில் பல இடங்களிலும் பல முத்திரை நாணயங்களை கொட்றிங்ரன் அகழ்ந்து வெளிப்படுத்தியதுடன் அதன் முக்கியத்துவத்தையும் கூறினார் முத்திரை நாணயமானது தென்னாசியாவில் முதல் தோன்றிய நாணயமாக விளங்குகின்றது. இந்த வகையில் இலங்கையிலும் முதல் தோன்றிய நாணயமாக முத்திரை நாணயங்கள் விளங்குவது சிறப்பம்சமா கருதப்படத்தக்கது.

# நவாலியூர் தந்த நாடகச் செம்மல் கலையரசு க. சொர்ணலிங்கம்

வீரசிங்கம் பிரதீபன்
கலாசார உத்தியோகத்தர்.

நாவலியூர் என்றதும் நினைவுக்கு வருபவர் தங்கத் தாத்தா நவாலியூர் சோம சுந்தரப் புலவராவார். உலக அரங்கிலே நவாலிக் கிராமத்தை பிரபலமடையச் செய்தவர் அவர். புராதனமான பெரும் சிறப்புக் கொண்ட கிராமம் நவாலிக் கிராமம் என்றால் மிகையல்ல இந்துக்களும், கிறீஸ்தவர்களும் சகோதரத்துவமாக வாழும் இக் கிராமமானது ஆதி நாகதமிழர் குடியிருப்புக்களில் ஒன்றென்பது யாரும் அறியாத விடயம். நாகர் வாழிடமே நவாலி ஆகும். நவாலியும் அதன் எல்லையில் உள்ள சங்கரத்தைக் கிராமமும் இவ்வகையில் சிறப்புப் பெற்ற கிராமங்கள் ஆகும்.

இவ்விடங்களில் அமைந்துள்ள புராதன கருங்கல் நடு தூண்களும் (ஆவுரஞ்சுகல்), கருங்கல் எச்சங்களும் இதனை ஆதாரப்படுத்துவதாக அண்மையில் ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளார். நவாலிப்பகுதியில் அமைந்துள்ள களைஓடை கண்ணகை அம்மன் ஆலயமும் மிகத் தொன்மை கொண்டது என்பது யாவரும் அறிந்ததே.

நவாலிக் கிராமத்தை உலக அரங்கிலே சிறப்படையச் செய்தோரில் சோமசுந்தரப் புலவரை அடுத்து சிறப்பிக்கப்படுபவர் கலையரசு.க சொர்ணலிங்கம் அவர்களாவர். இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் சிறந்து விளங்கிய கிராமம் நவாலிக் கிராமமாகும். இக்கிராம மக்கள் யாழ்ப்பாண கலை வரலாற்றுக்கு அருந்தொண்டு ஆற்றியோராவர். அவ்வகையில் நாடக வரலாற்றில் யாழ்ப்பாணத்திற்கு மட்டுமன்றி முழு இலங்கைக்கும் தொண்டாற்றியவரே தமிழ் நாடக உலக நன்கு அறிந்த நாடகமேதையான கலையரசு க.சொர்ணலிங்கம் அவர்கள். அவரைப் பெற்றெடுத்த மண் நவாலி என்பதில் தமிழராகிய நாம் எல்லாம் பெருமைப்பட வேண்டும். "ஈழத்தின் நவீன நாடகத்தின் தந்தை" என்ற சிறப்புப்பெயர் பெற்ற நாடக மேதையை சீராட்டி வளர்ந்த மண் நவாலி மண்.

முத்தமிழில் ஒன்றான நாடகம் பற்றிய குறிப்புக்கள் சங்ககாலம் முதல் தமிழில் பயின்று வருகின்றன.

"நாடக வழக்கிலும், உலகியல் வழக்கிலும்
பாடல் சான்ற புலநெறி வழக்கம்"

எனத் தமிழில் கிடைத்த முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் கூறுகின்றது. "நாடகவழக்கு" என்பதற்கு உரை கூறிய இளம்பூரணர்

"சுவைபட வந்தனவெல்லாம் ஓரிடத்திலே வந்தனவாகத் தொகுத்துக் கூறல்" என்று விளக்கம் தருகின்றார். இங்கு அவர் சுவை எனக்கொண்டது மனித உணர்வையே ஆகும். எனவே சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்தே வரத்தெகுப்பது நாடகமாகும். நாடகம் மனிதர்களை, உலகினை, மனித இன்னல்களை தெளிய வைப்பது. மனித வாழ்வு பற்றிய உண்மைகளை அனுபவபூர்வமாகவும், உணர்வு பூர்வமாகவும் விளக்கும் ஓர் அருங்கலை ஆகும்.

இவ்வகையில் ஈழத்தில் நவீன நாடகக் கலையை முகிழ்க்கச் செய்து, பின்வந்த நாடக வரலாற்றுக்கு காத்திரமான அடியீட்டை தந்தவர் கலையரசு.க.சொர்ணலிங்கம் அவர்களே ஆவர். மனித வாழ்வின் உண்மையை, அனுபவங்களை தொல்காப்பியர் கூறியது போல மேடையிலே ஒன்றுபடுத்தி பலரது இன்னல்களையும் தெளிய வைத்த மாமேதை கலையரசு க.சொர்ணலிங்கம் அவர்களேயாவார்.

ஈழமணித் திருநாட்டின் வடபுலத்தே நவாலியம் பதியில் 1889ம் ஆண்டு லோட்டன் கனகரத்தினம், செல்லம்மா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர் சொர்ணலிங்கம். இயல்பாகவே கலை நாட்டம் மிக்க குடும்பத்தில் பிறந்ததால் நாடகத்தினை நினைவாகவும், கனவாகவும், இன்பமாகவும் அக்கலையே தெய்வமாகவும் நேசித்த பெருமகன் இவராவார்.

தனது 12 ஆவது வயதிலேயே நாடக உலகில் காலடி எடுத்து வைத்தவர். அன்று தொட்டு தான் இறைவனடி சேரும் காலம் வரை நாடகத்தையே தன் மூச்சாக சுவாசித்தவர். நாடகம் நடிப்பது இழிவான செயல் என்றும், அது வெறுத்து ஒதுக்கப்பட்ட வேண்டிய கலை என்றும் கருதப்பட்ட காலத்திலே நாடகக் கலையின் பெருமைகளை உணர்த்தி அக்கலை உயர்ந்தோர் மேற்றும் பயன் விளைவிப்பது எனும் தார்மீக உண்மையை நிலை நாட்டியவர். 1913ல் லங்கா சுபோத விலாச சபை என்ற ஒரு நாடக சபையை நிறுவி அச் சபையில் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வழக்கறிஞர், ஆசிரியர்கள், உயர் அரச உத்தியோகத்தர்கள் ஆகியோரை அங்கத்தவராகக் கொண்டு, நாடகத்துறையில் சமூக விழிப்புணர்வையும், எழுச்சியையும் உண்டு பண்ணியவர்.

1911ம் வருடம் யூன்மாதம் 10ம் திகதி கொழும்பிலே நாடக நிகழ்வுகளை நிகழ்த்த வந்த பம்மல் சம்பந்த முதலியரின் நாடகங்களால் ஈர்க்கப்பட்ட சொர்ணலிங்கம் அவர்கள் ஈழத்து நாடக வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்தவர். அதுபற்றி "அன்றுதான் நாடகம் என்றால் எப்படி அமைக்கப்படல் வேண்டும், நடிப்பென்றால் எவ்வாறு இருக்க வேண்டும், பாட்டுப்பாடுவதன் நோக்கம் என்ன? என்பன போன்றவெல்லாம் புரிந்தன..." என்று கூறுகின்றார்.

பம்மல் சம்பந்த முதலியாரின் "லீலாவதி சுலோசனா" எனும் நாடகமே கலையரசை சிறந்த நடிகனாக, நாடகத் தயாரிப்பாளனாக, சிறந்த பாடகனாக, நெறியாளனாக வழிவகுத்தது. சம்பந்த முதலியார் பற்றி அவர் கூறுகையில்

"என் வாழ்வில் ஆயிரக் கணக்கான நடிகர்களைப் பார்த்திருக்கின்றேன். ஆனால் அவரது குரலில் ஒலிக்கும் இனிமையைப் போல் வேறு எவரிடத்திலும் கேட்டதில்லை அவர் பாடுவதில்லை ஆனால் அவரின் பேச்சு எந்தச் சிறந்த பாட்டுக்காரரை விடவும் இனிமையாய் இருக்கும்....."

என்று அவர் பற்றிக் கூறுவதனூடாக ஒரு நடிகனுக்குப் பணிவு எவ்வளவு அவசியம் என்பதனை வலியுறுத்துகின்றார்.

"நடிகன் கேட்டுப் படிக்க வேண்டும், தேடிப்படிக்க வேண்டும், பார்த்துப்படிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கக் கூடாது : தனது பாரத்திரத்தைப் படைத்துக்காட்ட வேண்டும் என்ற எண்ணமே இருக்க வேண்டும்"

என்று நடிக்க விரும்புவோருக்கெல்லாம் எப்பொழுதும் அறிவுரை கூறுவார். இந் நோக்கங்கள் தான் சொர்ணலிங்கத்தைக் "கலையரசு" ஆக்கியது. அவரின் பின் இன்று வரை இன்னொரு கலையரசை எமது நாடக உலக இதுவரை காணவில்லை.

நாடக உலகில் பல்வேறு கதாபாத்திரங்களாகவும் தோன்றியவர் கலையரசு. சிறந்த நெறியாள்கையுடன் நாடகங்களை வாழ்க்கைச் சித்திரங்களாக உலவ விட்டவர் எனும் பெருமை கலையரசையே சாரும். 500க்கு மேற்பட்ட நாடகங்களை நெறியாள்கை செய்து, நடித்துப் பெரும் புகழ் பெற்றவர். இவரது நடிப்பிலே பிரபலம் பெற்ற நாடகங்களாக

1. அரிச்சந்திர மயான காண்டம் (1901)
2. சிம்ஹள நாதன் (1915)
3. வேதாள உலகம் (1916)
4. சாரங்கதாரா (1916)
5. பாதுகை பட்டாபிஷேகம் (1917)
6. மனோகரா (1918)
7. சகுந்தலை (1919)
8. லீலாவதி - சுலோசனா (1922)
9. காதலர் கண்கள் (1931)
10. வாணிபுர வணிகன் (1939)
11. உத்தம பத்தினி (1941)
12. சந்திரமுஹாரி (1941)
13. இரத்தினாவளி (1956)
14. தேரோட்டி மகன் (1959)

15. பக்தமீரா (1963)
16. அவளின் வேதனை (1964)
போன்ற நாடகங்களைக் குறிப்பிடலாம்.

கூத்தியல் முறைமையில் மூழ்கியிருந்த தமிழ் நாடக வரலாற்றிலே புதுமையைப் புகுத்தி இயற்பண்பு யதார்த்த பாணி நாடக முறையைப் பின்பற்றி, காட்சி அமைப்புக்களை இயல்பானதாக்கி, வேடஉடை ஒப்பனைகளில் உண்மைத்தன்மையை வெளிப்படுத்தி படச்சட்ட மேடை அமைப்பை அறிமுகம் செய்தவர் இவர். இவரது நடிப்பு முறைமை "முறைமைக் கோட்பாட்டின் அடிப்படையைப் பின்பற்றியது. நடிகன் பாத்திரமாகவே மேடையில் வாழவேண்டும் எனும் கொள்கையை வலுப்படுத்தியவர்.

நாடகத் தயாரிப்புப் பற்றி இவரது அனுபவங்கள் பல்வகையின. நெறியாள்கை, கதை அமைப்பு. மேடை அலங்காரம், ஒலி, ஒளி அமைப்பு ஆகிய பல்வேறு துறைகளிலும் மிக நுட்பமாக செயற்பட்டவர். சுயநலம், பொறாமை, பாரபட்சமற்று தன் கலைச் சேவையைச் செய்தவர். நாடகம் என்பது சிறுபிள்ளை விளையாட்டல்ல அதற்குப் பலகால முயற்சிகள் தேவை என்பதை தன் நண்பர்களுக்கு எப்போதுமே கூறி, பல நாட் பயிற்சிகளை வழங்கி நாடக மாந்தரை தயார் செய்வதனாலேயே அவரது நாடகங்கள் எல்லாம் வெற்றி நாடகங்களாகத் திகழ்ந்தன. பாத்திரங்கள் தாமே பேசி நடிக்க வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பானவர். எந்தப் பின்னணிக் குரலையும் விரும்பாதவர்.

1948ம் ஆண்டில் இலங்கையின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் எல்லாள மகாராஜனாக நடித்தமையையிட்டு இவரின் நடிப்பால் கவரப்பட்ட சிங்களப் பாடகரான தேவ சூரிய சேன அவர்கள்

"In 1948 all the leading Actors, dancers and Artists of Ceylon combined to stage that classic of co - operative achievement of "Pageant of Lanka" with 800 odd performers for our in dependence celebration fourteen celebrations. fourteen episodes of Lanka's history were staged in dramatic and dance forms. Chornalingam was chosen to produce the "Elala episode" Taking the title role. his production was noteworthy, with brilliant costumes and effective staging" என்று அவர் பாத்திரப் பொருத்தத்தினைப் புகழ்கின்றார்.

நாடகக் கலை ஆசான் சொர்ணலிங்கம் பற்றிப் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் "நாடகப் பேராசான் சொர்ணலிங்கம் அவர்கள் நாடகக் கலையின் அரசர், நாடகத்தின் சின்னம், தமிழ்ப்பண்பாட்டின் கண்ணாடி, பொது மக்களின் பல்கலைக்கழகம், மக்கள் உணர்வைத் தட்டியெழுப்பி அன்பையும், அறிவையும் வளர்த்து மங்காப் புகழ் படைத்த கலைஞன் தம்மை நாடக பைத்தியக்காரன் என்றும், நாடகமே எப்பொழுதும் தனது இலட்சியம் என்றும் பெருமைப்படுபவர்" எனக் கூறுவதன் வாயிலாக கலையரசின் மானசீகரமான நாடகப் பணிகளினால் நாடக உலகு பெற்ற நன்மைகள் விளங்குமன்றோ.

தனது நாடக வாழ்க்கையில் "கலையரசு" "நாடகக் கலாமணி" என்ற பட்டங்களைப் பெற்றவர் இவர். 1953ம் ஆண்டு கொழும்பு சைவ மங்கையர் கழக மண்டபத்திலே நாடக அபிமானிகளின் அருமுயற்சியால் "கலையரசு" பட்டம் பெற்றார். அதே ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் "நாடக கலாமணி" எனும் பட்டமும் பெற்றார். தனது கலை வாழ்வின் அனுபவங்களை எல்லாம் நூலாகத் தொகுத்து "ஈழத்தில் நாடகமும் நானும்" எனும் நூலினை 1968ம் வருடம் அன்னார் வெளியிட்டார். இந்நூல் ஒரு நாடக கலைஞனின் சிறந்த சுயசரிதை நூலாகவும், ஆரம்பகால இலங்கைத் தமிழ் நாடக வரலாற்றை அறிய உதவும் நூலாகவும் இன்று வரை நின்று கலையரசு சொர்ணலிங்கம் அவர்களை எம்மத்தியில் வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது.

**சோ. இளமுருகனார்**

இவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மூத்த புதல்வர். சிறந்த தமிழ் அறிஞராக விளங்கியவர். தமிழ் இலக்கண, இலக்கியங்களில் நுண்மான நுழைபுலம் மிக்கவர். தமிழ் மரபு பேணுவதிலே கண்ணுங் கருத்துமாக விளங்கியவர். செந்தமிழ்ச் செல்வம், ஈழத்துச் சிதம்பர புராணம். உசன்பதித் திருமுருகன் கப்பற்பாட்டு, திருமுருகாற்றுப்படைக்கு விளக்கவுரை முதலான பல நூல்களை எழுதியவர். அவரது ஆளுமைக்கு எடுத்துக்காட்டாக இரண்டு பாடல்கள் செந்தமிழ் செல்வம் என்னும் நூலிலிருந்து தரப்படுகின்றன.

பொன்னை யுரைத்தாற் குறையுங்
குபேரன் பொருனினையுங்
கன்னமிட் டேகவர்ந் தாலது
குன்றிக் கவினழியம் ;
வன்னத் தமிழை யுரைத்தாற்
பொருளின் வளம் பெருகும்
கன்னமிட்ட டாற்குறை யாமற்
சுவைகள் கலித்திடுமே

தன்மொழி தமிழ னுக்குத் தன்னுயிர் ;
சமய மன்னன்
மன்னுயி ரூடே நிற்கும் மறுவில
வுணர்வு ; மாற்றில்
பொன்னன விரண்டும் போனற் புவிமிசைப்
பிணமாம் ; நாங்கள்
துன்னிய பிணமா மென்னிற் சுதந்திர
மெற்றுக் கையா.

# நவாலி வடக்கு தோற்றாமரத்தடி ஸ்ரீஞான வைரவர் கோயில்

சிவக்கொழுந்து இராஜேஸ்வரன்
பரம்பரை அறங்காவலர்

கோயில் இல்லா ஊரில் குடிஇருக்க வேண்டாம் என்ற மூதுரைக்கு ஏற்ப ஞானவைரவர் கோவில் அழகு அம்சங்களும் ஆகம மரபும் குறைவுபடாமல் மிகப் பெரிதளவில் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாலயம் ஆரம்பத்தில் திரு.இராமநாதன் வைரவமுத்து என்பவரால் கட்டப்பட்டது. இவர் நவாலியூரில் சித்திரைக் கஞ்சிமடத்தினை கட்டிய பெருமைக்குரிய திரு. இராமநாதன் கதிர்காமர் அவர்களின் மூத்த சகோதரர் ஆவார். இவரே நாவலியூர் நாச்சிமார் கோவில் மண்டபத்தையும் அட்டகிரி கந்தசாமி கோவில் மண்டபத்தையும் ஊர் நடுவே ஒரு கேணியையும் நவாலியூர் களையோடை அம்மன் கோயில் மண்டபத்தையும் சிதம்பரத்தில் ஓர் மண்டபத்தையும் கட்டுவித்தவராவார். அன்னாரின் சைவத்தொண்டுகள் இன்னும் பலவுள.

தோற்றமரத்தடி ஸ்ரீஞான வைரவர் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டும் நோக்குடன் வெட்டிய அத்திவாரக் குழியில் ஓர் மறைஞானியின் சமாதி இருந்தமை ஊர் அறிந்த உண்மையாகும். அச்சமாதியைக் கண்ணுற்று மெய்சிலிர்த்து கண்ணீர் பெருக மறைஞான வள்ளலார் அவ்விடத்திலேயே ஆலயங்கட்டி காவல் தெய்வமான ஞானவைரவரையும் நிலைபெற வைத்தார். அவ்வாலயம் தெய்வத்திருவருளோடு என்றும் வியக்கும் வண்ணம் தோற்றாமரமொன்றும் தான்தோன்றியதாக வளர்ந்தேரங்கிற்று. அதனால் ஆலயத்தின் பெயரும் காலப்போக்கில் தோற்றா மரத்தடி ஸ்ரீ ஞானவைரவர் என வழங்கப்படலாயிற்று இங்கு ஒவ்வொரு ஆனி மாதமும் இரண்டாவது வெள்ளிக் கிழமைகளில் (தமிழுக்கு) பொங்கல் நடைபெற்று வருகிறது. சித்திரைவருடப் பிறப்பு, சித்திரைக்கஞ்சி, வைகாசி விசாகம், நவராத்திரி, தீபாவளி, கார்த்திகைத்தீபம், திருவெம்பாவை, தைப்பொங்கல், மாசிமகம் முதலியன இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெறும் சித்திரைக்கஞ்சி, விழா சிறப்புடையதாகும். நவாலியில் பாரம்பரியமாகப் பலநூறு ஆண்டுகளாகக் கொண்டாடப்படும் இவ் விழா இவ்வாலயத்தில் இன்று சிறப்புடன் பின்பற்றப்படுவது சுட்டிக்காட்டப்பட வேண்டியதொருவிடயமாகும். இறைவனின் திருவருவளால் இவ்வாலயம் இன்று மிகச்சிறப்புற அமைக்கப்பட்டு ஆலயப் பூசைகளும் ஒழுங்காக நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

# நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலயம்

கந்தையா சிவஞானம்
அறங்காவலர்

யாழ் நகரில் இருந்து மேற்குப் பக்கமாக அமைந்துள்ள நவாலி கிராமத்தில், நவாலி சங்கரத்தை வீதியில் மிக அமைதியான சூழலில், அமைந்துள்ளது நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலயம்.

கண்ணகி மதுரையை எரித்ததன் பின்னர் கடல் வழியாகக் களையோடு வந்து அமர்ந்த இடமென்பதால் இவ் ஆலயம் "களையோடை கண்ணகை அம்மன் ஆலயம்" எனப் பெயர் பெற்றது. ஈழத்து மக்களிடையே தென்றுதொட்டு வந்த பத்தினித் தெய்வ வழிபாட்டுத் ஸ்தலங்களில் இதுவுமொன்றாகும்.

200 ஆண்டுகளுக்கு மேல் தலைமுறை, தலைமுறையாக ஒரே சந்ததியினரின் வழித் தோன்றல்களால் இவ் ஆலயம் நிர்வகிகப்பட்டும், ஆதனங்கள் பராமரிக்கப்பட்டும், பூசைகள் மேற்கொள்ளப்பட்டும் வந்துள்ளது. அம்பாளின் விருப்பப்படியே மந்திரமில்லாத பூசைகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விநாயகர் கந்தரின் வழித் தோன்றல்களாலேயே தொடர்ந்து தற்போதும் ஆலயம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. தற்போதைய ஆலய அறங்காவலர்களாகிய கந்தையா பரமானந்தம் கந்தையா நாகேந்திரம், கந்தையா சிவஞனம், திருஞானசம்பந்தர் மோகன், திருஞானசம்பந்தர் அகிலன் ஆகியோர் ஏழாவது வழிச் சந்ததி அறங்காவலர்களாக தற்போது ஆலயத்தை நிர்வகித்து வருகிறார்கள். அறங்காவலர்களில் ஒருவரான கந்தையா நாகேந்திரம் பூசைகள் மேற்கொண்டு வருகிறார். தலைமுறை, தலைமுறையாக ஒரே சந்ததியைச் சேர்ந்தவர்களால் நிர்வகிக்கப்படும் தனியார் ஆலயம் இதுவாகும்.

இவ் ஆலயத்தின் சிறப்பம்சம் அம்பாளால் உண்டாக்கப்பட்ட சுனையும், அம்பாள் வந்தமர்ந்த இடமாகிய "பத்தனாச்சிப்பிட்டியுமாகும்" ஆயிரம் கண்ணுடைய கல்லைத் தற்போதும் பத்தானச்சிப்பிட்டியில் காணக்கூடியதாக உள்ளது. மிகவும் இரம்மியமான சூழலில், சிலுசிலுலென்று காற்றும் பச்சைப் பசேலென்ற வயலும் மனதைக் கொள்ளை கொள்ளுமாறு பத்தனாச்சிப்பிட்டி அமைந்துள்ளது. பத்தனாச்சிப்பிட்டிக்கு அருகில் அம்பாளுக்கு ஆலயம் அமைக்கப்பட்டு அபிஷேகம் பூசையென்பன நடைபெற்று வருகின்றன.

அம்பாள் வயோதிப மாதாக அடியார் ஒருவருக்குக் காட்சி அளித்து, தாகத்துக்கு நீர் கேட்டா தாயும், கஞ்சித் தெளிவு எடுத்து வருவதாகக் கூறிச் சென்றவர் திரும்ப வந்தபொழுது அம் மாதுவைக் காணவில்லை. ஆனால் ஓரிடத்தில் காவோலை இருப்பனதக் கண்டு அதனைத் தூக்கிப் பார்த்த பொழுது அவ்விடத்தில் ஓர் கிணறு

இருப்பதைக் கண்டார். இக் கிணற்றை அவதானித்தால் அடியில் இருந்து மேல்மட்டம் வரை கல்லினால் குடையப்பட்டுள்ளது. மேல் மட்டம் மட்டுமே சீமெந்தினால் கட்டப்பட்டுள்ளது. பின்னர் அடியாரின் கனவில் தோன்றி நித்தம் ஆயிரம் பிழை பொறுப்பேன், என்னை வைத்து ஆதரி" எனக்கூறியதாக அறியப்படுகிறது.

மாடு மேய்த்த சிறுவர்களுக்கு ஆயிரம் கண்ணுடையளாக அம்பாள் காட்சி கொடுத்ததாகவும் அறியப்படுகிறது.

ஏனைய ஆலயங்களை விட இவ் ஆலயம் வித்தியாசமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. விநாயகர் முருகன், வைரவர் ஆகியோருக்கு வெவ்வேறான கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் நாகலிங்கேஸ்வரர் ஆலயமும் ஆலய வளாகத்தில் உள்ளது.

செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் மூன்று நேரப் பூசையும், ஏனைய தினங்களில் இரண்டு நேரப் பூசையும் கிரமமாக நடைபெற்று வருகின்றன. விசேட தினங்களாகிய தைப்பூசம், பங்குனித் திங்கள், சித்திரா பறுவம், வைகாசி விசாகம், ஆடிப்பூரம், நவராத்திரி, திருவெம்பாவை ஆகிய தினங்களில் அம்பாளுக்கு விசேட அபிசேகம், பூசை என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அம்பாள் வருடத்தில் நான்கு முறை வெளிவீதி உலா வந்து அடியார்க்கு காட்சி கொடுப்பது வழக்கம். வைகாசி விசாகம், ஆடிப்பூரம், நவராத்திரி, திருவெம்பாவை ஆகிய தினங்களிலேயே வீதி உலா இடம்பெறும். அம்பாளுக்கு அடியார்கள் தங்கள் நேர்த்தியை நிறைவேற்றுவதற்காகப் பொங்கலெடுப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

அடியார்கள் அம்பாள் மேல் மிகுந்த பக்தியும், நம்பிக்கையும் கொண்டுள்ளார்கள். நவாலிக் கிராமத்தை விட கட்டுடை, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள பக்தர்களும், புலம்பெயர் அடியார்களும் அம்பாள் மேல் தீராத பக்தி கொண்டுள்ளார்கள்.

# வேண்டாம் போதை என நடப்போம் நல்ல பாதையில்..........

தாக்சாயினி செல்வகுமார்
கலாசார உத்தியோகத்தர்

அரசானது போதையற்ற நாடாக இலங்கையை மாற்றுவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. "போதை நல் வாழ்வின் பாதையை மாற்றிடும்" என்பதற்கிணங்க இன்று தினசரி பேசப்படும் பொருளாக மட்டுமன்றி உலகளவில் உருவெடுத்து நிற்கும் பிரச்சினையாகவும் போதைப்பொருள் மாறியுள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களாக போரின் ஆக்கிரமிப்பினால் சீர்குலைந்து போயிருந்த யாழ்ப்பாணம் அதேபோன்று இன்னொரு பயங்கரமான ஆபத்தை எதிர்நோக்கி வருகின்றது என்பதை யாராலும் மறுக்க முடியாது. இப்போதைப்பொருள் பாவனையானது ஆரம்பத்தில் போதை ஏற்றிக்கொள்வதற்காகவும், பொழுதுபோக்கிற்காகவும், விளையாட்டுக்களில் ஈடுபடும் போதும், விரக்தி, அறியாமை, உளவியல் பிரச்சினை போன்ற சந்தர்ப்பங்களில் உள்ளெடுக்கின்றனர். பின்னர் இதற்கு அடிமையாகின்ற தன்மையும் இடம்பெறுகின்றது. இந்தப்போதைப் பொருட்களில் மதுபானம், புகையிலை, அபின், கஞ்சா, பான் மசாலா, கெரோயின், எனப்போதை தரும் பலவகையான பொருட்கள் காணப்படுகின்றன.

வரலாற்று ரீதியில் நோக்குமிடத்து போதைப்பொருள் பாவனையானது தொன்றுதொட்டே இருந்து வந்துள்ளதை அறிய முடிகின்றது. சில சந்தர்ப்பங்களில் இவை ஔடதமாகவும் பாவிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் திறந்த பொருளாதாரக்கொள்கை, திரைப்படங்கள், உல்லாசப் பயணிகளின் வருகை என்பன நவீன போதைப் பொருள்கள் நாட்டில் பிரவேசிக்க வழி வகுத்தன. போதைப் பொருளானது வர்த்தகரீதியில் உலகெங்கும் சந்தைப்படுத்தப்படுகின்றது. அனேகமாக சட்டவிரோத கடத்தல்கள் போன்ற வழியில் இவ் வர்த்தகம் இடம்பெறுகின்றது. கூடுதலாக ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற போதிலும் இலங்கையானது வர்த்தக மையத்தில் அமைந்துள்ளதன் காரணத்தினால் இதன் கடத்தல்களுக்கு இலகுவாக அமைந்துள்ளது. அதிலும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் பள்ளி மாணவர்களையும் வளர்ந்து வரும் இளம் சமுதாயத்தையும் இலக்கு வைத்தே இவை கடத்தப்படுகின்றன.

சிறுவர்கள், பெரியோர்கள், பெண்கள், விளையாட்டு வீரர்கள் என வேறுபாடு இன்றி போதைப்பொருள் பாவனைக்கு உள்ளாகின்றனர். போதைப் பொருள் பாவனையானது தனிமனிதன், குடும்பம், சமூகம், நாடு என பல படிகளிலும் பாதிக்கின்றது.

ஒட்டு மொத்தத்தில் மக்கள் சமுதாயத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் உலக அளவில் எழுந்துள்ள சவாலாக இது மாறியுள்ளது. நாட்டில் இன்று வருடம் தோறும் புகைத்தல், மற்றும் மதுபானப் பாவனையால் கிட்டதட்ட நாற்பதாயிரத்திற்கு மேற்பட்டோர் உயிரிழப்பதாகக் கூறப்படுகின்றது. இதனால் 35000த்திற்கு மேற்பட்டோர் விதவைக ளாகக்கப்படுவதுடன் 70000 த்திற்கு மேற்பட்டோர் அநாதைகளாக்கபடுவதாகவும் செய்திகளில் அறிய முடிகிறது.

போதை எனும் அரக்கன் மனிதனை மயக்கத்தில் ஆழ்த்தி விழிப்புணர்வைத் தொலைப்பது மட்டுமன்றி உடல் நலத்தையும் கெடுத்து அழித்து விடும். அதாவது நல்வாழ்விலும் புரிந்து கொள்ளும் தன்மையிலும் திறமையிலும் விளைவை ஏற்படுத்தும். இதன் விளைவாக உடற்சோர்வு, மனத்தளர்வு, தன்னம்பிக்கையின்மை என்பன வளர்ந்து செல்கின்றன.

உலகளாவிய ரீதியில் போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாவனையைக் கட்டுப்படுத்த ஐ.நா நிறுவனமான UNDCP உலகெங்கும் செயற்பட்டு வருகின்றது. அத்துடன் 1987 ஆம் ஆண்டில் இருந்து யூன் 26 ஆம் திகதியை போதைப்பொருள் ஒழிப்பு தினமாகவும் பிரகடனப்படுத்தியும் உள்ளது.

இலங்கையில் போதைப்பொருள் வியாபாரம் மற்றும் கடத்தல் என்பவற்றைக் கட்டுப்படுத்த பல நிறுவனங்கள் இயங்குகின்றன. பொலிஸ் திணைக்களம், சுங்கத்திணைக்களம், போதைப்பொருள் தொடர்பான தேசிய அதிகார சபை, ஆபத்தான ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை என்பன முன்னின்று செயற்படுகின்றன. இதற்கும் மேலாக கௌரவ ஜனாதிபதியின் அதீத அக்கறையுடனும் அவரது நேரடிக் கண்காணிப்பிலும் போதைத்தடுப்பு செயலணிகள் செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களும் போதைப்பொருள் பானையை கட்டுப்படுத்துவதற்காக முன்னின்று செயற்படுகின்றன.

போதை ஒழிப்பை மேற்கொள்ள இளையோர் முதல் பெரியோர் வரை சகலரினதும் ஒத்துழைப்பு அவசியமாகின்றது. போதைப்பொருள் வியாபாரிகளைக் கைது செய்யும் போது பொலிசாரிற்கு முழு ஆதரவையும் வழங்கவேண்டும். போதைப்பொருள் ஒழிப்புக்கு பல சட்டங்கள் மட்டும் இருந்தால் போதுமானது அல்ல. வெறுமனே சட்டங்களால் மட்டும் இதனைக் கட்டுப்படுத்திவிட முடியாதது. எனினும் சட்டங்கள் மறுசீராக்கப்படுவதோடு மேலும் அவை வலுவானவையாக பிணிக்கும் தன்மையுடனும் இருத்தல் வேண்டும். இதன் மூலமே போதைப்பொருள் பாவனையை ஒழித்து வெற்றி கரமாக புதிய போதையற்ற சமூகத்தை உருவாக்க முடியும்.

சமூகத்தின் பங்காளி என்ற வகையில் எதிர்கால சமூகத்தின் ஆரோக்கியத்தின் கரிசனையைக் கருத்திற்கொண்டு போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுபவர்களையும், வியாபாரத்தில் ஈடுபடுபவர்களையும் சட்டம் முன்னிறுத்தி புதிதாக அடிமையாகின்றவர்களையும் அதிலிருந்து விடுவித்து ஆரோக்கியமாக நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து வர வழிகாட்டுவோம். சமூகத்திற்கு பயனுள்ள மாந்தர்களாக அவர்களை மாற்ற முன்னின்று வெற்றிகரமாக உழைப்போம், எதிர்காலத்தைப் பாதுகாப்போம்; வேண்டாம் போதை என நடப்போம்.

போதையைத் தவிர்த்தால் நீயும் புனிதனே.

---

## கலை இலக்கியம், தேசம்

நேச நரம்புகள் சீராகிடில்
பாச வரம்புகளில் வளைவேது?
நாச நினைவே அதுவாகிடில் - எங்கள்
தேச மலரே சருகாகிடும்.

கற்றோர் உயரும் நாடாகிடில்
சொற்சுவை தேனிலும் மேலாகிடும்
கற்றறியா மனிதம் பிணக்கின்றி - மண்ணில்
உற்றாருடன் நேசமாய் வாழ்ந்ததுண்டோ?

கலையெனும் பேராறு பாய்ந்திடில்
நிலையாய்ச் சோகம் சூழ்ந்திடுமோ
மலையது தலைமே லாகிடிலும் - இலக்கியக்
கலையதை கைவிடல் சிறப்பாகுமோ?

இன்பமுந் துன்பமும் விதிப்படி
இன்பமே தனியாவ தெப்படி?
தொலைவினில் துயரதைத் துரத்திட - யாவர்க்கும்
கலை இலக்கியமே முதற்படி.

மனம்போன போக்கெல்லாம் மனிதம்
தினம்போதல் கண்டு நொந்து
நன்நெறி நின்று வாழ – மானிடர்க்குப்
பொன்மொழி யாவது இலக்கியம்.

**சாந்தையூர் வீ. வினிஸ்**

# மாதகல் சைவாலயங்கள்

திரு.க.கனகரத்தினம்
ஆசிரியர்
மாதகல்.

வடக்கேயும் மேற்கேயும் கடலன்னை தழுவி நிற்க, அக இடமெங்கும் கழனிகளில் விளை பயிர்கள் பச்சைப் பட்டாடை போர்த்தி நிற்க, நெய்தலும் மருதமும் மருவி விளங்கும் மாதகல், பாரம்பரிய சைவத்தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்கள் பக்குவாமாகப் பேணிவரப்படும் எழிலார்ந்த கிராமமாகும்.

இங்கு மூன்றில் ஒரு பகுதியினர் கத்தோலிக்கத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும் அவர்களது ஆதி பரம்பரையினர் சைவரேயாவர். ஆக இக்கிராமத்தில் புராதனமான ஆகமவிதிப்பிரகாரம் அமைந்த பல பெரிய ஆலயங்களும் சிற்றாலயங்களாக இருந்து அண்மைக் காலத்தில் வளர்ச்சி கண்ட பல நடுத்தர ஆலயங்களும் அநேக சிற்றாலயங்களும் செறிவாகப் பரந்து காணப்படுகின்றன. இவற்றுள் வருடாந்த மகோற்சவம் நடைபெறும் பெரிய ஆலயங்கள் குறித்து இக்கட்டுரையில் நோக்கப்படுகிறது.

**அரசடி சித்தி விநாயகர் ஆலயம் (மாதகல் பிள்ளையார் கோயில்)**

இவ்வாலயம் மாதகல் மத்தியில் சுற்றிவர மக்கள் குடியிருப்புக்கு நடுவே அமைந்துள்ளது. ஆலய வாசலின் எதிரே அரசமரம் தலவிருட்சமாகக் காணப்படுகின்றது. அதன் அயலில் குருந்தமரமும் ஆலயத்துள் கர்ப்பக்கிரகத்துக்கு வடக்கே வன்னி மரமும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆலயத்தின் வடக்கே அமைந்திருந்த மடத்தில் முற்காலத்தில் மகாபாரதம் போன்ற இதிகாச புராணப்படிப்புக்கள் இடம்பெற்று வந்துள்ளன. இவ்வாலயத்தில் கந்தபுராண படனம் மிக நீண்டகாலமாக இடம்பெற்று வந்துள்ளது. ஆலயத்தின் மேற்கே விக்கினேஸ்வரா வித்தியாசாலையும் சனசமூக நிலையமும் தெற்கே கலையரங்கமும் (1940களில் ஆசிரியகலாசாலை ஒரு வருடமளவில் இயங்கி பின் இடம் மாற்றப்பட்டது) தென்கிழக்கே முன்பு மயில்வாகனப் புலவரால் ஆரம்பிக்கப்பட்டு பின் அமெரிக்கமிஷன் பொறுப்பேற்று மயிலு பள்ளிக்கூடம் என வழங்கிவந்த தற்போதைய சித்திவிநாயகர் முன்பள்ளியும் அமைந்துள்ளன. அக்காலந்தொட்டு ஆலயச்சூழலில் கல்விகலாசார விநாயகப் பெருமானின் திருவருள் பாலிப்பை எடுத்துக்காட்டுகின்றது.

இவ்வாலயத்தில் கொடிக்கம்பம், அதனடியில் ஸ்தம்ப பிள்ளையார், பலிபீடம், மூஷிகம், கர்ப்பக்கிருகத்தில் கணபதி, அதற்கு முன் அர்த்த மண்டபத்தில் சித்திபுத்தி சமேத விநாயகர், மற்றும் நாகதம்பிரான், வைரவர் ஆகியன அமைந்து காணப்படுகின்றன.

ஆலய வருடாந்த மகோற்சவமானது வைகாசி விசாகத்தன்று தேர்த்திருவிழா

இடம்பெறும் வகையில் பதினாறு தினங்களாகும். இறுதி தீர்த்தோற்சவமானது மாதகல் துறைமுகத்தடியில் கோயிலுக்கான தீர்த்த மடத்தில் சமுத்திரக் கரையில் இடம்பெறுகின்றது.

மேலும் மாதந்தோறும் சதுர்த்தி விரதங்கள், விநாயகசஷ்டி இருபத்தொரு தின பெருங்கதை படிப்பு, சிவராத்திரி, வருடப்பிறப்பு, திருவெம்பாவை (பத்துத்தினங்கள்) போன்ற சிறப்புப் பூஜை வழிபாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

ஆலயத்தினை பரம்பரை உரிமையாளரான தர்மகர்த்தாவும் பிரதம குருக்கள் ஐயாவும் இணைந்து சிறப்புற பரிபாலித்து வருகின்றனர்.

தற்போது ஆலயத்தின் கட்டடங்கள் அவசியம் புனரமைக்கப்பட வேண்டிய நிலையை அடைந்துள்ளதால் விநாயகப் பெருமானின் திருவருட் பிரகாரம் பாலஸ்தாபம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**சாந்த நாயகி சமேத சந்திரமௌலீசர் ஆலயம் (மாதகல் சிவன்கோயில்)**

மாதகல் மேற்கு நுணசையில் முருகன் ஆலயத்தின் வடகிழக்கே இச் சிவாலயம் அமைந்துள்ளது. கர்ப்பக்கிருகத்தில் சிவலிங்கப் பெருமான் அமர்ந்து திருவருள் பாலிக்கின்றார். ஆலய பரம்பரை உரிமையாளர்களான அந்தண சிவாச்சாரியர்களாலேயே நித்திய நைமித்திய பூஜைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மிக நீண்டகாலமாக மிகப் பழமையான தோற்றத்துடன் காணப்பட்டுவந்த இவ்வாலயம் அண்மைக்காலங்களில் சிவனின் திருவருள் கூடிவர சிவ அன்பர்கள் சிலரும் சிவாச்சாரியாரும் இணைந்து மேற்கொண்ட அயரா முயற்சியால் படிப்படியாகப் புனரமைக்கப்பட்டு சிறப்புற்று இவ்வாண்டு ஆலயத்தினதும் கிராமத்தினதும் மற்றும் பிரதேசத்தினதும் ஒரு வரலாற்றுப் பதிவாகவும் சமகாலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் சைவ மக்களின் (ஆன்மாக்களின்) கிடைத்தற்கரிய ஆன்மீகப் பேறாகவும் சாந்த நாயகி சமேத சந்திர மௌலீசப் பெருமானின் முதலாவது மகோற்சவம் இடம்பெற்றுள்ளது.

மாசி தினத்தன்று மாதகல் துறைமுகக் கடலில் பெருமான் தேவியுடன் படகில் சென்று ஆழ்கடலில் தீர்த்தமாடும் தீர்த்தோற்றசவத்தை பத்தாம் நாளாகக் கொண்டு சிவனின் மாசிமக மகோற்சவ விழாக்கள் நடைபெறுகின்றன. தினந்தினம் விஷேட சிறப்பு உற்சவங்கள் ஒழுங்கு செய்யப்படுவது வழமை. அதுவும் திருப்பணி வேலைகள் முழுமைபெறாது வசதிகள் மிகவும் குறைந்த நிலையிலும் விழாக்கள் சிறப்புற இடம்பெற்றமையானது சிவனின் அதியர் திருவருள் வெளிப்பாடேயாகும்.

தற்போது இவ்வாலயத்தின் கொடித்தம்பம் (புதியது), பலிபீடம், நந்தி, மூலவர் சிவலிங்கம், கர்ப்பக்கிருக வெளிப்புறம், தெற்கு நோக்கிய தட்சணாமூர்த்தி, அர்த்தமண்டபத்தில் தெற்கு நோக்கி அம்மன், நடேசர் மற்றும் உற்சவ மூர்த்திகள், மற்றும்

விநாயகர், சண்டேஸ்வரர், நவக்கிரகங்கள், நாகதம்பிரான், வைரவர் போன்ற பரிவார மூர்த்திகளும் அமைந்துள்ள காணப்படுகின்றன.

மகோற்சவத்துக்குப் புறம்பாக மாதாந்த பிரதோச விரதம், சோமவார விரதம், சிவராத்திரி விரதம், புரட்டாதி சனி விரதம், திருவெம்பாவை முதலான விஷேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

இச் சிவாலயத்தில் இன்னும் பாரிய அடிப்படைத் திருப்பணி வேலைகள் காத்திருக்கின்றன. அன்பார்கள் அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சிவனின் திருவருட் பேற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**பாணாக வெட்டி புவனேஸ்வரி அம்மன் ஆலயம் (பாணாவெட்டி அம்மன் கோயில்)**

மாதகல் ஆலயங்களுள் மிக முற்படத் தோன்றியதாகக் கருதப்படுவதும் பண்டத்தரிப்பு மாதகல் பிரதான வீதியால் மாதகல் கிராமத்துள் பிரவேசிக்கும் அனைவருக்கும் வயல் வெளியூடே கோபுரம் தேர்முட்டி சகிதம் கம்பீரமாக முற்படத் தோன்றி வரவேற்பது போலக்காட்சி தருவதும் இத்தாயின் ஆலயமாகும்.

கஜபாகு மன்னன் மாதகல் சம்பல் துறையில் வந்திறங்கி கண்டிக்கு செல்கையில் கண்ணகி சிலையுடன் தரித்து (தங்கிச் சென்றதாகவும் அவ்விடத்தில் கண்ணகி அம்மன் ஆலயம் உருவானதாகவும் கூறப்படுகிறது. இதை விட சம்பில் துறையில் காணப்பட்டிருந்த சம்புலிங்கேஸ்வரர் ஆலயம் 1820 ஆம் ஆண்டு கடற்கோளால் அழிவுற அங்கிருந்த சிவன் (சிவலிங்கம்) பிரதிட்டை செய்யப்பட்டு சாத்தாவோலை சிவன் ஆலயம் உருவாக்கப்பட்டதென்றும் அங்கிருந்த உமாதேவியாரின் சிலை மாதகல் பாணாக வெட்டி அம்மன் கோயிலில் வைக்கப்பட்டது என்றும் ஐதிகம் உண்டு. மதகல் மேற்கு ஐயனார் கோவிலூடாக ஐயனார் பரிகலம் இவ் அம்மன் (முனியப்பர்) ஆலயத்திற்கும் சம்பில் துறைக்கும் இடையே நள்ளிரவு வேளைகளில் தீவட்டி வெளிச்ச சேமக்கலத்துடன் ஓசைகளுடன் பயணிப்பதாகவும் முற்காலங்களில் அவ்வறிகுறியை சிலர் கண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஆறுமுகநாவலர் காலத்தில் மூலஸ்தானத்திலிருந்த கண்ணகிசிலை அகற்றப்பட்டு புவனேஸ்வரி அம்மன் ஸ்தாபிக்கப்பட்டது. கண்ணகிசிலை ஆலயத்தின் வெளிப்புறம் தென்மேற்கே கோயிலை ஒட்டியவாறு வடக்கு நோக்கி பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. பக்தர் ஒருவரின் அருள் வாக்குப்படி பாணாகவெட்டிக் குளத்துள் இருந்து எடுக்கப்பட முந்தைய ஒரு சிலையும் இங்கே பிரதிஸ்டை செய்யப்பட்டு இரு சிலைகள் காணப்படுகின்றன.

ஆலயத்தின் சற்று தென்மேற்கே முனியப்பருக்கான சிற்றாலயமும் தனியாக அமைந்துள்ளது.

ஆலயத்துள் தம்பப்பிள்ளையார், பலிபீடம், நந்தி, மூலஸ்தானத்தில் புவனேஸ்வரி அம்பாள், அர்த்தமண்டபத்தில் தெற்கு நோக்கி கண்ணகி முதலான உற்சவ மூர்த்திகள் மற்றும் பின்புறம் விநாயகர், கிருஷ்ணர், இலக்குமி, முருகன், வசந்தமண்டபத்துக்குப் பக்கத்தில் சிவகாமி அம்மை சமதே நடேசப் பெருமான், நவக்கிரகங்கள், வைரவர், சண்டேஸ்வர மூர்த்தங்களும் அமைந்துள்ளன. பிரதான வீதியருகில் அழகான நுழைவாயிலும் அம்மன் சிலையும் அமைக்கப்பட்டுள்ளன.

பரம்பரை உரிமையாளரான தர்மகர்த்தாவும் அம்பாள் அன்பர்கள் சிலரும் இணைந்த சபை மூலம் திருப்பணிகள் மற்றும் ஆக்கப்பணிகள் தொடர்கின்றன. பரம்பரை அந்தண சிவாச்சாரியாரால் நித்திய நைமித்திய பூஜைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வருடாந்த மகோற்சவம், பன்னிரண்டு தினங்களாகும் பங்குனி உத்தர தினத்தன்று தீர்த்தேற்சவம் (ஆலயத்துள், தேர்த்திருவிழாவன்று அபிஷேக கிணற்றில்) நடைபெறுகிறது. தேர்த்திருவிழா, அன்று முற்காலத்தில் பறைமேளம் அடிக்கப்படுவது வழக்கம் தற்போது நின்றுவிட்டது. பொங்கல் இடம்பெற்று வருகின்றது.

மேலும் தைப்பூசம், மாசிமகம், பங்குனித்திங்கள், ஆனி உத்தரம், ஆடிச்செவ்வாய், ஆடிப்பூரம், ஆவணி மூலம், நவராத்திரி, கேதாரகௌரி விரதம், திருவெம்பாவை முதலான விஷேட விரத விழக்களும் சிறப்பாக நடைபெறுகின்றன.

**நுணசை முருகன் ஆலயம்**

மாதகல் மேற்கில் நுணா மரங்கள் செறிந்து காணப்பட்டதன் காரணமாகவோ? அன்றி நுண் + அசை நுட்பமான அதிர்வு (அசைவு) ஞானவேற் பெருமானின் அருளதிர்வு உணரப்படும் இடமாக அமைந்த காரணமாகவோ? நுணசை எனப்படும் பதியதனில், நெல்வயற் சூழலில், கலியுகவரதனாம் கந்தன் வீற்றிருக்கின்றார். மாதகல் கிராமத்தின் மகிமையும் பிரபல்யமும் மிக்க முக்கிய ஆலயமாக இது விளங்குகின்றது.

ஆதியில், செங்கடம்ப விருட்சம், அருகே ஆழம் அறியப்படா ஏழு ஊற்றுக் குழிகள் கொண்ட புனித தாமரைத் தீர்த்தத் தடாகம், அருகில் வேல் வைத்து பொங்கல் மற்றும் வழிபாடுகள் இடம்பெற்று வந்துள்ளன. பிற்காலத்தில் வேறாக கோவில் கட்டப்பட்டு வேல் பிரதிஸ்டை செய்யப்பட்டது. முதலிலே ஆதரிக்கப்பட்டு வந்த கடம்பும் வேலும் அமைந்த புனித வழிபாட்டிடம் (கடம்பவேல்) முதலியார் என அழைக்கப்படலாயிற்று.

சம்பில் துறையருக்கே அமைந்து காணப்பட்ட சம்பு லிங்கேஸ்வரராலயம் கடற்கோளால் அழிந்துபோக அக் கற்கள் பயன்படுத்தப்பட்டு இம் முருகன் ஆலயம் கட்டப்பட்டதாகவும் ஐதீகம். இவ்வாலயத்தின் உற்சவமூர்த்தியாக விளங்கும் முத்துக்குமார சுவாமியை ஒரு சன்னியாசி கொண்டு வந்து கொடுத்தாகவும் கூறப்படுகின்றது. கடம்பமரத்தடியில் வடபுறம் அமைந்துள்ளது. அவரது சமாதியே அது என்றும் கூறப்படுகின்றது.

காவடி அப்பா என அழைக்கப்பட்ட அடியவர் தமது தீராத தொய்வுநோய் தீர நேர்த்தி வைத்து காவடிதூக்கி அயற்கிராமங்களுக்கும் சென்று பிடியரிசி பெற்றுவந்து (நோய்தீரப்பெற்று) இறுதிவரை திருப்பணித் தொண்டுகள் புரிந்து வந்தார். இவரது சமாதி ஆலயத்தின் வடகிழக்கே அரசமரத்தடியில் அமைந்துள்ளது.

இவ்வாறு முருகனிடம் நேர்த்தி வைத்து வேண்டுதல்களை நிறைவேற்ற பெற்றமையும் அவனது அருளாட்சிக்காட்பட்ட அருளாளர் மற்றும் தொண்டர்கள் பற்றியதான வரலாறுகள் பலவும் உண்டு.

அழகொழுகவமைந்த மேல் விதானங்களோடு கூடிய மண்டபங்களும் இராஜகோபுரமும் வாயில் வளைவு முகப்பில் நந்தவனமும் அன்னதான மடங்களும் வெளிவீதி விஸ்தரிப்பும் தீர்த்த மண்டபமும் என ஆலயம் எழிலோங்க காட்சி தருகின்றது. பரம்பரை பம்பரையாக ஆலய தர்மகார்த்தாமாரும் முருக பக்த வள்ளல்களும் ஆலய வளர்ச்சியில் காட்டிவரும் ஆர்வம் வெளிப்படை. உலகெங்கும் வாழும் மாதகல் மக்களை வசிகரித்து நிற்கும் முருகனின் வருடாந்த மகோற்சவம் சித்திரா பூரணைத் தீர்த்தோற்றசவத்துடனான பன்னிரு தினங்களாகும். தேர்த்திருவிழாவன்று காவடிகள், மற்றும் தீமிதிப்பு, அருச்சனைகள் என மக்கள் வெள்ளம் அலைமோதும்.

ஆலயத்துள் கொடித்தம்பம், பலிபீடம், மயூரம், மூலஸ்தான வேற்பெருமான், அர்த்தமண்டபத்தே தெற்கு நோக்கிய ஆறுமுகசுவாமி மற்றும் உற்சவமூர்த்தங்கள், ஸ்நபன மண்டபத்தில் தென்புறம் பழனி முருகனும் வடபுறம் முத்துக்குமார சுவாமியும் விநாயகர், சண்டேசுரர், நாகதம்பிரான், வைரவர் முதலான மூர்த்தங்களும் அமைந்துள்ளன.

மகோற்சவத்திற்குப் புறம்பாக மாதாந்த திருக்கார்த்திகை, ஐப்பசி வெள்ளி, கந்தசஷ்டி, மற்றும் தைப்பூசம், மகாசிவாராத்திரி, வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், கதிர்காமத் திருவிழா, திருக்கார்த்திகை விளக்கீடு, திருவெம்பாவை போன்ற விசேட பூஜை நிகழ்வுகள் உள்ளிட்ட நித்திய நைமித்திய பூஜை வழிபாடுகள் ஆலய சிவாச்சாரியாரால் சிறப்புற மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புராண படன பௌராணிகர் பரம்பரையொன்று தொடரும் வகையில் வருடாந்தம் இவ்வாலயத்தில் வைகாசி விசாகம் தொடங்கி ஆடித் திருவோணம் (பெரியபூசை) ஈறாக கந்தபுராண படனம் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

Virus Inuvil 021 224 1815